# ஊமையன் கோட்டை

கவிஞர் கண்ணதாசன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : அக்டோபர், 1979
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1982
மூன்றாம் பதிப்பு : ஜூன், 1989
நான்காம் பதிப்பு : அக்டோபர், 1991
ஐந்தாம் பதிப்பு : டிசம்பர், 1993
ஆறாம் பதிப்பு : ஜூன், 1997

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 28.00

| | | |
|---|---|---|
| TITLE | : | OOMAIYAN KOTTAI |
| AUTHOR | : | KAVIGNAR KANNADHASAN |
| EDITION | : | SIXTH EDITION, JUNE 1997 |
| PAGES | : | 168 |
| PUBLISHED BY | : | **VANATHI PATHIPPAKAM**<br>13, Deenadayalu Street,<br>T.Nagar, Chennai - 600 017. |
| PRICE | : | Rs. **28.00** |

Printed at PS.SP. Meyappan & Co., Chennai - 17. ✆ : 8251093

27630
4422707

NEPC

# கதைக் குறிப்பு

சரித்திரம் வேடிக்கையான ஒரு கதைக்கோவை. இந்தக்கதை கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாளுக்குப் பதினைந்து மாதங்களுக்குப் பிறகு ஆரம்பமாகிறது.

ஊமைத்துரையே இந்தக் கதையின் நடுநாயகம்.

கட்டபொம்மனை வெறுக்கின்றவர்கள்கூட ஊமைத் துரையை மதிப்பது வெளிப்படை. ஊமைத்துரையை விடுவிப்பதற்கு ஏராளமான இளைஞர்கள் முயன்றார்கள் என்ற வரலாற்றைப் படிப்பவர்கள் ஊமைத்துரையையும் கொள்ளைக்காரனாக மதிப்பிட்டுவிட முடியாது. ஒரு கொள்ளைக்காரனுக்கு இவ்வளவு பொது மக்கள் ஆதரவு கிடைத்திருக்க நியாயமில்லை. ஆகவே, என் கதைக்கு நடு நாயகமாக நான் எடுத்துக்கொண்ட பாத்திரம் மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தலைவனாகும்.

அந்தத் தலைவனையும், அவன் புதிதாக எழுப்பிய கோட்டையையும் சுற்றித்தான் என் கதை பின்னப்படிருக் கிறது என்றாலும், வெறும் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந் ததைக் கூறி முடித்துவிட்டால், கதை அங்கமே இல்லாமல் போய்விடும். மேலைநாட்டுப் பெருங்கதை ஆசிரியர்கள் வழியில், சரித்திரத் தலைவனை மையமாக வைத்துக் கொண்டு புதிய பாத்திரங்களைப் பின்னியிருக்கிறேன்.

இனி கட்டபொம்மனைச் சுடுகாட்டில் சந்தித்துவிட்டு, பதினைந்து மாதங்களைக் கடந்து நடப்போம்...

—கண்ணதாசன்

# கோட்டை வாசலில்...

1958-ம் ஆம் ஆண்டு நான் ஒரு படம்எடுக்க விரும்பி
னேன். அந்தக் காலத்தில் சரித்திரக் கதைகளுக்கு மார்க்
கெட் இருந்ததால், ஒரு சரித்திரக் கதையைத் தேர்ந்தெடுத்
தேன்.

ஆதாரபூர்வமான சரித்திரப் பின்னணியோடு,
கற்பனை கலந்து பிடிக்கப்பட்ட பிண்டமே இந்த
'ஊமையன் கோட்டை.

சில பாத்திரங்களைத் தவிர பாக்கி அனைத்துமே
வரலாற்றுப் பாத்திரங்கள்.

திரைக்கதையாக இது எழுதப்பட்டபோது அதன்
வெற்றியில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்
தது ஆனால், சில காரணங்களினால் அந்தப் படம் நின்று
விட்டது. பிறகு, இதனை 'தென்ற'லில் தொடர்கதையாக
எழுதினேன். முக்காலே அரைக்கால் பகுதி முடிந்த பிறகு
'தென்றல்' கைமாறிய காரணத்தால் இரண்டு அத்தியா
யங்கள் மட்டும் எழுதப்படாமல் நின்று போயின.

இருபது வருஷங்களுக்குப் பிறகு அந்தக் கடைசி
இரண்டு அத்தியாயங்களை எழுதி முடித்தேன்.

இதில் உள்ளது போன்ற ஒரு நடை இப்பொழுதுகூட
எனக்கு வருமா என்பது சந்தேகமே. உணர்ச்சி வெள்ளம்
கரை புரண்டு ஓடிய காலத்தில் எழுதப்பட்டது அது.

ஊமைத்துரை வரலாற்றிலும் மருது சகோதரர்கள்
வரலாற்றிலும் எனக்குள்ள ஈடுபாடு இதில் விளங்கும்.

தஞ்சை சரஸ்வதி மகாலில் இருந்து 'சிவகங்கை
சரித்திரக் கும்மி' வாங்கினேன். எஸ்.ஏ.பி.யைச் சேர்ந்த
முக்குலத்தோர் ஒருவர் சில ஏட்டுப் பிரதிகளை எனக்குக்
கொடுத்தார். சிவகங்கைச் சீமை சம்பந்தமாக, சிவகங்
கையைச் சுற்றியுள்ள 'பெல்ட்' முழுவதிலும் நானும்
டைரக்டர் சங்கரும் சுற்றுப்பயணம் செய்தோம்.

இந்தக் கதையும் வரலாறும் அழுத்தமாக இருப்ப
தற்குக் காரணம் இவ்வளவு முயற்சி எடுத்துக்
கொண்டதுதான்.

இவ்வளவு காலம் இதனைத் தொகுத்து வைத்திருந்த
தம்பி இராம, கண்ணப்பனுக்கும் வழக்கம்போல் அழகாக
வெளியிட்ட வானதி பதிப்பகம் திருநாவுக்கரசுவுக்கும் என்
நன்றி.

சென்னை
1-10-79

—கண்ணதாசன்

27630

# ஊமையன் கோட்டை

## 1. பள்ளி எழுச்சி

---

திருநெல்வேலிச் சீமையில் மணியாச்சி என்றொரு குறுநிலம். அதில் இருந்து மூன்று கல் தொலைவில் ஒட்ட நத்தம் என்றொரு குக்கிராமம்.

கரிசல் காடுகளே நிறைந்த பூமி இது. பருத்தியும் பாசிப்பயறும் அந்தக் கிராமத்தில் முக்கியப் பொருள்கள்; பூமியெல்லாம் கூழாங்கற்கள்; கரிசல் காட்டின் இடையிடையே வேலா மரங்கள்.

கிராமத்திற்குள் நுழைந்ததும் முதன் முதலாகத் தென்படுவது, ஆறடி உயரத்தில் செங்குத்தாகக் கட்டப்பட்ட ஒரு சமாதி. கணவனோடு உடன்கட்டை ஏறிய ஒரு நாயக்கப் பெண்ணின் சமாதி அது. முத்தம்மாள் என்ற அந்தப் பெண்ணை 'முத்துமாரி அம்மன்' என்று ஒட்ட நத்தம் வணங்கும்.

கிராமத்தைச் சுற்றிலும் மிகப் பெரிய அகழி, இடையிலே சுமார் இருநூறு அடி மட்டும் சுற்றளவுள்ள ஒரு சிறு கோட்டை.

அதைச் சுற்றிலும் சோளத் தட்டைகளால் வேயப் பெற்ற குடிசைகள். இரண்டொரு மாடி வீடுகள்.

கோட்டையின் வலப்புறத்தில் ஒரு கேணி. ஊர்ப் பொதுக்கேணி அது. பனை ஓலையால் வாளி செய்து ஊர்ப்பெண்கள் அந்தக் கேணியிலே தண்ணீர் எடுப் பார்கள். மலர்க்கொடிகள் இல்லாவிட்டாலும், பசுமை நிறைந்த நெல் வயல்களைக் காண முடியாவிட்டாலும், அந்தக் கரிசல் காட்டுப் பூமி, வளம் நிறைந்த கழனி யாகவே காட்சி தந்தது.

1801-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் தேதி...

இரவு மணி ஏழு இருக்கும்.

ஒட்டநத்தத்தின் தெருக்களிலே கல்தூண் விளக்குகள் மின்னிக்கொண்டு இருந்தன. என்றைக்கும் இல்லாத வண்ணம் அந்தக் கிராமத்தில் ஆட்கள் முன்னும் பின்னும் போய் வந்துகொண்டு இருந்தார்கள்.

கயத்தாற்றிலே கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு ஏறக்குறைய பதினைந்து மாதம் முடிந்திருந்ததால், நாயக்க வம்சத்தினரின் நடமாட்டங்களை ஒற்றர்கள் கண்காணிப்பது அறவே இல்லாமல் இருந்தது. திருநெல் வேலிச் சீமையில் தெளிவான சூழ்நிலை நிலவுவதாகவே கும்பினியார் கருதிக்கொண்டு இருந்தார்கள். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையிருந்த இடத்தில் வெறும் முட்புதர் களே நிறைந்திருந்தன. இருந்தும், வாலிபர்களது உள்ளங் களில் கோபமும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருந்தன. அவர் களில் ஒரு பகுதியினர்தான் அன்று ஒட்டநத்தத்தில் கூடி, வெள்ளையருக்கு எதிராக ஒரு முடிவு எடுக்கத் திட்ட மிட்டு இருந்தனர்.

பாளையங்கோட்டைச் சிறையில் பதினைந்து மாத காலமாக வாடிக்கொண்டு இருக்கும் ஊமைத்துரையை யும், அவன் தம்பி சிவத்தையாவையும் விடுவிக்க விழைந்தனர்.



மணி எட்டு இருக்கும்!

அங்குமிங்குமாக உலவிக் கொண்டு இருந்த இளைஞர்கள், கிராமத்தின் மையப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர். ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டனர். எதிரிகளுக்கு உளவு சொல்வோர் யாரேனும் தங்களோடு கலந்துவிடக்கூடாதே என்பதில் அவர்கள் நிதானமாக இருந்தனர்.

அவர்களுக்கெல்லாம் தலைவன்போல் இருந்தான் ஓர் இளைஞன். உயர்ந்த உருவம்; பரந்த மார்பு; திரண்ட தோள்கள்; துடிக்கும் அரும்பு மீசை; பரபரப்பான தோற்றம்.

அந்த இளைஞன் பெயர் வீரத்தேவன். சிவகெங்கை மறவர் குடியிலே பிறந்தவன். அவனுடைய தந்தை இராமலிங்கத்தேவர், கட்டபொம்மனுக்கு வலக்கரமாக விளங்கியவர். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், வெள்ளையர்களால் கொன்று மறைக்கப்பட்டவர்களில் வீரத்தேவனின் தந்தை இராமலிங்கத தேவரும் ஒருவர்.

நாட்டு விடுதலையில் ஆர்வமும், தந்தையைக் கொன்ற வர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்ச்சியும், ஊமைத்துரையிடம் உள்ள அன்பும் சேர்ந்து வீரத் தேவனை இந்தக் காரியத்தில் ஈடுபடத் தூண்டின.

இராமநாதபுரம் 'இராமலிங்க விலாச'த்தில் கட்டபொம்மனுக்கும், வெள்ளையருக்கும் தகராறு நேர்ந்த காலத்தில் இருந்து ஊமைத்துரையோடு வீரத் தேவனுக்குப் பழக்கம் உண்டு. இராமலிங்கத் தேவர், கட்டபொம்மனுக்கு உயிர் தோழராக விளங்கியது போல், வீரத்தேவன் ஊமைத்துரைக்கு உயிர்த் தோழனாக விளங்கினான்.

வாலிபர்கள் எல்லோரும் அமைதியாக அமர்ந்தனர். ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், சின்ன வேட்டூர்

நாயக்கர், குளத்தூர், காடல்குடி பாளையக்காரர்களின் பிரதிநிதிகள் ஆகிய முதியவர்களும் அந்தக் கூட்டத்தில் நீண்ட நாற்காலி போட்டு அமர்ந்து இருந்தனர்.

ஊர்ப் பெண்கள் எல்லோரும் அங்கு நடப்பதைக் கவனிப்பதற்காக ஒரு புறத்திலே கூடியிருந்தனர். கூட்டத்திற்கு எதிரே மூன்று கல்தூண் விளக்குகள் அருகருகாக அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றை மையமாகக் கொண்டு, ஒரு மேடை எழுப்பப்பட்டு இருந்தது.

வீரத்தேவன் அந்த மேடைமீது ஏறி நின்று கொண்டான். நாற்காலியில் அமர்ந்திருந்த பெரியவர்களை ஒரு முறை பார்த்து மவுனம் சாதித்தான்.

உடனே ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், ''சும்மா சொல்ல வேண்டியதைச்சொல்லு தம்பி. நீ சொல்றதையே நாங்களும் முடிவா வச்சுக்கிறோம்'' என்றார்.

வீரத்தேவன் பேச ஆரம்பித்தான் :

''என் சகோதரர்களே பெரியோர்களே ! கடந்த பதினைந்து மாத காலமாக ஊமைச்சாமியும், சிவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையில் கிடந்து அலதிப் படுகிறார்கள். ஒரு தலைவனுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான மரியாதைகூடச் சிறைச்சாலையில் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இனி எதிர்ப்பே இருக்காது என்கிற முடிவுக்கு வெள்ளைக்காரர்கள் வந்திருக்கிறார்கள். வெள்ளைக்காரர்களுடைய நேரடி ஒற்றர்கள் ஓய்ந்துவிட்டாலும், எட்டயபுரம் நாயக்கரும், ஊத்துக்குளிக்காரரும் தங்கள் ஒற்றர்களை எச்சரிக்கை செய்துகொண்டே இருக்கிறார்கள். இந்த நேரத்தில் எப்படிப் புரட்சிகரமாகச் செயல்படுவது என்பதை முடிவு கட்டவே நாம் இங்கு கூடியுள்ளோம்.



''கடந்த எட்டு ஆண்டுகளில், நம்மிலே பல குடும்பங்கள் போரிலே தலைவர்களை இழந்துவிட்டன. இறந்துபோனவர்களின் எண்ணிக்கையிலே நாமும் சேர வேண்டியிருக்கும் என்ற முடிவோடுதான் இந்தக் காரியத்தில் நாம் ஈடுபட வேண்டும்.

''சந்தர்ப்ப வசமாக, சூழ்நிலை நமக்குச் சாதகமாக இருக்கிறது. கயத்தாறிலும், சங்கரநயினார் கோயிலிலும், பாளையங்கோட்டையிலும் மட்டுமே வெள்ளைக்காரர்களுடைய சிறுசிறு படைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. மேஜர் மெக்காலே மிகுந்த நம்பிக்கையோடு ஏராளமான வெள்ளைப் பட்டாளங்களைத் திருச்சிக்கு அழைத்துக் கொண்டு விட்டான். இப்போது நம்முடைய எண்ணிக்கையைவிட வெள்ளைக்காரப் படைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆகவே, துணிந்து பாளையங்கோட்டைச் சிறைச்சாலையைத் தாக்கினால் ஊமைச்சாமியையும், சிவத்தையாவையும் விடுதலை செய்துவிட முடியும்.

''பொம்மு நாயக்கர். வெள்ளைக்காரர்களோடு பொருதியபோது, சில பாளையக்காரர்களை ஒன்று சேர்ப்பதில் நாம் பின்தங்கிவிட்டோம். இப்போது எட்டயபுரத்தில் இருக்கின்ற சில இளைஞர்களே நம்மோடு சேருவதில் அக்கறை காட்டுகிறார்கள். புதுக்கோட்டை தொண்டைமான்களின் பங்காளிகளை எல்லாம் பதினைந்து நாள்களுக்கு முன்னால் நான் சந்தித்தேன். அவர்கள் நேரடியாக இதில் ஈடுபடுவதற்குப் பயப்பட்டாலும், பொருளுதவி செய்வதாக வாக்களித்து இருக்கிறார்கள்.

''சிவகெங்கை ராஜா வெள்ளைமருது சேர்வைக்காரரும், அவர் தம்பி சின்ன மருது சேர்வைக்காரரும் கும்பினியாருக்குக் குத்தகைப் பணம் கொடுத்துக் கொண்டிருந்தபோதிலும், நமக்கு வேண்டிய உதவிகளை மறைமுகமாகச் செய்யக்கூடும்.

"ஆனால், சிறையை உடைப்பதற்கு மருது சேர்வை யின் உதவியைப் பெற வேண்டாம் என்று நான் கருது இரேன். காரணம், ஊமைச்சாமி விடுதலையானதும் மறு படியும் மருது சேர்வையின் உதவியையே நாட வேண்டி யிருக்கும். சின்னமருது சேர்வை இதில் அதிக அக்கறை காட்டினாலும் வெள்ளை மருது சேர்வைக்குக் கொஞ்சம் பயம் இருக்கிறது. சிவகெங்கையில் இப்போது நிலவும் அமைதியைக் கெடுக்க அவர் விரும்பவில்லை. அதனால் விடுதலைக்குப் பிறகு ஆகவேண்டிய காரியங்களுக்கு மட்டுமே அவர்கள் உதவியை நாடலாம் என்று நான் நினைக்கிறேன். இல்லை, இப்பொழுதே அந்த உதவி தேவை என்று நீங்கள் நினைத்தாலும் சிவகெங்கைக்கு நானே போய்வரச் சித்தமாயிருக்கிறேன்!"

வீரத்தேவன் இப்படிக் கூறிவிட்டு மற்றவர்களின் கருத்தை அறிவதற்காகச் சற்று மவுனம் சாதித்தான். உடனே சின்ன வேட்டூர் நாயக்கர் எழுந்து, "சிறையை உடைப்பதற்கு சேர்வைக்காரரைத் தொல்லை செய்ய வேண்டாம்; ஊமைத்துரை வெளியில் வந்ததும் சிவ கங்கையின் உதவியை எப்படிப் பெறுவது, எந்தக் காரியத் துக்காகப் பெறுவது என்பதை முடிவு கட்டிக்கொள்ள லாம். ஏழாயிரம் பண்ணையில் இருந்தும், குளத்தூரில் இருந்தும், காடல்குடியில் இருந்தும் குறைந்தது பதினை யாயிரம் பேரையாவது பாளையங்கோட்டைக்குத் திரட்டி வர என்னால் முடியும்" என்றார்.

கூட்டத்தில் இருந்த வாலிபர்கள் கைதட்டி அதை வரவேற்றார்கள். உடனே சுப்பா நாயக்கர் பயம் நிறைந்தவராய், "யாரும் கை தட்டாதீர்கள்" என்று எச்சரித்தார்.

வீரத்தேவன் மேலும் பேசினான்:

"பொதுவில் மறவர் மக்களின் உதவியை எந்த நேரத்திலும் பெற்றுத்தர என்னால் முடியும். மறவர் களுக்கும், கம்பளத்தாருக்கும் இடையே பழைய விரோத



பாவங்கள் எதுவும் இப்போது இல்லை. ஆகவே குறைந்தது இருபது நாட்களுக்குள் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்தெறிவதில் நாம் அக்கறை காட்ட வேண்டும்.

"கும்பாடியில், சுப்பிரமணிய நாயக்கர் தலைமையில் நடந்த கூட்டத்திலும், சில்லாங்குளத்தில் நடந்த கூட்டத்திலும் நாம் பேசிக்கொண்டபடி, பாளையங்கோட்டையில் சந்தை நடக்கும் தினத்தில், பல்வேறு வகையான வியாபாரிகளைப் போல் ஆயுதங்களை மறைத்துக்கொண்டு, பாளையங்கோட்டைச் சிறைக்கு எதிரே கூட வேண்டும். நம் அருமைச் சகோதரர் சிங்கத்தேவர் இதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து தருவார். ஊமைத்துரைச்சாமிக்கு உயிருக்கு உயிராய் விளங்கும் அவர், இன்னும் இங்கு வந்து சேராததுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது!"

வீரத்தேவன் இப்படிச் சொன்னதும், கூட்டத்தில் 'கசமுச' என்னும் சத்தம் எழுந்தது. ஒவ்வொருவரும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். சிங்கத்தேவர் ஏன் வரவில்லை என்ற கேள்விக்குறி அவர்கள் முகத்தில் படர்ந்தது. வந்துவிடக்கூடும் என்ற ஆவலில், சிலர் பாதையையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களது ஆர்வத்தைக் கவனித்த வீரத்தேவன், மேலும் பேசினான்:

"ஒரு வேளை பாளையங்கோட்டையில் சிங்கத்தேவருக்கு அலுவல்கள் இருக்கலாம். அங்கேயிருந்து கொண்டு அவர் இந்தக் காரியங்களைத்தான் கவனிப்பார். எதற்கும் இன்னும் பதினேழு நாள்களில் பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதியன்று— நீங்கள் எல்லோரும் காலையிலேயே பாளையங்கோட்டைக்கு வந்துவிட வேண்டும். ஒவ்வொருவரும் சிங்கத்தேவர் வீட்டிற்குப் போய், எத்தனை மணிக்கு, என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு, சிறைச்சாலை அருகில் போவது நலம்.

அதற்கு இடையில் இனி நாம் சந்திக்கப் போவதில்லை. இந்தக் கூட்டத்தையே கடைசிக் கூட்டமாகக் கருதுங்கள். அடுத்து, செயல்தான்; கவனம் இருக்கட்டும். பிப்ரவரி 2-ந் தேதி, இதே தை மாதம் 20-ந் தேதி நாமெல்லாம் பாளையங்கோட்டையில் சந்திக்கிறோம்.

''அதற்கு இடையில், யாரும எதைப்பற்றியும் மூச்சு விடக்கூடாது. எதிரிகள் வெள்ளைக்காரர்கள் மட்டுமல்ல; தம் அருகிலேயே பலர் இருக்கிறார்கள். இந்தக் காரியம் முடியும் வரை, இதைப்பற்றிக் குடும்பத்தில் கூடப் பேசாமல் இருப்பது நல்லது. வணக்கம்.''

வீரத்தேவன் பேசி முடித்துவிட்டு இறங்கினான்.

இளைஞர்கள் எல்லோரும் எழுந்தார்கள். பெண்களெல்லாம் தம் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

ஒட்டநத்தத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் சிலருக்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவரவர்கள் அந்தந்த வீடுகளுக்குச் சென்றார்கள் சில இளைஞர்கள் குளத்தூராரையும், காடல்குடியாரையும் சூழ்ந்துகொண்டு தங்கள் ஆவேச உணர்ச்சிகளை அள்ளித் தெளித்தனர். எழுபது வயதை எட்டிப்பிடித்த குளத்தூராரும் ஓர் இளைஞராகவே அப்பொழுது காணப்பட்டார். குளத்தூராருக்கும், காட்டல்குடியாருக்கும் சுப்பா நாயக்கர் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவர்கள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சில இளைஞர்களுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அகழிக்கரை ஓரமாகப் போய் உட்கார்ந்து, பாளையங் கோட்டையில் செய்யப்போகின்ற செயல்கள் பற்றிப் பேச ஆரம்பித்தனர். அதில் பொம்மையா என்றோர் இளைஞன்; அவனுக்கு அப்போதுதான் கல்யாணம் பேசி முடிக்கப்பட்டு இருந்தது. எந்தத் தேதியில் பாளையங்கோட்டைச் சிறையை உடைக்க வேண்டுமென்று திட்டமிட்டு இருந்தார்களோ அதே, தேதியில் தான் அவனுக்குக் கல்யாணம்.



''கல்யாணத்தை நிறுத்திவிடப் போகின்றேன்'' என்றான் அவன். மற்றவர்கள் அதை மறுத்து, கல்யாணத்தைப் பாளையங்கோட்டையிலேயே நடத்தும் படியும், சிலர் அதற்கு வரும் விருந்தாளிகளைப்போல் வருவதாகவும் கூறினர். அதன்படி பொம்மையாவின் திருமண ஊர்வலம் சிறைச்சாலை வழியே செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வீரத்தேவன் கடற்கரை நாயக்கரின் வீட்டில் விருந்து சாப்பிட்டுவிட்டு, தெரு விளக்கின் அருகில் வந்து உட்கார்ந்தான். வீரத்தேவனின் உயிர் நண்பன் கோபால் நாயக்கன் அவன் அருகில் வந்து உட்கார்ந்து, அவனது தனிமையைக் கலைத்தான். ''சிங்கத்தேவன் ஏன் வரவில்லை?'' என்று கோபால் நாயக்கன் கேட்டான்.

''ஏனோ தெரியவில்லை. அவன் என்மேல் ஆத்திரமாகவே இருக்கிறான். அவனுக்கும் என் தந்தைக்கும் ஒரு முறை தகராறு வந்தது. அது நெடுநேரம்கூட நீடிக்கவில்லை.''

''என்ன தகராறு?'' என்று கேட்டான் கோபால் நாயக்கன்.

''அதுவும் எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் அதில் இருந்தே சிங்கத்தேவன் என்மீது ஆத்திரமாயிருக்கிறான். இத்தனைக்கும் நமது கூட்டத்தில் ஆர்வம் உள்ளவனாகவே காணப்படுகிறான். என்னைத்தான் பகைவனாகக் கருதுகிறான். என் தந்தை கொல்லப் பட்டதைப் பற்றி, இன்றுவரை அனுதாபத்திற்காக ஒரு வார்த்தை கேட்டதில்லை, அவன்!'' என்றான் வீரத்தேவன்.

''ஆமாம், உன் தங்கை கண்ணாத்தாள் காணாமல் போய் ஆறு மாதத்திற்கு மேலாகிறதே; அவள் இருக்கும் இடத்தைப் பற்றி ஏதாவது துப்புக் கிடைத்ததா?'' என்று கேட்டான், கோபால் நாயக்கன்.

வீரத்தேவன் கண் கலங்கிற்று. ''இல்லை, அவள் இருக்குமிடம் தெரிந்தால், அவளைக் கவர்ந்து சென்ற கயவன் யார் என்று தெரிந்தால் அவனைக் கண்ட துண்டம் ஆக்குவேன், கருணை காட்டமாட்டேன்'' என்றான், வீரத்தேவன்.

கோபால் நாயக்கனுக்கு, ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்றாகிவிட்டது. தங்கை பற்றிய பேச்சை எடுத்தால், வீரத்தேவன் அனைத்தையும் மறந்து விடுவான்; அவ்வளவு பிரியம் வைத்திருந்தான் தங்கை கண்ணாத்தாளிடம்.

ஆறு மாதத்துக்கு முன்னால், சிவகெங்கையை அடுத்த நாட்டரசன் கோட்டையில் தன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கண்ணாத்தாள், இனந்தெரியாத சிலரால் தூக்கிச் செல்லப்பட்டாள். வீரத்தேவன் அப்போது வீட்டில் இல்லை. பல்வேறு இளைஞர்களையும் சந்திப்பதற்காகப் பல ஊர்களிலும் சுற்றிக்கொண்டு இருந்தான். தங்கள் குடும்பத்திற்கு எதிராக யாரும் சதி செய்யக்கூடும் என்பதை அவன் கனவிலும் கருதியதில்லை.

பரம்பரையாக நாட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று வளர்ந்தது. இராமலிங்கத்தேவர் குடும்பம். மறவர் நாட்டின் மாண்பிணை வளர்த்தவர்களில் இராமலிங்கத்தேவர் முக்கியமானவர். அவர் உயிருடன் இருந்த காலத்தில், அவரைக் கண்டு அஞ்சாதார் இல்லை. வெளித் திண்ணையில்தான் படுத்துத் தூங்குவார். ஒரு குத்தீட்டி கூட அருகில் வைத்திருக்கமாட்டார். அவ்வளவு பலம் பொருந்தியவர், அவர். அவருடைய மகளை ஒருவன் தூக்கிச் செல்லக்கூடும் என்று யார் நினைக்க முடியும்! வீரத்தேவனுக்கும் அந்த எண்ணம் வராததில் வியப்பில்லை.

நாட்டரசன் கோட்டை நகரம் கண்ணாத்தாள் கடத்தப்பட்ட செய்தியைக் காலையில் அறிந்தபோது, திடுக்கிட்டது. இராமலிங்கத்தேவர் இருந்திருந்தால்



இப்படி நடக்குமா என்று ஊர் முழுவதும் பேசிற்று. அப்போது கடப்பூரில் இருந்த வீரதேவனுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. ஓடி வந்த வீரத்தேவன் துடித்தான். இது யார் செய்த சதி என்பதைக் கண்டு பிடிக்க அலைந்தான்.

நாட்டரசன் கோட்டை மக்கள் பரவலாகப் பேசிக் கொண்டதில் இருந்து கண்ணாத்தாள் காணாமல் போனதற்கு முதல் நாள், ஒருவன் அவள் இருந்த வீட்டுக்கே வந்து அவள் தந்தையின் பெருமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்ததாகவும், அன்று இரவு அந்த வீட்டுத் திண்ணையிலேயே அவன் படுத்திருந்ததாகவும் தெரிய வந்தது.

வதந்திகள் சில வேறு மாதிரி இருந்தன. அவளே விரும்பி அவனோடு ஓடி இருக்கலாம் என்றார்கள், சிலர். ஒரு சிறு சத்தம்கூட அன்று இரவு இல்லாததால் இந்த முடிவுக்கு வந்தார்கள் அவர்கள்.

வீரத்தேவன் அதை நம்பவில்லை. தன் சகோதரி ஒருவனை விரும்பினால், அவனுக்கே அவளை மண முடித்துத் தருவதாக, அவன் அவளிடம் வாக்குறுதி அளித்திருக்கிறான் அப்படியிருக்கும்போது, இரவில் அவள் ஓடிப்போக வேண்டிய அவசியம் என்ன வந்தது?

எவ்வளவோ முயன்றும் தன் தங்கையைக் கண்டு பிடிக்க அவனால் முடியவில்லை. மூன்று மாத காலம் பைத்தியக்காரனைப்போல் அலைந்தான். தெளிவு இல்லாதிருந்த அவனை, புரட்சி மனத்தோடு இருந்த இளைஞர்கள் தெளியவைத்து மீண்டும் செயலில் ஈடுபட வைத்தார்கள்.

ஊமைத்துரை விடுதலை சம்பந்தமாக அக்கறையோடு அலைய ஆரம்பித்த வீரத்தேவன் தன் தங்கையின் நினைவைக் கொஞ்சம் மறந்திருந்தான். இப்போது கோபால் நாயக்கன் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தி விட்டான்.

கோபால் நாயக்கன் இப்போது பேச்சை மாற்ற முயன்றான். ஒட்டப்பிடாரம் கிராமத்தில் இருக்கும் ஊமைத்துரை மனைவியின் கவலை படிந்த முகத்தை வீரத்தேவன் கண்களுக்குக் கொண்டுவர அவன் விரும்பினான். இளைத்துப்போன அவளது வடிவையும் உண்ணாமலே காலங்கழிப்பதையும், ''அப்பா, அப்பா'' என்று அலறும் ஊமைத்துரையின் குழந்தையையும் படம் படமாக விவரித்தான். அவன் முயற்சி வீண் போகவில்லை. இன்னொருவர் கவலையைப் பார்த்து, தன் கவலையை அகற்ற முயலும் மனிதகுணம் வீரத்தேவனிடமும் இரும்பியது. பின் இருவரும் எழுந்து சுப்பாநாயக்கர் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

## 2. இது கண்ணாத்தாள் ரகசியம்

இது பாளையங்கோட்டை.

பரவிக் கிடக்கும் பழுப்பு நிறக் கற்களும், பரபரப்பான ஆடவர்களின் போக்குவரத்தும், தந்தத்தை வெட்டிப் படைத்த சிலைபோல் கட்டுடலும் வாய்த்துக் குடம் ஏந்திச் செல்லும் கன்னியரும், பசுமையான காய்கறிகளும், பசி என்று வந்தவர்க்குப் புசி என்று தரும் கருணை உள்ளம் கொண்ட முதியவர்களும் நிறைந்த பாளையங்கோட்டை இது.

அதோ தெரிவதுதான் சிறைச்சாலை. ஒரு கோட்டைக்கு உரிய பாதுகாப்புப் பலத்தோடு அமைக்கப்பட்டது அது. நான்கு பேர் கூடித் திறந்து மூட வேண்டிய அளவுக்குக் கனமிக்க கதவுகள் கொண்டது. துப்பாக்கி சகிதம் அதைக் காவல் காத்துக்கொண்டு இருக்கும் இருவரும் தமிழர்கள் தான். கும்பினியார் சார்பில் அவர்கள் அங்கே நின்றார்கள்.



அதன் எதிரே இருக்கும் கிணறு, ஊருக்குப் பொதுக் கிணறு ஆகும். அதன் அருகில் வந்து முடியும் மூன்று தெருக்களில், நடுத்தெருவில்தான் சிங்கத் தேவன் குடியிருக்கிறான். அந்தத் தெருவிலேயே உயர்ந்த வீடு அவனது வீடு. வளமாக வாழ்ந்த குடும்பத்தைச் சார்ந்தவன், அவன்.

ஒட்டநத்தம் கூட்டம் முடிந்த மறுநாள், அந்தி பட்டு நான்கு நாழிகைக்குச் சிங்கத்தேவன் வீட்டில் இருந்து, சிப்பாய் ஒருவன் சிறைச்சாலையை நோக்கிக் கிளம்பினான் சுற்றுமுற்றும் பார்த்தபடி அவன் நடந்த விதம் அவனைக் கும்பினியாரின் சிப்பாய்களில் ஒருவனாக எண்ணச் செய்யாது. ஆனாலும், அவன் கும்பினிச் சிப்பாயாகத்தான் இருந்தான். சிறைச்சாலையின் கதவுகளுக்கு அருகே, இரண்டு விளக்குகள் எரிந்துகொண்டு இருந்தன. காவல்காரர்கள் ரோந்து பலமாக இருந்தது. எரிந்துகொண்டிருந்த விளக்குகள் ஒருவரை இன்னொருவருக்கு அடையாளம் காட்டக்கூடியவை அல்ல; சிறு மண்ணெண்ணெய் விளக்குகள்.

சிறைச்சாலைக் கதவு அருகே வந்தான், அந்தச் சிப்பாய். மெதுவாக அவனைப் பார்த்த ஒரு காவல் சிப்பாய், தன் கையில் இருந்த துப்பாக்கியை அவனிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டான்.

துப்பாக்கியைக் கொடுக்கும்போதே, வந்த சிப்பாயின் கையில் தன் வலக்கைப் பெருவிரலால் ஏதோ எழுதினான் காவல் சிப்பாய். வந்த சிப்பாய் அதற்குப் பதிலாகத் தலையை ஆட்டிவிட்டு, கதவு அருகில் சென்று உட்கார்ந்தான்.

உடனே மிச்சமிருந்த காவலர்களில் ஒருவன், அவனைப் பார்த்து, ''ஏனப்பா வந்த உடனே உட்கார்ந்திட்டே. கொஞ்சம் எழுந்து நட'' என்றான்.

''அட, உட்கார்ந்தா என்ன, நடந்த என்ன; எவனும் உள்ள வராம கண்டுபிடிக்கணும். அவ்வளவு

தானே ? அதை நான் கவனிக்கக்கிறேன், சும்மா இரு'' என்று கூறிய புதுச்சிப்பாய், கதவிலேயே சாய்ந்து கொண்டான்.

சிறிது நேரம் மவுனம் நிலவியது.

பிறகு புதுச் சிப்பாய் தன் சட்டைப் பையைத் துழாவி, ஒரு சிறு சுருட்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, ''அண்ணாச்சி ! வத்திப்பெட்டி இருக்கா ?'' என்று கேட்டான்.

நடந்துகொண்டு இருந்த சிப்பாய், தன் பையைத் தடவிப் பார்த்துவிட்டு, ''இல்லை, இல்லை ; அந்தா அந்த வெளக்கில, பத்தவச்சுக்கோ !'' என்றான்.

உட்கார்ந்திருந்தவன் எழுந்து, விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டான்.

நடந்த சிப்பாய் அவன் அருகில் வந்து திருப்பி நடந்தபோது, விளக்கில் இருந்த மண்ணெண்ணெய் கொஞ்சத்தை அவன் சட்டையில் ஊற்றிவிட்டான், புதியவன்.

பிறகு சுருட்டு பற்ற வைப்பதுபோல் ஜாடை காட்டிக் கொண்டிருந்தான்.

மீண்டும் பழையவன் அவன் அருகில் வந்து திரும்பிய போது விளக்கை அவன் சட்டையில் காட்டி விட்டான், புதியவன்.

''நெருப்பு, நெருப்பு !'' என்று சத்தம்.

பழையவன் துள்ளிக் குதித்தான். கூக்குரலிட்டான். அவன் ஆடையெல்லாம் நெருப்புப் பற்றி எரிந்தது.

சிறைச்சாலைக்கு உள்ளிருந்த சிப்பாய்கள், வேக வேகமாகச் சிறு கதவு வழியே ஓடிவந்தார்கள். மண்ணை



அள்ளிப் போட்டு நெருப்பை அணைக்க முயன்றார்கள். ஒருவன் கூடச் சிறைச்சாலைக்குள் இல்லை.

இதைப் பயன்படுத்திக்கொண்டு, புதியவன் சிறைச் சாலைக்குள் நுழைந்தான். நேரே ஊமைத்துரை அடைக்கப்பட்டு இருந்த கொட்டத்திற்குச் சென்றான். தாடியும் மீசையுமாக, சிந்தனை தேங்கிய முகத்தோடு, சிறு விளக்கு ஒன்றன் கீழே கற்படுக்கையில் அமர்ந்திருந் தான், ஊமைத்துரை.

''சாமி! சாமி!'' என்ற குரல்.

திடுக்கிட்டு எழுந்தான், கொட்டத்துக் கதவின் கம்பி களைப் பிடித்துக் கொண்டான்.

''யார்? யார் அது ?''

''நான் தான் சாமி, சிங்கத்தேவன் !''

''நீயா? சிங்கத்தேவனா?... எப்படி உள்ளே புகுந் தாய், இந்தச் சிப்பாய் உடையில் ? என்ன செய்தி ?''

''இந்தச் சிறையை உடைக்கத் திட்டம் தயாராகி விட்டது. ஒட்டநத்தத்தில் நேற்று வாலிபர்கள் கூடி முடிவு எடுத்துவிட்டார்கள். பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி சிறை உடைபடும் !''

''அப்படியா ! வீரத்தேவன் எங்கே ?''

''அவன்தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு இருக்கிறான் !''

''ஒட்டப்பிடாரத்துக்குப் போனானா ? வடிவைப் பார்த்தானா ?''

''நானே போனேன். அம்மாவைப் பார்த்தேன். ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன்.''

''சரி; சீக்கிரம் போய்விடு. நீயும் அகப்பட்டுக் கொள்ளாதே!''

"போகிறேன், பிப்ரவரி இரண்டாம் தேதி நீங்களும் தயாராக இருந்துகொள்ளுங்கள்" என்று கூறிய சிங்கத்தேவன், ஒவ்வொரு கொட்டத்துக்கும் 'படபட'வென்று சென்று, "பிப்ரவரி இரண்டாம் தேதி சிறையை உடைக்கிறோம்; தைரியமாய் இருங்கள்!" என்றான் கொட்டங்களில் இருந்தவர்கள் அவன் முகத்தைச் சரிவரப் பார்ப்பதற்கு முன்பாகவே திரும்பி நடந்தான்.

கதவு அருகில் வந்தான். அங்கே நெருப்புக் கலவரம் இன்னும் முடியவில்லை. வெந்து போய்க் கிடந்த சிப்பாய், வேதனை முனகலோடு "யாரோ கட்ட பொம்மன் கூட்டத்தைச் சேர்ந்தவன் சிப்பாய் வேடத்தில் வந்திருக்கான். அவன்தான் இப்படிப் பண்ணினான். விடாதீங்க, விடாதீங்க..." என்றான்.

இதற்குள் வெளிப்புறத்துக்கு வந்துவிட்டான் சிங்கத் தேவன். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பதுங்கிப் பதுங்கி நடக்கலானான்.

சிப்பாய்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

சிங்கத்தேவன் ஓடத் தொடங்கினான்.

சிப்பாய்கள் துரத்தினார்கள்.

சிங்கத்தேவன் தன் வீட்டுப் பக்கம் செல்லாமல் வேறு பல தெருக்களைக் கடந்து ஓடினான்.

சிப்பாய்கள் விடாமல் துரத்தினார்கள்.

ஆங்காங்கே போய்க்கொண்டிருந்த பொது மக்கள் இதில் ஈடுபாடு கொள்ளாமல் வேடிக்கை பார்த்த வண்ணம் நின்றனர். ஒரு சிப்பாய் ஓடுகிறான்; மற்ற சிப்பாய்கள் ஓடுகிறார்களே. ஏன்?—என்று அவர்களுக்கு ஆச்சரியம்! கும்பினியிடம் வேலை பார்க்கும் கூலிச் சிப்பாய்கள், தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள் கிறார்கள் போலும் என்று அவர்கள் எண்ணினார்கள்.



வேகமாக ஓடிய சிங்கத் தேவன், ஒரு தோட்டத்துச் சுவரில் ஏறிக் குதித்தான்.

அது ஒரு வீட்டின் பின் பகுதி. பின் கதவைத் தள்ளினான். தாழிடப்படாத அந்தக் கதவு திறந்து கொண்டது. 'பளிச்' சென்று புகுந்து, உட்புறம் தாழ் போட்டுக்கொண்டான்.

உடனே "ஈச்" என்று ஒரு சத்தம்.

சத்தம் வந்த திசைக்குத் தாவிய சிங்கத்தேவன் அப்படிக் கூக்குரலிட்ட பெண்ணின் வாயைப் பொத்தினான்.

"சத்தம் போடாதே! நான் கும்பினிச் சிப்பாய் அல்ல. மாறு வேடம் பூண்டு இருக்கிறேன். கும்பினிச் சிப்பாய்கள் என்னைத் துரத்துகிறார்கள், என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே!" என்று கெஞ்சியபடி தன் தலைக் கட்டை அவிழ்த்தான்.

சிறிது சிறிதாகப் பயம் தெளிந்த அந்த பெண் அவனை அடையாளம் தெரிந்துகொண்டு, "உட்காருங்கள். நான் பயந்தே போனேன். என்னைத் தெரியவில்லையா, உங்களுக்கு? ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாயக்கரின் மகள் சுப்பம்மா நான்" என்றாள்.

அந்த நேரத்திலும், ரங்கைய நாயக்கரைப் புரிந்து கொள்ள அவனால் முடிந்தது. திருவைகுண்டம் நெற் கொள்ளையில் சம்பந்தப்பட்டு போததல் கொல்லப் பட்டவர் அவர். சிங்கத்தேவன் அவர் வீட்டிற்கே ஒரு முறை சென்றிருக்கிறான்.

"அப்படியா!" என்றான் சிங்கத்தேவன்.

"ஆமாம்!"

''இங்கே எங்கே வந்தாய்? இது யார் வீடு?''

''இது என் சகோதரி வீடு. அவர்கள் எல்லாம் திருநெல்வேலிக்குக் கூத்துப் பார்க்கச் சென்று இருக்கிறார்கள். ஊமைத்துரையைக் கொன்றுவிடப் போவதாக ஊரிலே பேசிக்கொண்டார்கள்; ஒரு தடவையாவது அவர் முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று வந்தேன். இங்கே வந்ததும்தான் அப்படி எதுவும் இல்லை என்று தெரிந்தது. நாளைக்குக் காலையில் கிழங்குவிற்பவள்போல சிறைச்சாலைக்குச் செல்லலாம் என்று இருக்கிறேன்.''

''வேண்டாம்; இன்னும் சில நாள் போனால், சாமி ஜாம், ஜாம் என்று வெளியிலே வந்துவிடுவார். அதன் பிறகு பார்க்கலாம்'' என்றான் சிங்கத்தேவன்.

''எத்தனாந் தேதி விடுதலை?'' என்று கேட்டாள் அவள்.

''விடுதலை அல்ல; மீட்பு. பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி. இந்தச் சிறைச்சாலையை உடைத்து சாமியை விடுதலை செய்யப்போகிறோம். அதைத்தான் இப்போது மாறுவேடத்தில் போய் சாமியிடம் தெரிவித்துவிட்டு வந்தேன்'' என்றான் சிங்கத்தேவன்.

''ஐயையோ! இரண்டாம் தேதி, ஏழாயிரம் பண்ணையில் எனக்குக் கல்யாணம் ஆயிற்றே'' என்றாள் அவள்.

''அட! அதற்கு இடையிலா இங்கே வந்தே? ஊமைத் துரையிடம் உள்ள அன்பு, உன்னை இவ்வளவு தூரம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது!'' என்றான், சிங்கத் தேவன்.

''என்னைக் கட்டிக்கொள்ளப் போகிறவர்கூட உங்கள் கூட்டத்தில்தான் இருக்கிறார்'' என்றாள், அவள்.

''அவன் பெயர் என்ன?'' என்று கேட்டான், அவன்.



பக்கத்தில் இருந்த ஒரு பொம்மையைச் சுட்டிக் காட்டினாள், அவள்.

''ஓ! பொம்மையாவா? மிகநல்லவன்; வீரன்'' என்று அவனைப் புகழ்ந்தான் சிங்கத்தேவன்.

''உட்காருங்கள் அண்ணாச்சி. நின்று கொண்டே பேசிக் கொண்டு இருக்கிறீர்களே'' என்றாள் அவள், அன்போடு.

அப்பொழுது ''பட, பட''வென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. ஒவ்வொரு வீடாகத் துளாவிய சிப்பாய்கள் அங்கேயும் வந்து கதவைத் தட்டினார்கள் சிங்கத்தேவன் திடுக்கிட்டான்.

சுப்பம்மா உடனே, ''சிப்பாய் உடைகளைக் கழட்டுங்கள்; கழட்டுங்கள்'' என்று அவசரப்படுத்தினாள். ஒரு போர்வையை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அதைக் கட்டிக்கொண்டு சிப்பாய் ஆடைகளைக் கழற்றி அவள் கையில் கொடுத்தான், சிங்கத்தேவன்.

அதைக் கையில் வாங்கிக் கொண்ட சுப்பம்மா, கொண்டுபோய் ஒரு பானையுள் போட்டு மூடிவிட்டு, ஒரு பாயை எடுத்து விரித்து சிங்கத்தேவனைப் படுக்கச் சொன்னாள். ஒன்றும் புரியாத சிங்கத்தேவன் அதில் படுத்தான்

சுப்பம்மாள் எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். சிப்பாய்கள் 'தடதட' வென்று உள்ளே புகுந்தார்கள். சுப்பம்மா சிங்கத்தேவன் அருகில் உட்கார்ந்து 'ஓ' என்று அழ ஆரம்பித்தாள்.

''என்ன? என்ன?'' என்றான் ஒரு சிப்பாய்.

''எங்க அண்ணன் செத்துப்போனாரு'' என்று கூறிய சுப்பம்மா, மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

''அண்ணே! மூக்கை தொட்டுப் பாருண்ணே, மூச்சு வருதாண்ணு!'' என்றான் ஒரு சிப்பாய்.

ஒருவன் மூக்கைத் தொட்டுப் பார்த்தான். சிங்கத்தேவன் மூச்சை அடக்கிக்கொண்டு படுத்திருந்தான். சுப்பம்மா ஒப்பாரியை நிறுத்தவில்லை.

அது சாவு வீடு என்றே முடிவு கட்டி சிப்பாய்கள் திரும்பிப் போனபோது, கூத்துப் பார்க்கப்போன சுப்பம்மாவின் அக்காளும், மாமனும் உள்ளே நுழைந்தார்கள். அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு திடுக்கிட்ட அக்காள், சுப்பம்மாவைப் பார்த்து, ''என்னடி ! என்ன நடந்தது ? யார் இவன் ?'' என்றாள்.

புறப்பட்ட சிப்பாய்கள் நின்று கவனித்தனர்.

திடுக்கிட்ட சுப்பம்மா இன்னும் பலமாக அழ ஆரம்பித்தாள். சிப்பாய்கள் போய்விட மாட்டார்களா, அதன் பிறகு உண்மையைச் சொல்லிவிடலாம் என்று துடித்த சுப்பம்மாவின் உடம்பு, சிப்பாய்கள் அங்கேயே நிற்பதைப் பார்த்ததும் பதற ஆரம்பித்தது.

அவள் மாமனுக்குக் கோபம் வந்தது. படுத்திருந்த சிங்கத்தேவனின் குடுமியைப் பிடித்துத் தூக்கி, ''டே ! மரியாதையாகச் சொல்லு ! யார் நீ ?'' என்றான் அவன்.

சிங்கத்தேவன் அப்போதும் பிணம் மாதிரியே இருந்தான். ஆனால், அடக்க முடியாத நிலையில் மூச்சு மட்டும் வெளிப்பட்டது.

இதைக் கவனித்த சிப்பாய்கள், மீண்டும் உட்புறமாக வந்து நின்று கொண்டார்கள்.

மாமன் 'பளார்' என்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

உணர்ச்சியால் உந்தப்பட்ட சிங்கத்தேவன், கண்களைத் திறந்து அதே வேகத்தில் மாமனின் தாடையில் ஓங்கிக் குத்திக் கீழே தள்ளிவிட்டு வெளியில் ஓடிக் கதவை இழுத்துச் சாத்திவிட்டுப் பறந்தான்.



சிப்பாய்கள் கதவை உடைக்க முயன்றார்கள். அதற்குள் சிங்கத்தேவன் போயே போய் விட்டான்.

ஆத்திரம் கொண்ட சிப்பாய்கள், கதவை உடைத்து சுப்பம்மாவின் கைகளைக் கயிற்றால் பிணைத்து இழுத்துச் சென்றனர்.

அக்காள் அலறினாள்.

மாமன் அவள் வாயைப் பொத்தி, ''அவளுக்காக நீ ஏன் அலறுறே? என்னமோ அவள் தப்புப் பண்ணியிருக்கா; அவள் செத்துத் தொலையட்டும்!'' என்றான்

சிங்கத்தேவன் 'படபட'ப்பாக ஓடிவந்து, தன் வீட்டுக் கதவைத் தட்டினான்.

அவன் மனைவி வந்து, கதவைத் திறந்தாள்.

உள்ளே புகுந்து தாழிட்டுக்கொண்ட சிங்கத்தேவன் ''அப்பாடா'' என்ற பெருமூச்சோடு ஊஞ்சலில் சாய்ந்தான்.

அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள், அவன் மனைவி.

''என்ன படபடப்பு ? ஏன் இந்தக் களைப்பு ?''

''ஒரு வேடிக்கை !''

''என்ன அது ?''

சிங்கத்தேவன் நடந்ததைச் சொன்னான். அவள் சிரித்துவிட்டு, ''அந்தப் பெண்ணை இப்பொழுது இழுத்துக் கொண்டு போயிருப்பார்களே!'' என்றாள்.

''ஆமாம்'' என்ற சிங்கத்தேவன், ''காலையில்தான் போய், என்ன நடந்தது என்று கவனிக்க வேண்டும்'' என்றான்.

அவள் அவன் கால் அருகில் தள்ளி உட்கார்ந்து, கால்களைப் பிடிக்க ஆரம்பித்தாள். அந்த இன்பத்தை அனுபவித்தபடி, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்த சிங்கத்தேவன் மெதுவாகச் சிரித்தான்.

அவள் தலை நிமிர்ந்தாள். ''ஏன் சிரிக்கிறீர்கள் ?''

''இல்லை, நடந்தவற்றை எல்லாம் நினைக்கும்போது உலகம் நாடக மேடையாகத்தான் தோன்றுகிறது !''

''நாடகம் பார்ப்பதை நிறுத்திவிட்டு, சந்நியாசியாகப் போகிறீர்களா ?''

''சந்நியாசி ஆவதற்கா இவ்வளவு தொல்லைப்பட்டு உன்னைக் கொண்டு வந்தேன் !''

''என்னிடம் அன்பு இருந்துதானே கொண்டு வந்தீர்கள் ?''

''இல்லை என்றால், அதற்கென்று ஒரு போராட்டத்தில் இறங்கியிருப்பேனா? முன்பெல்லாம் நான் என்னவோ நினைத்துக்கொண்டு இருந்தேன் ஆனால், நீ என் அருகில் வந்தபிறகு, என் மனநிலையே வேறாகி விட்டது. இரக்கம் இல்லாத ஒரு தந்தைக்கு இவ்வளவு பெரிய மனம் படைத்த மகள் பிறந்தது அதிசயம்தான் !''

''என் தந்தை இரக்கமற்றவரா ?''

''அவர் தியாகி! அதை நான் மறக்கவில்லை. ஆனால், என்னை அவர் இகழ்ந்தார். சின்னஞ்சிறு வயதில் உன் குறும்புத்தனத்தையும், குறுகுறுத்த விழிகளையும் கண்டு உன்னையே மனைவியாக வரித்தேன். உன் தந்தையிடம் கேட்டேன். உனக்குத் தெரியாதா, 'கெட்டலைந்து வந்தவனே' என்றார் : 'கீழ்க்குடியில் பிறந்தவனே' என்றார். என் இரத்தம் கொதித்தது; சித்தம் துடித்தது; பழிவாங்கத்தான் உன்னைத் தூக்கி வந்தேன். என்



ஆத்திரத்தை இன்னும் கிளறிக்கொண்டு இருக்கிறான் உன் அண்ணன் ஊமைத்துரைக்கு அவன் ஒருவன்தான் உதவி செய்வது போலவும், மற்றவர்கள் எல்லாம் நடிப்பதாகவும் கருதிக்கொண்டு இருக்கிறான். என்றைக்கு நீ இங்கே இருப்பது உன் அண்ணனுக்குத் தெரிகிறதோ, அன்றைக்கே இருவரில் ஒருவர் தலை உருளும் !''

அவள் 'பளிச்' சென்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''ஐயோ! அண்ணனிடம் நான் இங்கு இருப்பதைச் சொல்லாதீர்கள். என்னைக் கடத்தி வந்ததும் நீங்கள் தான் என்பதை வெளியிடாதீர்கள் நான் யார் என்பதை ஊரார் அறியாமல் வீட்டுக்குள்ளேயே இருந்து விடுகிறேன்.''

சிங்கத்தேவன் எழுந்து உட்கார்ந்தான்.

''விவரம் ஒருநாள் வெளியாகித்தான் தீரும். ஆனால், வெளியாகும் அன்று இருவரில் ஒருவர்தான் உயிரோடு இருப்போம் !''

''ஐயோ ! இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்.''

''எண்ணத்தை விட்டு விடுவதாலே கொதிக்கின்ற இரத்தம் குளிர்ந்துவிடாது, அம்மா. இன்றைக்கு நான் கும்பினியார்கூடச் சேர்ந்தால், கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். என் கோபம் உங்கள் குடும்பத்தின்மீதே தவிர, நாட்டின் மீது அல்ல என்பதால்தான், ஊமைத்துரையின் பக்கத்திலேயே இருக்கிறேன். ஒவ்வொரு காரியத்தையும் நானே செய்கிறேன். பொம்மு நாயக்கர் தூக்கில் இடப்பட்ட பிறகு பயந்து, தடுமாறி, பதறி, நிலைகெட்டு, ஓய்ந்து, வழிமாறி, உள்ளம் தளர்ந்து விட்ட மக்களைத் தட்டி எழுப்பும் காரியத்தை நான் ஒருவனேதான் தொடங்கினேன். இந்த சிங்கத்தேவன் இல்லை என்றால், ஆயுள் காலம் முழுவதும் ஊமைத்துரை சிறையில் கிடந்தே மடிய

வேண்டியிருக்கும். விரைவில் ஏற்பட இருக்கும் விடுதலைக்கு வித்திட்டவன் இந்தச் சிங்கத்தேவன். ஆனால், ஒட்டப்பிடாரத்தில் இருக்கும் ஊமைத்துரையின் மனைவியும், சிறையில் இருக்கும் ஊமைத்துரையும் உன் அண்ணனையே தான் பெரிதாக மதிக்கிறார்கள். இதையும் பொறுத்துக் கொள்ள நான் ஏமாந்தவன் அல்ல. நாட்டு விடுதலைக்கு நான் வழியும் வகுப்பேன்; அது முடிந்ததும் உன் அண்ணனைத் தீர்த்துக்கட்டுவதிலும் குறியாக இருப்பேன்!'' என்றான் சிங்கத்தேவன்.

''நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என் கணவர். நீங்கள் பழி வாங்கக் கட்டிய தாலியைப் பால் வார்த்துக் கட்டியதாகவே அணிந்துகொண்டிருக்கிறேன். மணம் எப்படி முடிந்தது என்பதை மறந்து விட்டேன். மனம் உங்கள் மீது தான். என் மஞ்சள் குங்குமம் நிலைக்கவும், என் மணக்கயிறு தழைக்கவும் நீங்கள் நன்றாக வாழவேண்டும். என் அண்ணனை நான் பார்ப்பது உங்களுக்கு ஆபத்து என்பதாலேதான், மணம் முடிந்த அன்றே மறந்துவிடச் சித்தமானேன். என்னைக் கொஞ்சம் பாருங்கள். எளிய மனம் என் நீர்களே, அதற்கு ஒரு வரம் மட்டும் கொடுங்கள். 'என் அண்ணன் உயிரோடு இருக்கிறார்' என்ற எண்ணமே எனக்குப் போதும். நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர் உயிருக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதியை மட்டும் எனக்குக் கொடுங்கள். சொல்லுங்கள் அத்தான். ஏன் மவுனமாக இருக்கிறீர்கள்? உங்கள் மவுனம் என் பயத்தை வளர்க்கிறது. கணவனைத் தவிர்த்து ஓர் உலகம் இருப்பதாகவே அறியாத உங்கள் மனைவி தன் ஆயுளிலேயே முதல் முறையாகக் கேட்கும் ஒரே பிச்சை இது. சொல்லுங்கள் அத்தான், சொல்லுங்கள்'' என்று கதறி அழுத அவள் அவன் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

''எழுந்திரு!'' என்று அவளைக் கை கொடுத்துத் தூக்கிய சிங்கத்தேவன், ''இதோ பார்! உன் அண்ணன் உயிருக்கு என் கையால் ஆபத்து விளையாது. எந்த ஊமைத்துரை அவனை உயிராகக் கருதுகிறாரோ, அதே ஊமைத்துரை அவனைத் துரோகி என்று குற்றம் சாட்டி, துண்டு துண்டாக்கிப் போடும்படி செய்வேன்'' என்று இழுத்தான்



அவள் துடித்து ''அத்தான்'' என்று அலறினாள்.

சிங்கத்தேவனுக்குக் கோபம் வந்தது.

''உனக்கு அண்ணன் வேண்டுமா, கணவன் வேண்டுமா?'' என்று தானும் கத்தினான்.

''இருவரும் வேண்டும்.''

''நடக்காது!''

''ஒரே ஒரு பிச்சைதானே!''

''இது என் மானநஷ்டத்தை ஈடுகட்டும் காரியம்!''

''அதற்குத்தான் என்னைத் தூக்கி வந்துவிட்டீர்களே!''

''அதன் விளைவு? தூக்கி வந்தது நான்தான் என்று தெரிந்தால் உன் அண்ணன் சும்மாயிருப்பானா? என்னைக் கொன்று போடத்தானே நினைப்பான்; அது உனக்குச் சம்மதமா?''

''இல்லை, என் அண்ணனை நான் பார்த்து, அமைதிப் படுத்திவிடுகிறேன்.''

''சரிதான். உடனடியாக நான் சாவதற்கு நீ வழி தேடுகிறாய், கேள். இருவரில் ஒருவர் இறப்பதுதான் முடிவாக இருக்க நேரும். அப்படி நேரும்போது, உனக்குத் தேவை அண்ணனா, கணவனா என்று முடிவு செய்துகொள்ள வேண்டியது உன் பொறுப்பு. அண்ணன் தான் தேவை என்றால், என்னைக் காட்டிக் கொடு,

கணவன் வேண்டும் என்றால், அண்ணனின் எந்த முடிவைப் பற்றியும் கவலைப்படாதே!''

''வேறு வழியே இல்லையா?'' என்று விம்மினாள் அவள்.

''இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை'' என்றான், அவன்.

அவள் கல்லாய்ச் சமைந்தாள்.

சிங்கத்தேவன் மீண்டும் ஊஞ்சலில் படுத்து, அவளைப் பார்க்காதவனாய்த் திரும்பிக் கொண்டான்.

எல்லா வகையிலும் தானே வெற்றி பெறப் போவதாக அவனுக்கு ஓர் இறுமாப்பு.

தன் மனைவி தன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டாள் என்ற ஒரு நம்பிக்கை.

இவ்வளவு வார்த்தைகளுக்குப் பின்னும் தனக்காக உருகும் மனைவியை எண்ணிப் பெருமிதம்!

சிங்கத்தேவன் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

அவளுக்குத் தூக்கமா வரும்! மெதுவாக எழுந்தாள்.

பழைய ஓலைப்பெட்டிக்குள் வைத்திருந்த அண்ணனின் உருவப் படத்தை எடுத்தாள். ஓவியத்தைப் பார்த்தபடியே சிறிது நேரம் அழுதாள்.

'ஒரே கொள்கைக்காகப் போராடும் இருவருக்குள் பயங்கரமான பகை இருந்தால் அந்தக் கொள்கை எப்படி வெற்றி பெறும்?'

–அதையும் எண்ணிப் பார்த்தாள்.



அலைக்கழிந்துக் கிடந்த திருநெல்வேலிச் சீமைக்கு ஒரே எதிரியாகக் கும்பினியார் இருந்திருந்தால் திருநெல்வேலிச் சீமை அடிமைப்பட்டிருக்க நியாயமில்லை. உட்பகையும், உள்ளக்குமுறலும், அண்ணனைத் தம்பியே காட்டிக் கொடுத்ததும்தான் நாட்டை அடிமையாக்கிற்று.

இன்னும் வெள்ளையருக்கு ஆதரவாகப் பல பாளையக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் சாய்த்து, வெள்ளையரையும் தீர்க்க முடிவு கொண்டு இரண்டாம் போர் முனை தொடங்கப் போகிறது. இந்த நேரத்திலுமா உட்பகை?

அவள் கலங்கினாள் இதைத் தீர்த்துவைக்க அவளால் முடியாது என்பதை உணர்ந்தாள். முடிவு காண முடியாத சிக்கல் முடிவற்ற துயரத்தின் தாய். அவள் துயருக்கு இனி முடிவில்லை.

அன்பு செலுத்துகிறான் கணவன். ஆயினும் அண்ணனிடம் உள்ள வஞ்சம் அடங்கவில்லை. யாருக்காக அழுவாள்? போகுமிடம் தெரிந்து பயணம் புறப்பட்டால், பாதையில் தோன்றும் பயங்கரங்கள் போய்ச் சேர்ந்ததும் மறந்து போகும். 'இனி எங்கே முடியும்? எப்படித் தீர்ப்பது இந்தச் சிக்கலை?'— அவள் குழம்பினாள்.

'ஒரு வேளை, சூழ்நிலை காரணமாக விடுதலைப் பட்டாளத்தையே வெள்ளைக்காரர்களுக்குக் காட்டிக் கொடுத்தால்தான் தன் அண்ணனைச் சாய்க்க முடியும் என்று தோன்றினால், கணவன் அதையும் செய்துவிடுவானோ? அதன் விளைவாக இரண்டாம் கட்டமும் தோல்வியில்முடியுமோ? அதுஎன்ன ஆனால் தான் என்ன, அதில் அண்ணன் மடிவானோ கணவன் மடிவானோ?'

அவள் தொடர்பற்ற சிந்தனைகளில் தொடர்ந்து போய்க்கொண்டு இருந்தாள்.

'தான் இறந்து விட்டால் இந்தத் தொல்லையே இருக்காதே! தன்னைத் தூக்கி வந்தவர் யார் என்பதும்

தெரியாதே! குழப்பம் ஏற்படாதே!' என்று ஒரு கணம் சிந்தித்தான்.

சாவில் அவனுக்குப் பயம் இல்லை. ஆனாலும், ஒரு தடவையாவது அண்ணனைப் பார்க்கும் ஆசை மேலோங்கியது. மீண்டும் குழப்பம்! அவன் அண்ணனின் ஓவியத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, விரித்திருந்த பாயில் வந்து படுத்தான்.

சிங்கத்தேவன் திரும்பிப் படுத்தான். 'ஐயோ! இவர் இப்பொழுதே அண்ணனிடம் அன்புள்ளம் கொண்டவராக மாறிவிடக்கூடாதா? அண்ணனையும் அமைதிப்படுத்தி, குடும்பத்தை ஆனந்த மாளிகையாக ஆக்கிவிடமாட்டோமா!'- அவன் கற்பனையில் இறங்கினான்.

துயரம் வரும் நேரத்தில் இன்பங்களைக் கற்பனை செய்வது தூக்கத்திற்கு நல்ல மருந்து. அவன் அமைதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

பொழுது புலர்ந்தது.

அவன் எழுந்தான்.

சிங்கத்தேவன் இன்னும் தூங்கிக்கொண்டு இருந்தான்.

வாசலில் இரண்டு குதிரைகள் வந்து நின்றன.

அவன் இருந்த இடத்தில் இருந்து குதிரைகளைப் பார்க்க முடியவில்லை. காலடி ஓசை மட்டும் கேட்டது.

வாசலில் கோலமிட்டுக்கொண்டிருந்த வேலைக்காரி, வேகமாக உள்ளே வந்து, ''ஐயா! ஐயா'' என்று சிங்கத்தேவனை எழுப்பினாள்.

சிங்கத்தேவன் எழுந்தான்.

''வீரத்தேவன் என்பவரும், பொம்மையா என்பவரும் வந்திருக்கிறார்கள்'' என்றாள், வேலைக்காரி.



சிங்கத்தேவன் திடுக்கிட்டு, முதன் முதலில் தன் மனைவி எங்கே இருக்கிறாள் என்பதை அறிய விரும்புபவன் போலே சுற்றும் முற்றும் பார்த்தான்.

அவள் பனிச்சென்று ஓர் அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

''அவர்களை வரச்சொல்" என்றான், சிங்கத்தேவன்.

வேலைக்காரி வெளியேறினாள்.

வீரத்தேவனும், பொம்மையாவும் உள்ளே நுழைந்தார்கள்.

சிங்கத்தேவன் எழுந்து அவர்களை அரவணைத்துக் கொண்டான். உடல்கள் பிணைந்தன... சிங்கத்தேவன் உள்ளம் மட்டும் எங்கேயோ கிடந்தது.

எனினும், ''எப்படி ஒட்டநத்தக் கூட்டம்?'' என்று கேட்டான்.

''அற்புதம்! அற்புதம்! பெரும்பாலும் எல்லோருமே வந்திருந்தார்கள்...'' என்றான் வீரத்தேவன்.

''...உங்களைத் தவிர!'' என்று அதை முடித்தான் பொம்மையா!

சிங்கத்தேவன் சிரித்தான். எல்லோரும் அமர்ந்தார்கள்.

''எனக்கு இங்கே வேலை சரியாக இருந்தது ஒரு வழியாகச் சிறைச்சாலைக்குள் புகுந்து ஊமைத்துரை நாயக்கரிடம் முடிவைச் சொல்லிவிட்டு வந்தேன்...''

''அப்படியா! சிப்பாய்கள்...?'' —வீரத்தேவன்.

''ஏமாற்றிவிட்டேன்... ஆனால், பாவம்! இதில் ஒரு பெண் அகப்பட்டுக்கொண்டாள்'' என்றான் சிங்கத்தேவன், பொம்மையாவைப் பார்த்தபடி.

''யார் அது ?''—வீரத்தேவன்.

''ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாயக்கரின் மகள் சுப்பம்மா !''

பொம்மையா திகைத்தான்.

''சுப்பம்மாவா ! அவள் எப்படி இங்கே வந்தாள்?''—பதைப்போடு கேட்டான்.

நடந்ததைச் சொன்னான், சிங்கத்தேவன். பொம்மையாவின் கண்கள் கலங்கின.

''அடிப்பாவி ...! சரி... இப்போது அவளை எங்கே வைத்திருப்பார்கள் ?'' என்று கேட்டான்.

''சிறைச்சாலைக்குத்தான் கொண்டு சென்று இருப்பார்கள்'' — சிங்கத்தேவன்.

''நான் அவளைப் பார்க்க வேண்டும் !'' —எழுந்தான் பொம்மையா.

''அவசரப்படாதே ! நாம் எல்லோருமே முயல்வோம், முயற்சி பலிக்கவில்லை என்றாலும், சிறை உடைப்புக்கு இன்னும் அதிக நாள் இல்லை !'' என்றான் வீரத்தேவன்.

அறைக்குள் இருந்த சிங்கத்தேவன் மனைவி, ஒரு கதவைச் சிறிது திறந்து வைத்துக்கொண்டு இவற்றைக் கவனித்தாள்.

''ஏதாவது சாப்பிடுகிறீர்களா ?'' — சிங்கத்தேவன் ஒப்புக்காவது அவர்களை உபசரிக்க விரும்பினான்.

களங்கமற்ற வீரத்தேவன், ''ஓ ! பானகம் கிடைத்தால் நலம் ! பலகாரம் இருந்தாலும் தேவைதான் !'' என்றான் சிரித்தபடி.

சிங்கத்தேவன் மனைவியின் கண்கள் கலங்கின.



''கண்ணா...'' என்று தவறிக் கூப்பிட ஆரம்பித்த சிங்கதேவன், பளிச்சென்று மாற்றியபடி, ''கண்ணப்பா! கண்ணப்பா!'' என்றான். அவன் முகம் ஒரு முறை கறுத்து வெளுத்தது.

பொம்மையாவும் வீரத்தேவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''கண்ணப்பன் எங்கள் வேலையாள். எங்கேயோ போய்விட்டான் போலிருக்கிறது...'' என்று இழுத்த சிங்கத்தேவன் வேலைக்காரியை அழைத்து, பானகமும் பலகாரமும் கொண்டுவரச் சொன்னான்.

அறைக்குள் விம்மிக்கொண்டு இருந்த சிங்கத்தேவன் மனைவி, உட்பக்கத்துக் கதவு வழியாகப் பின்புறம் சென்று அடுப்பங்கரைக்குள் நுழைந்தாள்.

சிறிது நேரத்தில் பலகாரமும் பானகமும் வந்தன.

பல் துலக்க எண்ணிய வீரத்தேவன் தண்ணீர்ப் பானைகள் வைக்கப்பட்டு இருந்த இடத்தை நோக்கி நடந்தான். அது அடுப்பறையின் சன்னல் அருகே இருந்தது. சிங்கத்தேவனும் உடன் சென்றான்.

பளிச்சென்று சன்னல் கதவு சாத்தப்பெற்றதை வீரத்தேவன் கண்டான்.

எந்தவிதச் சலனமும் இன்றிப் பல் துலக்கினான்.

பலகாரம் சாப்பிட வந்து அமர்ந்தான்.

பொம்மையா, அங்கேயே சிலை போல் அமர்ந்து இருந்தான். சுப்பம்மாளின் நிலையை எண்ணி அவன் கலங்கிக்கொண்டு இருந்தான்.

''ஏய்! நீ பல் துலக்கவில்லை?'' என்று கேட்டான் வீரத்தேவன்.

சிங்கத்தேவன் சிரித்தபடி, "இவனுக்காகச் சிறைச் சாலையில் சுப்பம்மா பல் துலக்கி இருப்பாள்" என்றான்.

பொம்மையாவுக்குக் கோபம் வந்தது.

"உனக்குக் கேலியாக இருக்கிறதா?" என்றான்.

வீரத்தேவன் அவன் தோளில் தட்டி, "ஏய்! ஏன் கோபப்படுகிறாய்? உன் காதலிக்கு எதுவும் நேராது. இன்னும் சில நாள்தான். வீரனாகச் சிறையை உடைத்து, உன் காதலியைக் குதிரைமேல் தூக்கி வைத்துக்கொண்டு, எங்கேயாவது தாமிரபரணிக் கரைப் பக்கம் போய், காதல் பாட்டுப் பாடு! இதற்கெல்லாம் கலங்கிவிடலாமா? என்னை பார். என் தங்கை காணாமல் போய் மாதக் கணக்கில் ஆகிட்டது: கடத்திச் சென்ற கயவனைக் கண்டு பிடிக்கக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவனைக் கண்டு பிடிக்கும் போது துண்டு துண்டாக அறுத்துப் போடுவேன்.... அதுவரை பதறி என்ன பயன் தம்பி! சமயம் வரும், தைரியமாக இரு!" என்றான்.

சிங்கத்தேவன் முகம் களை இழந்தது. ஆனாலும் அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

வீரத்தேவன் பலகாரத்தைச் சாப்பிடத் தொடங் கினான். ஒரு வாய் உண்டதும் அவன் கண்கள் கலங்கின! அடுத்த பலகாரத்தை எடுக்கச் சென்ற கை, அப்படியே நின்றது.

"ஏன், என்னப்பா?" என்று கேட்டான் பொம்மையா.

சிங்கத்தேவன் ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

"இல்லை... என் தங்கை கண்ணாத்தாள் இதே மாதிரித்தான் எனக்கு செய்து தருவாள். அவள் செய்தது போலவே இருக்கிறது!" என்றான் வீரத்தேவன்.

சிங்கத்தேவன் உயிர் அவனிடத்தில் இல்லை; தலையில் தம் கட்டுவது போன்ற ஓர் உணர்ச்சி



உள்ளறையில் இருந்த அவன் மனைவி, வீரத்தேவனின் வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, குப்புறப் படுத்துக் கொண்டு விம்மினாள்.

கண்களைத் துடைத்துக்கொண்ட வீரத்தேவன் பலகாரங்களை ஒரு வழியாகச் சாப்பிட்டு முடித்தான். பேச்சை வேறு திசைக்கு மாற்ற முயன்றான் சிங்கத்தேவன்.

"நீங்கள் எல்லாம் என்ன வேடம் போட்டுக்கொண்டு சிறையுடைப்புக்கு வரப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

வீரத்தேவன், தான் காவடி தூக்கிக்கொண்டு வரப்போவதாகச் சொன்னான். உடனே பொம்மையா, "அதற்குள் நான் ஒரு வேடம் போடப்போகிறேன். என் அத்தை மகன் ஒருவன் சிறைச்சாலைக் காவலனாக இருக்கிறான். இன்றிரவு அவனைச் சந்தித்து, அவன் உடைகளை வாங்கிக்கொண்டு, நாளைக்குக் காவல் காரனைப் போலப் போய் சுப்பம்மாவைச் சந்திக்கப் போகிறேன்" என்றான்.

"அதற்குள் ஏண்டா அவசரம்?"—இது வீரத்தேவன்.

"ஏய்! நானும் சிப்பாய் வேடத்தில்தான் சென்றேன். அது ஆபத்தில் போய் முடிய இருந்தது. இப்போது ஒவ்வொரு சிப்பாயையும் சோதிக்கிறார்களாம்! எச்சரிக்கை!" என்றான், சிங்கத்தேவன்.

"எதற்கும் நான் முயல்கிறேன். அகப்பட்டுக் கொண்டால், என்னையும் சேர்த்து தை இருபதில் விடுவியுங்கள்," என்று கூறியபடி பொம்மையா எழுந்தான்.

"ஏன், நாங்களும் வந்து அகப்பட்டுக்கொள்ளு கிறோம் மிச்சம் இருப்பவர்கள், அந்த வேலையைச் செய்யட்டும்" என்றான் வீரத்தேவன் கேலியாக!

அவர்கள் என்ன கூறியும் பொம்மையா தன் முடிவை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, அவன் வெளியேறினான். அவனுடைய காதல் வீரத்தை வியந்து வீரத்தேவனும் சிங்கத்தேவனும் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

சிறிது நேரத்தில் வீரத்தேவன், தானும் புறப்பட முயன்றான். மற்றும் சிலரைத் திருநெல்வேலியில் சந்திக்க வேண்டியிருப்பதைக் கூறி வெளியேறப் படிக்கட்டில் கால் வைத்தான்.

திடீரென்று "அண்ணா !." என்றோர் அலறல் கேட்டது.

திடுக்கிட்டு நின்றான் வீரத்தேவன் ; சுற்றும் முற்றும் பார்த்தான்.

சிங்கத்தேவன் உடம்பு 'படபட' வென்று ஆடிற்று. போருக்குத் தயாராகிறவன் போல் தன்னைத் தேற்ற முயன்றான்.

## 3 சிறையிலே...

சிறையிலே அடைக்கப்பட்ட சுப்பம்மா கலங்கவில்லை. உற்சாகமாகவே இருந்தாள்.

ஊமைத்துரை எங்கு இருக்கிறார் என்பதைப் பார்த்து விடப் பேராசைப்பட்டாள். ஆனால், அவள் அடைக்கப்பட்டு இருந்த அறைக்கும், ஊமைத்துரை வைக்கப்பட்டு இருந்த இடத்திற்கும் வெகுதூரம் இருந்தது.

அவளது அறையை அடுத்திருந்த அறைகளில் பெண்கள் அடைக்கப்பட்டு இருந்தனர். அவர்களில், கன்னிப் பெண்கள் முதல் கிழவிகள் வரை பலரும்



இருந்தனர். கன்னிப் பெண்களை வட்டமிடுவது அங்கே சாதாரணம் ! யாரும் எதுவும் கேட்க முடியாத இடம் சிறைச்சாலை அல்லவா !

சிறை காவலர்களில் ஒரு காமுகன் சுப்பம்மா வந்ததில் இருந்து கழுகுபோல் வட்டமிடத் தொடங்கினான். ஆள் நல்ல உயரம். பருத்த தோள்கள். அகன்ற மார்பு. வயது நாற்பது இருக்கும். சுப்பம்மா அவனைக் கண்டுதான் பயந்தாள்.

அவன், அவள் இருக்கும் அறைக்குப் பக்கத்திலேயே உலாவினான். அடிக்கடி அவளைப் பார்த்துச் சிரித்தான். உணவு கொடுக்கும் நேரங்களில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று உணவைக் கொடுப்பது போல் அவளைத் தொட முயன்றான். இதனால் சுப்பம்மா இரவு நேரத்தில் கூடத் தூங்கக் கூடாது என்று முடிவு கொண்டாள்.

பக்கத்து அறையில் இருப்போரைப் பார்க்க முடியா விட்டாலும், சத்தம் போட்டு பேசி, அவர்களிடம் இருந்து அவனைப்பற்றித் தெரிந்துகொண்டாள். அவன் அவளைப் பார்த்துச் சிரிக்கும் போது, "குரங்கு சிரிக்கிறது! குரங்கு சிரிக்கிறது!" என்று சத்தம் போடுவாள். பக்கத்து அறைப் பெண்கள் கைதட்டிக் கும்மியடித்து அவனைப் பழிப்பார்கள். இதை எல்லாம் கவனித்த அந்த காமுகன், எப்படியும் சுப்பம்மாளைக் கெடுப்பது என்ற முடிவு கொண்டான்.

அன்று இரவு நடுச்சாமத்தில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் அவன்.

சுப்பம்மா தூங்கவில்லை. அவனைக் கண்டதும், 'ஓ' வென்று அலறினாள்.

அவன் அவள் வாயைப் பொத்தினான்.

அவள் திமிறினாள்.

பலவந்தமாக அவளைக் கெடுக்க முயன்றான் அவன்.

சுப்பம்மா, தன் பலங்கொண்ட மட்டும் பேராடி அவன் கையைக் கடித்தாள்.

அவள் வாயை அடைத்திருந்த அவன் கை விடுபட்டது.

சுப்பம்மா அலறினாள்.

உடனே பக்கத்து அறையில் இருந்த பெண்கள் எல்லோரும் "ஓ" வென்று அலறினார்கள். சிறை முழுவதும் ஒரே சத்தம்.

திகைத்துப்போன, அந்த முரடன், அவளை விட்டு விட்டு, "பார்! உன்னை எப்படியும் அடைந்து காட்டு கிறேன்!" என்று சபதம் செய்துவிட்டு வெளியேறினான்.

சிறையில் சத்தம் அடங்கிற்று.

அதிகாலை நேரம். பொழுது சரியாக விடியவில்லை.

சுப்பம்மா இரவு முழுவதும் தூங்கவில்லை! எப்படியும் இந்த முரடன் மீண்டும் வருவான் என்ற எண்ணத்தில், சிறையின் உட்புறத்தில் கற்களைப் பிணைத்திருந்த இரும் புச்சங்கிலி ஒன்றை வெகு தொல்லைப்பட்டுக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தாள்.

காலடி ஓசை கேட்டது.

சுப்பம்மா தயாரானாள்.

கதவு திறக்கப்பட்டது.

ஒரு சிப்பாய் உருவம் பளிச்சென்று உள்ளே புகுந்து கதவைச் சாத்திற்று.

ஒரு கணமும் தாமதிக்காமல் சுப்பம்மா, தன் கையில் இருந்த சங்கிலியால் ஓங்கி அவன் தலையில் அடித்தாள்.

ரத்தம் பீறிட்டது.



அவன் "சுப்பம்மா!" என்று அலறிக்கொண்டே விழுந்தான்.

சுப்பம்மா திகைத்தாள்.

கீழே விழுந்த அந்த உருவத்தைப் புரட்டிப் பார்த் தாள்.

பொம்மையா! அவளை மணமுடிக்க வேண்டியவன்; அவன் செத்துவிட்டானோ?

காவலர்கள் வரும் ஓசை கேட்டது.

அவள் நடுங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அந்த அவசரத்திலும் அவளுக்கு ஒரு வேடிக்கையான யோசனை தோன்றிற்று. பொம்மையாவை இழுத்து உட்புறம் போட்டாள். 'பளிச்' சென்று கதவைச் சாத்தினாள். சேலை முந்தானையை எடுத்து அவன் உடம்பை மூடியபடி அருகில் உட்கார்ந்து கொண்டாள். தூங்கி விழுபவள்போல் பாசாங்கு செய்தாள்.

வந்த காவலர்கள் ஒவ்வோர் அறையாகப் பார்த்த படி, "என்ன என்ன" என்று கேட்டார்கள். யாரும் பதில் பேசவில்லை. "வாண்ணேன்! ஏதாவது பாச்சை கீச்சை வந்திருக்கும்! கத்தியிருப்பாங்க! பொட்டைக் குட்டிக தானே!" என்றான், ஒருவன். காவலர்கள் சிரித்துக் கொண்டே அப்புறம் நகர்ந்தனர்.

சுப்பம்மா முந்தானையை எடுத்து, அவன் முகத்தில் விசிறினாள்; சிறிது சிறிதாக அவன் உணர்வு பெற்றான்; அடி பலமாக இருந்ததால் அவன் சற்று அதிர்ச்சி யுற்றிருந்தான்.

"பாருங்க மாமா! நான்தான் சுப்பம்மா! நான் தான் சுப்பம்மா" என்றாள், அவள்.

அவன் கண்களை அகல விரித்தான்; அவளைப்புரிந்து கொண்டவன் போலத் தெளிந்தான். "சுப்பம்மா" என்று

சத்தமிடப்போனான். 'பளிச்' சென்று அவன் வாயைப் பொத்தினாள் சுப்பம்மா. அவன் நிமிர்ந்து உட்கார்ந் தான். சுப்பம்மா கைகளை எடுத்தாள்.

''என்ன சுப்பம்மா இது? நீ ஏன் இப்படி வந்து அகப்பட்டுக் கொண்டாய்?''

''எல்லாம் உங்கள் சிங்கத்தேவரால் வந்தது.''

''ஒரு நாளைக்குள் உடம்பு இளைத்துவிட்டதே!''

''எல்லாம் உங்கள் ஞாபகந்தான்!'' அவள் தலை குனிந்துகொண்டாள்.

''இன்னும் சில நாளில் சிறையை உடைக்கப் போகிறோம்.''

''சிங்கத்தேவர் சொன்னார்.''

''நான்தான் முதலில் உள்ளே ஓடிவந்து உன்னைத் தூக்கிக் கொண்டு போவேன்.''

''இப்போது எப்படித் தப்பிப் போகப் போகி றீர்கள்?''

''இந்தச் சிப்பாய் உடை!''

''பொழுது நன்றாக விடிந்து விட்டதே! மற்றவர்கள் கண்டு பிடித்து விடுவார்களே!''

''இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால்தான் கண்டு பிடித்து விடுவார்கள். நான் புறப்படுகிறேன்.''

அவன் எழுந்தான்.

அவள் ஆவல் தாங்காமல் ''மாமா'' என்றாள்.

'பளிச்'சென்று அவளை மடியில் சாத்திக்கொண்டு 'நறுக்'கென்று ஒரு முத்தம் பதித்தான், பொம்மையா.

அவள் உதட்டைத் துடைத்துக் கொண்டாள்,



''தைரியமாக இரு! இன்னும் சில நாள்தான்'' என்று கூறியபடி, மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு, அங்குமிங்கும் பார்த்தபடி வெளியேறினான் பொம்மையா.

அவள் கதவைச் சாத்திக் கொண்டாள் திறந்து கிடந்த பூட்டை எடுத்து, பூட்டப்பட்ட பாவனையில், கதவில் இணைத்தாள்; கம்பிகளின் வழியாக, பொம் மையா எப்படி வெளியில் செல்லப்போகிறான் என்பதைக் கவனிக்க முயன்றாள். அவள் இருந்த இடத்தில் இருந்து எதுவும் தெரியவில்லை.

வெளியேறிய பொம்மையா, ஒரு காவலனுக்கு உரிய கம்பீரத்தோடு, அங்குமிங்கும் பார்த்தபடி நடந்தான். வாசல் கதவு அருகில் வந்தான்; அங்கே நாலைந்து காவலர்கள் நின்றார்கள்; திகைத்த பொம்மையா, வேறு புறம் திரும்பி நடந்தான்

சிறையின் உட்புறத்தில் செங்குத்தாகக் கட்டப்பட்ட மூன்று சிறு குகை வாயில்கள் இருந்தன. பயங்கரமான கைதிகளைக் கொல்வதற்கு என்று. வெளியில் கூட்டிக் கொண்டு போக அந்தக் குகை வாயில்கள் பயன்படுவது வழக்கம். உட்புறம் இறங்கி நூறு கெஜ தூரம் சென்றால், ஒரு சிறு கோட்டைக்குள்ளே போய்ச் சேரலாம் உட்புற வாசலுக்குப் பலமான கதவு போடப்பட்டு இருந்தது.

பொம்மையா அவற்றைப்பற்றிக் கேள்விப்பட்டு இருக் கிறான். இப்போது அவற்றைக் கண்டதும், இதன் வழியாகப் போய்விட மாட்டோமா என்ற ஆசை தோன் றிற்று. கதவையும் பூட்டையும் கண்ட அவன் மனம் சிறிது தளர்ச்சி உற்றது. என்றாலும், அங்கேயே உட் கார்ந்து கதவைத் திறக்க முயன்றால் வெளியில் இருப்பவர் களுக்குத் தெரியாது என்பதையும் கண்டான்.

ஏழெட்டுப் படிக்கட்டுகள் உள்ளே இறங்கிய பின்னர் தான் கதவு தெரிந்தது: படிக்கட்டுக்கு மேலேதான்

சமதளம். காவலர்கள், சிறையின் வேறு மூலையில் உட்கார்ந்து, தேநீர் தயாரித்துக் கொண்டு இருந்தார்கள். பொம்மையா கதவைத் திறக்க முயன்றான். கதவைத் திறந்துவிட்டால் அது ஓர் அபார சாதனை என்றே கருதினான். அவ்வளவு தொல்லைகளை அவன் அனுபவிக்க வேண்டியிருந்தது.

இவ்வளவு தூரம் வந்துவிட்டு ஊமைத்துரையைப் பார்க்காமல் போகிறோமே என்றும் அவன் கவலைப் பட்டான். ஆனாலும், அதற்காக அவன் மீண்டும் அகப்பட்டுக்கொள்ளத் தயாராயில்லை.

பலம் கொண்ட மட்டும் கதவோடு போராடினான் : பூட்டை உடைக்க முடியவில்லை. கதவுப் பலகையைத் தான் உடைத்தான். ஓர் ஆள் உள்ளே செல்லக் கூடிய அளவுக்கு இடம் கிடைத்தது. ஆனால், கூர்மையாகச் சில பகுதிகள் நீட்டிக் கொண்டிருந்தன ; காயம் படும் என்று தெரிந்தும் துணிந்து உள்ளே புகுந்தான் பொம்மையா !

உள்ளே ஒரே இருள். பாதை தெரியவில்லை. எத்தனை படிக்கட்டுகளில் இறங்க வேண்டும் என்றும் புரியவில்லை. கால்களால் தடவித் தடவி மெதுவாக இறங்கினான்.

பத்துப் படிகள் இறங்கியதும், சமநிலம் தட்டுப் பட்டது. பொம்மையா சுவரைத் தடவிக்கொண்டே நேரே நடக்க ஆரம்பித்தான்.

அவன் கால்களில் ஏதேதோ பொருள்கள் தட்டுப் பட்டன. அவை என்னவாயிருக்கும் என்பதைக் கண்டு கொள்ள முடியவில்லை. ஒன்றைக் கையிலே எடுத்துத் தடவிப் பார்த்தபோது, அது ஒரு நகை என்பது தெரிய வந்தது. பொம்மையாவுக்கு ஆசை தாங்கவில்லை ; கை கொண்ட மட்டும் சிலவற்றை எடுத்துக் கொண்டான்.



இப்போது சுவரைத் தடவி நடப்பது சிரமமாக இருந்தது. தட்டுத் தடுமாறி நடந்தான். சுரங்கப்பாதை ஓர் இடத்தில் வந்து முடிந்தது: பாதை முடிந்ததே தவிர அங்கே எந்தக் கதவும் இல்லை.

'வெறும் நகைகளைப் போட்டு வைக்கிற சுரங்கமோ' எனச் சந்தேகித்த பொம்மையாவின் மனம் மீண்டும் தளர்ந்தது. 'அம்மா, என்ன முட்டாள்தனமான காரியம் ! எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்தப் பாதைக்குள் இறங்கினோம் !' என்று வருந்தினான்.

'ஏதேனும் ஒரு கதவு இருக்காதா ?' என்று மீண்டும் மீண்டும் தடவிப் பார்த்தான். திடீரென்று ஏதோ ஓசை கேட்டது: சுரங்கத்தின் மேற்புறம் வழியாக வெளிச்சம் தெரிந்தது.

பொம்மையா சுவரோடு சுவராக ஒண்டிக்கொண் டான்

ஏணி ஒன்று உள்நோக்கி வந்தது. பொம்மையாவின் உயிர் நின்றுவிடும் போலிருந்தது.

ஓர் ஆண் குரலும், பெண் குரலும் அவன் காதில் விழுந்தன.

வந்த வழியே கொஞ்ச தூரம் நடந்தது இருட்டில் மறைந்து கொண்டான்.

ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் ஏணி வழியாக உள்ளே இறங்கினார்கள்.

பின்னாலேயே ஒரு கை, தீவட்டி ஒன்றை அந்த இளைஞனிடம் கொடுத்தது.

பொம்மையாவுக்குத் தான் அகப்பட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றிற்று. ஒரு போருக்குத் தயாரானான்.

தீவட்டியைக்கொண்டு இளம்பெண்ணும், இளைஞனும் உள்ளே நடக்க ஆரம்பித்ததும், 'குபீர்' என்று அவர்கள்மீது பாய்ந்தான், பொம்மையா.

அவர்கள் கையில் இருந்த தீ வட்டியைப் பறித்து, அவர்கள் முகத்தைச் சுட்டான். அவர்கள் கதறினார்கள்.

தீவட்டியை அணைத்துவிட்டு ஓடிய பொம்மையா மேலே போகப்போன ஏணியை 'பட்'டென்று பிடித்துக் கொண்டான். 'பரபர'வென்று அதிலே ஏறினான்.

சமதளத்திற்கு வந்தபோது அங்கே ஒரு கிழவி நிற்பதைக் கண்டான்.

அவள் பொம்மையாவைக் கண்டதும் 'வீல்' என்று அலறினாள். அவளை அடித்துத் தள்ளிய பொம்மையா பாய்ந்து ஓடினான்.

கோட்டைக் கதவு திறந்தே கிடந்தது.

வெளியில் ஓடி, மரங்களுக்கு இடையில் மறைந்த பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது

## 4. யார் அவர்கள் ?

குரலைக் கேட்ட வீரத்தேவன் அதிர்ச்சி அடைந்தான்.

அது கண்ணாத்தாளின் குரல்! ஆம்; அது கண்ணாத்தாளின் குரல் !

வீரத்தேவன் திரும்பிப் படபடவென்று வீட்டிற்குள் வந்தான்.

சிங்கத்தேவனும் அவன் முகத்தைப் பார்த்தபடி பின் தொடர்ந்தான்.



''கண்ணாத்தா'' என்று சத்தமிட முயன்றான் வீரத்தேவன். அவன் குரல் தளதளத்தது. வீரத்தேவனின் கண்களிலே நீர் ததும்பியது.

சிங்கத்தேவன் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு' ''என்ன வீரத்தேவா?'' என்றான்

''ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! திருநெல்வேலிக்குப் போய்விட்டு வந்து சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு நடந்தான் வீரத்தேவன்.

அவன் வெளியே போனதும் ஆத்திரமாகக் கதவைத் தாளிட்டுவிட்டு, அறைக்கதவைத் திறந்த சிங்கத்தேவன், ''கண்ணாத்தா! கண்ணாத்தா!'' என்று அலறினான்.

சுற்றும்முற்றும் பார்த்தான். பதில் இல்லை.

பின்புறத் தோட்டத்திற்குச் சென்றான், சிங்கத் தேவன். அங்கே அவன் கண்ட காட்சி, அவனது ஆத்திரத்தைப் பயமாக மாற்றியது.

அங்கே கண்ணாத்தாள் கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி உள்ளே குதிக்கப் போனாள்.

''கண்ணாத்தாள்!'' என்று அலறிவிட்டான், சிங்கத் தேவன்.

பயம் மிகுந்த அலறலை ஆத்திரம் மிகுந்ததென நினைத்த கண்ணாத்தாள், பளிச்சென்று உள்ளே குதித்து விட்டாள்.

சிங்கத்தேவன் மேனி புல்லரித்தது. மயக்கம் வந்து விடும் போலிருந்தது. சமாளித்துக்கொண்டு, வேட்டியை வரிந்து கட்டி வேக வேகமாக் கிணற்றுக்குள் தானும் இறங்கினான்.

கண்ணாத்தாள் அங்கே தண்ணீருக்குள் தத்தளித்துக் கொண்டிருந்தாள். சிங்கத்தேவன் அவள் தலை மயிரைப்

பிடித்து மெதுவாகத் தூக்கி உட்புறத்துப் படிக்கட்டில் சாய்த்தான்.

பிறகு, ஒரு கையால் கயிற்றைப் பிடித்துக் கொண்டு, மறு கையால் அவளைத் தோளில் தூக்கிப்போட்ட வண்ணம் மேலே ஏறி வந்தான்.

உள் அறைக்குள் கொண்டுவந்து கிடத்தினான். கல்லிலே மோதி தலை அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இரத்தத்தை முதலில் துடைத்துக் காயத்துக்குக் கட்டுப் போட்டான். பிறகு அவள் தலையை யும் உடம்பையும் துலட்டினான்.

அவள் இலேசாகக் கண் விழித்தாள் முதலில் ஆடைகளை மாற்றிக்கொள்ளச் செய்து அவளை மீண்டும் படுக்க வைத்தான்; சாம்பிராணி புகை போட்டான்.

இப்போது அவன் கோபம் எங்கேயோ போய்விட்டது. குழந்தையைக் கடிக்க வந்த புலி, பால் கொடுப்பது போல், கொல்லும் கொதிப்போடு வந்த சிங்கத்தேவன் காப் பாற்றும் கருணைக் கடலானான்.

அவனாக எதுவுமே பேசவில்லை. அவள் கண்களிலும் நீர் ததும்பியது. "என்னை மன்னித்து விடுங்கள், என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கதறியபடி அழுதாள் கண்ணாத்தாள்.

"உடம்பை அலட்டிக்கொள்ளாதே. இப்படியா அவசரப்படுவது? 'அண்ணா' என்று கதறும் போதும் அவசரப்பட்டாய். கிணற்றில் விழவும் அதே அவசரம் தான் தூண்டிற்று. பழிவாங்கத் தூக்கி வந்த என்னை, பண்புள்ள கணவனாக மாற்றும் அளவுக்கு பொறுமையும் தெளிவும் பெற்ற நீயா இப்படி அவசரக்காரியானாய்?" என்றான் சிங்கத்தேவன்,

"கட்டுப்படுத்த முடியாத பாச உணர்ச்சி, வாய் திறக்கக்கூடாது என்று நான் எண்ணிக் கொண்டு



இருந்தேன். அண்ணன் புறப்படும்போது எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் என்னைத் தன்வயம் இழக்கச் செய்து விட்டது. எப்படிக் கத்தினேன் என்று எனக்கே புரிய வில்லை" என்றாள் கண்ணாத்தாள்.

"சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய உன் அண்ணன் உன்னைக் கண்டு பிடித்திருந்தால் என் கதி என்ன ஆகி இருக்கும்?"

"எனக்குப் புரிகிறது நான் பயங்கரமான ஒரு தவற்றைச் செய்துவிட்டேன். இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று எப்போதும் நான் கருதியதில்லை. பாசத்தீயில் கருகி, உருகி மடிய நேர்ந்தாலும், உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டாள், கண்ணாத்தாள்."

"நீ காட்டிக் கொடுப்பாய், என்று நான் சொல்ல வில்லை. அறிவை உணர்ச்சி மழுங்கடிக்கும்போது, யாரும் தலைகீழாக மாறிவிடுகிறார்கள். நீ பெண். பெண், பிறப்பின் பலவீனப் பகுதி என்கிறார்கள் தத்துவ ஞானிகள். என்னதான் கையைக் கட்டிக் கொண்டு, வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந் தாலும் அண்ணனையோ, தம்பியையோ பார்த்துப் பேச முடியாத சூழ்நிலை ஏற்படுமானால், ஒன்று கோபம் வாழ்க்கைத் திசையை மாற்றும்; அல்லது சோகம் வாழ்வைக் கருக்கும். கோபம் உனக்கு வராது; எனக்குத் தெரியும். சோகம் உன்னை ஆட்கொண்டு இருக்கிறது. அதை நான் எப்படி மாற்றப் போகிறேன்?"

"இல்லை, எனக்கு இப்போது எவ்விதத் துன்பமும் இல்லை. எனக்கு இருந்த ஒரே துயரம், நீங்கள் எங்கே என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளப் போகிறீர்களோ என்பதுதான்."

"இல்லை, இல்லை; அதைப்பற்றிக் கவலையே படாதே! நீ எனக்கு விரோதமாக, வேண்டும் என்று

எதையும் செய்வாய் என்று நான் கருதவில்லை. ஆனால், எதைச் செய்ய வேண்டும் என்று தோன்றினாலும் இனியாவது உடனடியாகச் செய்துவிடாதே; கொஞ்சம் நேரம் எடுத்துக்கொண்டு சிந்தனை செய் !''

கண்ணாத்தாள் ஒரு பெருமூச்சு விட்டாள். சிங்கத் தேவன் அவள் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். அவள் தலையைக் கைகளால் கோதினான். அப்பொழுது ''கண்ணாத்தா'' என்றான். அவள் அவன் முகத்தையே பார்த்தபடி ''உம்'' என்றாள், ''இந்நேரம் நீ இறந்து போயிருந்தால், நான் தன்னந்தனியாகி இருப் பேன் !'' என்றான் சிங்கத்தேவன். அவன் வாயைப் பொத்தினாள் கண்ணாத்தாள்.

கொடிய மனிதனையும் குழைய வைத்துப் பார்ப்பது உலகின் இயற்கை விநோதங்களில் ஒன்று. நல்ல மனிதன் இதயத்திலும் மிருகத்தனம் புதைந்து கிடப்பது போல் கொடிய மனிதனின் இதயத்திலும் நல்ல பண்பு புதைந்து கிடக்கிறது. அதிர்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும் போது குணம் வேறுபட்டுத் தோன்றுகிறது.

கண்ணாத்தாள் கிணற்றில் விழாமல் இருந்திருந் தால் சிங்கத்தேவன் அவளை நடத்தும் விதம் வேறாக இருந்திருக்கும். வார்த்தைகளால் அவளை சமா தானப்படுத்த வேண்டியதொல்லை கண்ணாத்தாளுக்கு நேர்ந்திருக்கும்.

கோபத்தைத் தியாகத்தால் அணைக்க முடியும். ஆயிரக்கணக்கான வார்த்தைகளுக்கும், அடிதடிகளுக்கும் பிறகு ஏற்பட வேண்டிய அமைதி. கண்ணாத்தாளின் தற்கொலை முயற்சியால் அங்கே நிலவியது.

அவன் மடியிலே தலை வைத்துப் படுத்திருந்த கண்ணாத்தாள், அவன் இடுப்பைச் சுற்றி கைகளைக் கட்டியபடி தூங்கவே ஆரம்பித்தாள். முழுக்க அமைதியில்



ஆழ்ந்து ஓய்வு கொள்பவள் போல் காணப்பட்டாள். அவளது வனப்பு மிக்க மேனியைத் தடவிக் கொடுத்தபடி தனக்குள்ளாகவே ரசித்துக் கொண்டு இருந்தான் சிங்கத் தேவன்.

27630
442207

## 5. உடன் கட்டை ஏறிய உத்தமி

திருநெல்வேலியை நோக்கிச் சென்றுகொண்டு இருந்த வீரதேவனுக்கு நிம்மதியில்லை.

'கேட்டது கண்ணாத்தாள் குரல்தானா? ஆம்; அந்தத் தொனியில் இருந்த அன்பு... சந்தேகமே இல்லை. கண்ணாத்தாள் குரல்தான். சிங்கத்தேவன் வீட்டில் அந்தக் குரல் கேட்பானேன்? ஒரு வேளை சிங்கத் தேவனே...? சேச்சே! இருக்காது! என் தங்கையைத் தூக்கிச் செல்லும் அளவுக்கா அவனுக்கு விரோதம் என் மீது? என் தந்தையிடம் அவனுக்கு ஏற்பட்ட பகை என்ன வென்றும் புரியவில்லையே?'

திரும்பிப் போய் பழையபடியும் சிங்கத்தேவன் வீட்டைச் சுற்றிப் பார்க்க நினைத்தான், வீரத்தேவன். ஆனால், வேறோர் எண்ணம் அவனைப் பின்னுக்கு இழுத்தது. நாம் தேடிப் பார்த்தும் கண்ணாத்தாள் அங்கு இல்லாமற்போனால், பிறகு எப்படி சிங்கத்தேவன் முகத் தில் விழிப்பது என்பதுதான் அது.

அதனால் மீண்டும் அவன் திருநெல்வேலிக்கு நடக்க ஆரம்பித்தான். சிங்கத்தேவன் வீட்டிலேயே, தொடர்ந்து தங்கினால், உண்மையைக் கண்டு கொள்ளலாம் என்கிற முடிவுக்கு வந்தான்.

திருநெல்வேலி இளைஞர்களில் பெரும்பாலோரைச் சந்தித்தான். சிறை உடைப்பு அன்றைக்கு ஆயுதங்களை ஒளித்து வைக்க வேண்டிய முறைபற்றி அவர்களுக்குக்

கூறினான். எல்லோரும ஒரே மாதிரி வேடம் போட்டுக் கொள்ளக் கூடாது என்பதையும் எச்சரிக்கையாகச் சொல்லி வைத்தான். யார் யாருக்கு எது எது இயற்கை யாக இருக்குமோ, அந்தந்த வேடங்களில் வரும்படி கூறினான். இவை அனைத்தையும் முடித்துக்கொண்டு, பாளையங்கோட்டைக்குத் திரும்புவதற்குள் பொழுது விடிந்து விட்டது.

திரும்பி அவன் பாளையங்கோட்டை அருகில் வந்த போதுதான் பொம்மையா தப்பி ஓடிவருவது நடந்தது. மரங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்த பொம்மையா, வீரத்தேவன் நடந்து செல்வதைப் பார்த்து உற்சாகத்தோடு கைதட்டி, "அண்ணாச்சி! அண்ணாச்சி!" என்று கூவினான்.

வீரத்தேவன் நின்று திரும்பிப் பார்த்தான். பொம்மையா வருவதைக் கண்டான். அவனுக்கும் உற்சாகம் பிறந்தது. பொம்மையா அருகில் ஓடி வந்தான். அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான், வீரத்தேவன்.

"என்னடா, எங்கே சுற்றிட்டு வர்றே? என்ன இந்த சிப்பாய் வேடம்!" என்று கேட்ட வீரத்தேவன் பொம்மையா பதில் சொல்வதற்கு முன்பாகவே, "ஓகோ சிறைச்சாலைக்குள்ள போயிட்டு வர்றயா?" என்றான்.

பாதையிலே போய்க்கொண்டு இருந்த சிலர் தங்களைக் கவனிப்பதைப் பார்த்த பொம்மையா, "சூ சத்தம் போடாதிங்க; வாங்க அந்த வரப்பில் உட்காருவோம்" என்று வீரத்தேவனை இழுத்துக் கொண்டு வரப்பில் போய் உட்கார்ந்தான். வீரத்தேவனும் அவன் அருகில் உட்கார்ந்தான்.

"ஆமா, நான் சிறைச்சாலைக்குள்ள போயிட்டு வந்த வேடிக்கையை அப்புறம் சொல்றேன். நீங்க முதலில் எல்லோரையும் பார்த்திங்களா, என்ன ஆச்சுங்கிறதைச் சொல்லுங்கள்!" என்றான்.



"பார்த்தேன். இராத்திரிப்பூரா அதுதான் வேலை. முதல்ல கடற்கரை நாயக்கரைப் பார்த்தேன். எட்டய புரத்தில் இருந்து ஒரு நூறு பையங்க. இப்பவே திருநெல் வேலிக்கு வந்திட்டாங்க. அவங்களுக்கெல்லாம் சாப்பாடு போடுகிற விஷயமா, கடற்கரை நாயக்கர் கிட்ட பேசி ஒரு முடிவு பண்ணிக்கிட்டேன். அவரும் போடுறதா ஒத்துக் கிட்டாரு. அந்தத் தொல்லை ஒழிஞ்சது. அப்புறம் நேரா சுப்ரமணிய பிள்ளை வீட்டுக்குப் போனேன்."

"யார் அவரு?"

"உனக்குத் தெரியாது. பொம்மு நாயக்கருக்குத் தேவைப்படும் போதெல்லாம் அவருதான் கடன் கொடுத்து வந்தாரு; அவருகிட்ட ஒரு ஐயாயிரம் பூவராகன் கேட்டேன். முன்னால்கூட பொம்மு நாயக்கருக்காக நான் தான் போயி அவருகிட்ட வாங்கிட்டு வருவேன் இப்ப நான் போய்க் கேட்டதும், ஆள் கொஞ்சம் ஏற எறங்கப் பார்த்தாரு. 'என்ன விஷயம்? எதுக்குன்னு' கேள்வி போட ஆரம்பிச்சாரு. 'உள்ளதை அவர்கிட்டச் சொல்ல லாமான்னு ஒரு சந்தேகம் வந்தது: 'அப்படியா காட்டிக் குடுத்திடப் போறாருன்'ற நம்பிக்கையில் சொல்லிட் டேன். எனக்கு இன்னொரு தைரியம்கூட. அவர் மகன் ராமையாவும், மருமகள் லட்சுமியும் ஊமைத்துரை கிட்ட ரொம்பப் பிரியம் உள்ளவங்க. 'சுப்பிரமணிய பிள்ளை அப்படி ஏதாவது பணமும் குடுக்காமல் நம்மைக் காட்டிக் கொடுக்கணும்னு நெனைச்சார்னா, பையன்கிட்ட சொல்லி பார்த்துக்கலாம்'ல. அதனால் தான் உள்ளதைச் சொன்னேன். சிறையை உடைக்கப் போறோமின்னு சொன்னனோ இல்லியோ, அவர் சிலையாகச் சமைஞ்சிட் டாரு. அப்புறம் ஒரு வழியா அவரைச் சமாதானப் படுத்தி, 'இந்த ஐயாயிரம் பூவராகன் கெடைச்சா ஊமைத்துரை வெளியில் வந்து, பாஞ்சாலங்குறிச்சி ராஜா ஆகிறது நிச்சயம்'னு சொன்னேன்; பெரிய நாயக்கர்

குடுத்த மாதிரியே வட்டியோட திருப்பிக் குடுத்திடறேன் அப்படின்னதும் மனுஷன் சம்மதிச்சாரு ஆனா, ஊமைத் துரையோட கையெழுத்து வேணுமின்னாரு ; எந்த நேரத்தில ஊமைத்துரை கையெழுத்துக் கேட்கிறாருபாரு! என் கையெழுத்தில் பாவிக்கு நம்பிக்கை இல்லை ! நான் சலிச்சுப் போய் வெளியில் வந்தபோது அவர் மகன் ராமையா வந்தான். அவனைப் புடிச்சு வச்சுக்கிட்டு ஒரு நாழிகை அழுதேன். உடனே அவன் ஒரு யோசனை சொன்னான், சிறைச்சாலைக்குப் பின் புறத்தில் உள்ள கோட்டையில் ஒரு சுரங்க வாசல் இருக்காம். அது வழியா சிறைச்சாலைக்குள்ள போகலாமாம். அப்படிப் போயிட்டு வரதுக்குன்னே கோட்டைக்குள்ள செல பேரு இருக்காங்க ளாம். அவங்களையெல்லாம் அவனுக்குத் தெரியுமாம் ; நிறையப் பணங்குடுத்து வச்சிருக்கானாம். 'அவங்க ஆள் மாதிரி போய், ஊமைத்துரை கிட்ட கையெழுத்து வாங் கிட்டு வந்துடறேன் ; நீங்க ஒரு கடுதாசி குடுங்கோ'ன னான். குடுத்து. அதிகாலையிலேயே அவங்களை அனுப்பிச்சுட்டேன் ; புருஷன் பெண்டாட்டி ரெண்டு பேருமே போறாங்க ; அந்தப் பொண்ணு ரொம்பக் கெட்டிகாரியாம் சிப்பாய்களை ஏமாற்றுறதிலே. இந் நேரம் கையெழுத்து வாங்கிட்டுத் திரும்பியிருப்பாங்க. எப்படியோ தம்பி, இந்த ஐயாயிரம் பூலராகனும் கெடைச் சாத்தான் நம்ம கையில் வலு இருக்கிற மாதிரி."

வீரத்தேவன் முடித்தான் பொம்மையா பதில் சொல்லாமல் பொம்மை போலவே உட்கார்ந்திருந்தான். அவன் மூளை கிறுகிறுத்தது ஒரு வேளை, சுரங்கத்தில் நாம் அடித்துப் போட்டவர்கள் அவர்களாகத்தான் இருக் குமோ ? ஆம்; அவர்களேதான்! ஐயையோ ! காரியத்தைக் கெடுத்து விட்டோமே... பொம்மையா பதறி "அண்ணே ! அண்ணே !" என்று கத்தினான்.

"என்னடா ? உங்கதையைச் சொல்லு" என்றான் வீரத்தேவன்.



'அண்ணே ! அண்ணே ! நானும் சுப்பம்மாவைப் பார்த்துட்டு, அந்த சுரங்கப்பாதையை ஒடைச்சிட்டுத் தான் வந்தேன்... வழியில் சுரங்கத்துக்குள்ளே நீங்க சொல்றவங்கதான் போலருக்கு... இரண்டுபேரு வந்தாங்க; அவங்களை அடிச்சுப் போட்டுட்டு, தீவட்டியால் அவங்க மொகத்தைச் சுட்டுட்டு வந்திட்டேன்!" என்றான் பொம்மையா.

வீரத்தேவன் உடம்பு கொதித்தது.

"ஆ! ராமையாவையா? லட்சுமியையா...? அடப்பாவி! காரியத்தை நீயேவா கெடுக்கணும் ! உம் மாதிரி ஆள்களையெல்லாம் வச்சுக்கிட்டு நான் எப்படி காரியத்தை நடத்தப் போறேன்? ஐயையோ! ராமையா என்ன ஆனான்னே தெரியலே! அவன் மொகமும் கருகி, ரகசியமும் வெளிப்பட்டு, அவனுக்கு உதவி செஞ்ச கோட்டைக் காவலர்களும் பிடிபட்டு, எல்லாம் கெட்டுப் போயிடுமே!" என்று தலையில் அடித்துக் கொண்டான் வீரத்தேவன்.

பொம்மையாவைக் கடுமையான வார்த்தைகளால் திட்டினான். ராமையாவையும லட்சுமியையும் நினைத்து அழுதே விட்டான். நிச்சயமாக இரகசியம் முழுக்க வெளிப்பட்டுவிடும் என்று பயந்தான். கண்ணீர் வடிப் பதைத் தவிர, வேறு வழி எதுவும் பொமமையாவுக்குத் தோன்றவில்லை.

"உன் காதல், நம் திட்டத்தையே பாழடித்து விட்டது, நீ என் கூட வராதே நீயே போய்க் கும்பினியாரிடம் ரகசியத்தைச் சொல்லிவிடு. உதவி செய்ய வந்தவர்களின் முகத்தைச் சுட்டதைவிட, அது நல்ல காரியம்!" என்ற வீரத்தேவன், பதிலுக்குக் காத்திராமல் வேகமாக நடந்தான்.

பொம்மையா அங்கேயே நின்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்

போல் சிறைச்சாலையின் பின்புறக் கோட்டையை நோக்கி நடந்தான்.

கோட்டை வாசலுக்கு எதிரே வந்தபோது உள்ளேயிருந்து ஒரு கூண்டு வண்டி, முழுவதும் மூடப்பட்டு, வெளியில் வந்தது. ஒருவன் துணி மூட்டை ஒன்றைக் கையில் வைத்தபடி, அந்த வண்டியின் பின்னால் நடந்தான். வண்டியின் உட்புறத்தில் இருந்து மெதுவாக அழுகுரல் வருவதை பொம்மையா கவனித்தான். கோட்டைக்குள் செல்வதா, வண்டியைப் பின் தொடர்வதா என்று திகைத்து நின்றான்.

ஒரு கிழவி கோட்டைக்குள் இருந்து வெளியில் வந்தாள். பொம்மையா சுரங்கத்தில் இருந்து தப்பி ஓடியபோது, பிடித்துத் தள்ளிய அதே கிழவி! அவள் பொம்மையாவைப் பார்த்ததும், "இவன்தான்! இவன்தான்! விடாதீங்க, பிடியுங்க! பிடியுங்க!" என்று கத்தினாள்.

பொம்மையா ஓடுவதற்கு முயலவில்லை அவன் ஒரு திடமான முடிவோடு வந்திருந்தான். ராமையா லட்சுமியின் கதி என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கடிதத்தில் ஊமைத்துரையிடம் கையெழுத்து வாங்கப்பட்டதா, இல்லையா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக அடி உதைகளையும், சிறைவாசத்தையும் அவன் அனுபவிக்கத் தயாராக இருந்தான்.

கோட்டைக்குள் இருந்து சிலர் ஓடி வந்தார்கள். பொம்மையாவின் கன்னத்தில் அறைந்து உள்ளே இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்களோ கும்பினியாரால் நியமிக்கப்பட்ட காவலர்கள். இரகசியங்களைக் காப்பாற்றுவதும், உண்மையாக நடந்து கொள்வதுமே அவர்களுடைய முக்கியமான வேலைகள்; அதில் சிறிது தவறினாலும் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.



இந்தப் பயங்கரமான சூழ்நிலையில் அவர்கள் ராமையாவுக்கும், லட்சுமிக்கும் உதவினார்கள். ராமையாவையும், லட்சுமியையும் தீப்பந்தத்தால் சுட்டவன் அவர்களைக் காட்டிக்கொடுத்துவிடுவது சுலபம் அல்லவா! அதனால் அவனை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று துடித்துக்கொண்டு இருந்தார்கள். அவன் தானாகவே வந்து விழுந்துவிட்டான்.

பரபரவென்று கோட்டையின் உட்பகுதி மண்டபத்துக்குள் இழுத்துச் சென்றார்கள். அவர்களில் சிலர் முரட்டுத்தனமாக அவனிடம் நடந்து கொண்டார்கள். முகத்திலும், முதுகிலும் மாறி மாறிக் குத்தினார்கள். அவன் மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. அப்போதும் அவன் எதுவும் பேசவில்லை. தான் செய்த குற்றத்துக்கு இது சரியான தண்டனைதான் என்றே சகித்துக்கொண்டான்.

"நீ யார்? உண்மையைச் சொல்லிவிடு! இல்லையென்றால் ராமையாவின் சடலத்தோடு உன் சடலமும் சேர்ந்து எரிய வேண்டியிருக்கும்" என்றான் ஒருவன்.

பொம்மையாவுக்குப் பகீர் என்றது.

ராமையா இறந்துவிட்டானா? மூடப்பட்ட வண்டிக்குள் அவன் சடலம்தான் கொண்டு செல்லப்பட்டதா? கேட்ட அழுகுரல் லட்சுமியின் குரல்தானா?

அவன் வாய்விட்டுக் கதறிவிட்டான். "ஐயோ! அம்மா! அம்மா!" என்று மண்டபத்தூணிலே முட்டிக் கொண்டான்.

"ஏண்டா கதற்றே, சயவாளிப்பயலே! நீ யாருக்காக வேவு பார்க்க வந்தே? மரியாதையாகச் சொல்லிவிடு. கும்பினி அதிகாரிகிட்ட இதையெல்லாம் சொல்லிட்டியா? உள்ளதைச் சொல்லு. உன்னை விட்டுடறோம்" என்றான் ஒருவன்.

"செம்மைக்கு நாலு போடுங்க; அப்பதான் சொல்லு வான்" என்றான் அந்தக் கிழவி

பொம்மையா வாய் திறந்து பேச ஆரம்பித்தான்

"நீங்க நம்புனா நம்புங்க உண்மையை நான் சொல்றேன். நான் புரட்சிக்காரங்களில் ஒருத்தன். எங்களுக்காக கையெழுத்து வாங்கத்தான் ராமையாவும் லட்சுமியும் வந்தாங்க..." என்று தொடங்கி நடந்தவற்றை ஒன்று விடாமல் சொன்னான், பொம்மையா.

அவ்வளவையும் கேட்ட பிறகுகூடச் சிலர் அவனை நம்பத் தயாராயில்லை ஓரிருவர் அவன் சொன்னதை நம்பினார்கள்; அவன் சிறைக்குள் இருந்து சுரங்கத்துப் பாதையில் வந்ததனால், இதில் உண்மை இருக்கும் என்று எண்ணினார்கள். இல்லையென்றால் அவன் அந்த வழியாக வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

பொம்மையா தங்கள் திட்டத்தைக்கூட அவர்களிடம் சொல்லி விட்டான்.

"ராமையாவின் கையில் ஒரு ஓலை இருந்திருக்குமே; சுரங்கத்தில் இருந்து அதை எடுத்தீர்களா? அதை எடுத்துப் பாருங்கள், நான் சொன்னது உண்மை என்று நம்புவீர்கள்" என்றான்.

அந்த ஓலையை அவர்கள் பத்திரமாக வைத்திருந்தார்கள். ஒருவன் போய் அதை எடுத்து வந்து படித்தான். எல்லாருக்கும் பொம்மையாவிடம் நம்பிக்கை பிறந்தது. அவன் கைக்கட்டை அவிழ்த்து விட்டார்கள்.

"இப்பொழுதே நான் ராமையாவின் சடலத்தைப் பார்க்கவேண்டும். லட்சுமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று பதறினான் பொம்மையா.

"சரி, இடுகாட்டுக்குப் போவோம், வாருங்கள்" என்று காவலர்கள் இரண்டு பேர், அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.



பொம்மையாவின் மூக்கில் வழிந்த இரத்தத்தை அவர்களில் ஒருவன் அனுதாபத்தோடு துடைத்துவிட்டான். கோட்டைக்கு வெளியிலே வந்து குதிரைகள் மீது ஏறினார்கள் மூவரும்.

தூரத்தில் விசிலடிக்கும் சத்தம் கேட்டது.

குதிரையைத் தட்டிவிடப்போன பொம்மையா, அப்படியே அசையாமல் நின்றான். புரட்சிக்காரர்கள் ஒருவருக்கு ஒருவர் எழுப்பிக் கொள்ளும் ஒலிமுறை அது. காவலர்களுக்குத் தெரியாது. திகைத்து நின்ற பொம்மையாவைப் பார்த்து, "ஏன்?" என்று கேட்டார்கள்.

"அந்தக் கடிதம் கொடுத்து அனுப்பினார் என்று சொன்னேனே எங்கள் தலைவர் வீரத்தேவர், அவர் வருகிறார்" என்று கூறிய பொம்மையா, தானும் திருப்பி விசிலடித்தான். இலைகளுக்கு இடையே 'சர சர' வென்ற சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் வீரத்தேவன் தோன்றினான். பொம்மையாவின் அருகில் குதிரைகளில் இருந்த காவலர்களைப் பார்த்துவிட்டு, ஒரு கணம் பேசாமல் இருந்தான். பொம்மையாவைக் கைது செய்து விட்டார்களோ என்று அவனுக்குச் சந்தேகம் தட்டியது.

அதற்குள் பொம்மையாவே இறங்கி ஓடி வந்தான். வந்ததும் வராததுமாக, வீரத்தேவனின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினான். "என்னை மன்னித்துவிடு வீரத்தேவா, மன்னித்துவிடு! ராமையா இறந்துவிட்டான்; ராமையா இறந்து விட்டான்" என்று அழுதான்.

வீரத்தேவன் கண்கள் குளமாகின. "காரியம் கெட்டு விட்டது" என்று அவன் வாய் முணுமுணுத்தது; கைகளால் பொம்மையாவைத் தூக்கினான்.

"இனி அழுது என்ன பயன், பொம்மையா? இரண்டாம் தேதியன்று நாம் வெற்றி பெறுவது சந்தேகந்தான்"

என்றவன், காவலர்களை மீண்டும் கவனித்துவிட்டுத் தன் வார்த்தைகளை அடக்கிக் கொண்டான்.

காவலர்கள் இருவரும் குதிரைகளை விட்டு இறங்கி அவர்களிடம் வந்தார்கள்.

"எல்லாம் எங்களுக்குத் தெரியும். பிறகு பேசுவோம்; உடனே புறப்படுங்கள். இடுகாட்டுக்கு" என்றார்கள்.

வீரத்தேவனும் அவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு, திருப்தி அடைந்தவன்போல் தலையசைத்து ஒரு குதிரையில் ஏறிக் கொண்டான். பொம்மையாவும் அதே குதிரையில் அமர்ந்து கொண்டான். எல்லோரும் புறப் பட்டார்கள்.

கோட்டையில் இருந்து இரண்டு கல் தூரம் இருக்கும் இடுகாடு. அங்கே அவர்கள் வந்து சேர்ந்தபோதுதான் சிதையை அடுக்கிக் கொண்டு இருந்தார்கள். ராமையா வின் சடலம் போர்த்தப் பட்டுக் கிடந்தது; லட்சுமி அங் கிருந்த சிறு தகரக் கொட்டகையின் ஓரத்துக் கல்லில் தலை விரி கோலமாக உட்கார்ந்து அழுதுகொண்டு இருந்தாள். வண்டி ஓட்டி வந்தவனும் துணி மூட்டை கொண்டுவந்த வனுந்தான் சிதை அடுக்கும் வேலையில் ஈடுபட்டு இருந் தார்கள்.

வீரத்தேவனைக் கண்டதும் லட்சுமி 'ஓ' வென்று அலறிவிட்டாள். வீரத்தேவனும் குழந்தைபோலத் தேம்பி அழுதான். லட்சுமியின் முகத்தில் இருந்த தீக்காயங்கள் அவனுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணின.

பொம்மையா அவன் காலில் விழுந்து, "என்னை மன்னித்துவிடுங்கள் தாயே, மன்னித்து விடுங்கள். உங்களைச் சுட்டவனும், ராமையாவைக் கொன்றவனும் இந்தப் பாவிதான்; இந்தப் பாவிதான்" என்று அரற்றினான்.



நெருப்புப் படாமல் இருந்த ஒரு கண்ணை துடைத்து விட்டுக் கொண்டு அவனைக் கவனித்த லட்சுமிக்கு, மேலும் அழுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருந்தது. என்ன நடந்தது? யார் இவன்? என்பதைத் தெரிந்து கொள்வதில் அவள் அக்கறை காட்டவில்லை. வீரத் தேவனைக் கண்டதும் குமுறி அழுதுவிட்டாளே தவிர அவள் ஒரு தெளிவான முடிவோடுதான் இருந்தாள். ராமையாவைப் பிரிந்து நாம் இனி உயிர் வாழப்போவ தில்லை. அவனோடு உடன்கட்டை ஏறிவிடுவோம் என்றே அங்கு அமர்ந்திருந்தாள்.

வீரத்தேவன் போர்வையை விலக்கிவிட்டு, ராமை யாவின் சடலத்தைப் பார்த்தான். முகம் முழுக்கக் கருகிப் போயிருந்தது. அந்த உடலைத் தொட்டு வணங்கினான். தன் இதயத்தைக் கைகளால் பிடித்துக் கொண்டான். பெருகி வந்த கண்ணீரை ஒரு முறை வெளியனுப்பித் தன்னைத் தேற்றிக்கொண்டான்.

சிதையின்மீது ராமையாவின் உடலைக் கிடத் தினார்கள். அதன்மீது வறட்டியை அடுக்கப்போனார்கள்.

"கொஞ்சம் நில்லுங்கள்" என்றாள் லட்சுமி.

வறட்டி எடுத்த கைகள் அப்படியே நின்றன. கை களைக் கூப்பியபடி சிதையைச் சுற்றி வலம் வரத் தொடங் கினாள், லட்சுமி. வீரத்தேவன் நெஞ்சு பதைத்தது. பொம்மையா 'ஓ' வென்று அலறினான். காவலர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

"என்ன இது லட்சுமி! வேண்டாம்; வேண்டாம். உன்னைக் கும்பிடுகிறேன். இந்த முடிவை மாற்றிக் கொள்; இந்த முடிவை மாற்றிக் கொள்' என்றான் வீரத்தேவன்.

விரக்தி கலந்த நிலையில் லட்சுமி அப்படி நின்றாள்.

"அண்ணா! என்னை மன்னியுங்கள் இந்த அலங்கோ லமான நிலையில் நான் வாழ வேண்டும் என்று ஆசைப்

படாதீர்கள். நான் விதவையாக வாழ்ந்தாலும் பெரும் பணத்திலே வாழமுடியும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், அவரைப் பிரிந்து நான் தனியாக வாழ மாட்டேன். சேர்ந்து மடியும் பெருமைக்கு நான் ஆளா வதைத் தடுக்காதீர்கள். இப்போது வாழ்வைவிட எனக்குச் சாவிலேதான் அமைதி. நீங்கள் ஆசைப்படுவது போல், இதுவும் நாட்டுக்காகச் சாகும் சாவுதான்! என்னை வாழ்த்தி அனுப்புங்கள்'' என்றாள் லட்சுமி.

வீரத்தேவன் ''லட்சுமி'' என்று அலறினான்.

அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், மூன்று முறை சிதையைச் சுற்றிவிட்டு, கணவன் அருகில் படுத்தாள் லட்சுமி.

காவலர்கள் கண்களை மூடிக்கொண்டு, வறட்டியை அடுக்கினார்கள்.

வீரத்தேவனும் பொம்மையாவும் திரும்பி ஒரு மரத்திலே முகத்தைப் புதைத்துக் கொண்டார்கள்.

சிதை எரியத் தொடங்கிற்று.

நெருப்புக்கிடையில் லட்சுமியின் முனகல் குரல் கேட்டது.

துடித்த வீரத்தேவன், நெருப்பை விலக்கி அவளைத் தூக்கிவிட ஓடினான். அவன் கால்கள் அவனைப் பின்னுக்கு இழுத்தன.

நெருப்பு ஓலமிட்டு எரிந்தது.

''ஐயோ லட்சுமி'' என்று தலையில் அடித்துக் கொண்டான், வீரத்தேவன். வெகு நேரம் அப்படியே அழுது கொண்டு நின்றார்கள், எல்லாரும்.

சிதை எரிந்து அவிந்தது.

வீரத்தேவன் ஒரு பெரிய கல்லைத் தூக்கிச் சிதையின் அருகில் வைத்துவிட்டு ''ஊமைத்துரை வெளியில் வந்ததும்



உங்களுக்கு ஒரு 'மாலையீடு' கட்டி வணங்குவோம்'' என்றான். தேம்பிக்கொண்டிருந்த பொம்மையாவை மார்போடு அணைத்துக் கொண்டான்.

''கவலைப்படாதே, பொம்மையா. நாம் இரண்டு உத்தமமான நண்பர்களை இழந்துவிட்டோம். சிறை உடைப்புக்குக் கிடைக்கவேண்டிய பண உதவியையும் இழந்துவிட்டோம். போகட்டும். இரண்டாம் தேதி நிகழ்ச்சி தோல்வி அடையாமல் இருந்தால் போதும். அன்று நாம் வெற்றி பெற்றுவிட்டால் இந்தத் துயரங்களை மறந்து விடலாம். எப்படியும் பணம் தேடும் முயற்சியில் இப்போது இறங்குவோம். யாருடைய உதவியை இதற்கு நாடவேண்டாம் என்று எண்ணினேனோ, அவரிடமே நான் போய் வருகிறேன். சிவகெங்கை ராஜா பெரிய மருது சேர்வைக்காரரைப் போய்ப் பார்க்கிறேன். அது வரை நீ சிங்கத்தேவர் வீட்டில் போய் இரு; எதையும் மனத்தில் வைத்துக்கொள்ளாதே. சிறை உடைப்புக்கு இன்னும் சில தினங்கள்தான் இருக்கின்றன. அதுவரை யிலும் நீ எந்த வேலையும் பார்க்க வேண்டாம் ராமையா வும் லட்சுமியும் இறந்துபோன செய்தி, சுப்பிரமணிய பிள்ளைக்குத் தெரியாமல் இருப்பதே நலம்'' என்று கூறிய வீரத்தேவன், அப்போதே சிவகெங்கைக்குப் புறப்படத் தயாரானான்.

காவலர்கள் நல்ல வலுவுள்ள குதிரை ஒன்று தரச் சம்மதித்தனர். அப்படியே அவன் கோட்டைக்கு வந்து கொஞ்சம் 'ஆவாரம் பூ' தண்ணீராவது குடித்துவிட்டுச் செல்ல வேண்டுமென்று வற்புறுத்தினர்.

கோட்டைக்கு வந்த வீரத்தேவன், அவர்கள் விருப்பத் துக்கு இணங்க 'ஆவாரம் பூ'த் தண்ணீர் குடித்துவிட்டு, பொம்மையாவைத் தட்டிக்கொடுத்து விட்டுக் குதிரைமீது ஏறிக் கிளம்பினான்.

பொம்மையா, ''சிறை உடைப்பு அன்றைக்கு சுரங்கத்தின் வழியாகத்தான் ஊமைத்துரையைக்கொண்டு வர வேண்டியிருக்கும்'' என்று கோட்டைக் காவலர்களிடம் கூறிவிட்டு வெளியேறினான்.

## 6. மங்கரப் புகழ் படைத்த மறவர் பூமியில்!

இது சிவகெங்கை!

சிறிய கோட்டைக் கதவுகள்; அவற்றில் சதுரம் சதுரமாகச் சட்டங்களை அடித்து, குமிழ் குமிழாக வெண்கலக் குண்டுகளைப் பதித்திருக்கும் வீரங்கலந்த அழகு; நூறு அடிக்கு மேல் அகலமுள்ள தேரோடும் வீதி; இரு மருங்கிலும் வளைவுகளைத் தூண்களில் நிறுத்தி எளிமையோடு உறுதியாக அமைக்கப்பெற்ற அழகிய வீடுகள்; நகரின் ஒரு மூலையிலே யானைகளைக் கட்டுவதற்கு என்று ஒரு பெரிய தளம்; நகரின் நாலு மூலைகளிலும் எல்லை அரண்மனைகள்!

கழுத்துவரை வளர்ந்திருக்கும் தலைமுடியிலே கனமான கொண்டை போட்டு, இருபுறத்துக் 'கிருதா'வை கைப்பிடி அளவு கன்னத்தில் காதுவரை இறக்கிவிட்டு, மீசையை அதே கன்னத்தில் வளர்த்து 'கிருதா'வோடு இணைத்து விட்டு சாந்துப் பொட்டும் சந்தனப் பொட்டும் நெற்றியில் பதித்து, கீழ்க் காதுகளிலே சிவப்புக் கடுக்கன்களும், மேற் காதுகளிலே தங்கக்கொப்புகளும் மின்ன, இருகைகளிலும், கழுத்திலும் கருப்புக்கயிற்றால் புலி நகங்களைத் தொங்க விட்டு அகன்ற மார்பின்மீதும், வளர்ந்து குத்திட்டு நிற்கும் மயிர்க்கால்களிலும் வீர உணர்ச்சியை வளரவிட்டு, வயிற்றுக்குச் சந்தனம் பூசி, முழங்கால் வரையிலும் வேட்டியைக் கச்சமாகக் கட்டி, இரண்டு கணைக்கால்



களிலும் வீரக் கடயங்களை அணிந்து கொண்டு, கால் பெருவிரலுக்கு அடுத்த விரலுக்கு அடுத்த விரலில் வெள்ளி மிஞ்சிகளை அணிந்து கொண்டு கையில் ஈட்டியோடும் பகைவர்களின் முன் கனலையும், தமிழர்களின் முன் கருணையையும் பொழியும் கண்களை அலட்சியமாகச் செலுத்தியபடி வலம் வரும் ஆயிரமாயிரம் வீரர்கள் சிவகெங்கையின் செல்வங்கள்.

மார்புக்குக் கச்சை கட்டி, மனதுக்குக் கற்புக் கட்டி, முழங்காலுக்குக் கீழே கொஞ்சம் இறங்கிய அளவில் சேலை கட்டி, விழிகளிலே அன்பைக்கட்டி, கைகளிலே வீரத்தைக் கட்டி, குனிந்த தலை நிமிராது செல்லும் கோதையர்கள் மறவர்குல மாணிக்கங்கள்!

இத்தகைய சிவகெங்கையின் எல்லைக்கு வீரத்தேவன் வந்து சேர்ந்தான். குதிரைப் பயணத்தால் ஏற்பட்ட களைப்பு, மருதரசரிடம் உதவி கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை, சிறை உடைப்புக்கான நாள் நெருங்கிக்கொண்டு இருக்கிறதே என்னும் துடிப்பு— இவற்றோடு சிவகெங்கையில் இருந்து மூன்று கல் தொலைவில் இருந்த வழிப்போக்கர் விடுதியில் வந்து தங்கினான் வீரத்தேவன்

அழகிய அந்த விடுதி ஒரு வீடு போன்றது; அதன் காவல்காரர் பூரி ராமசாமித் தேவர் என்ற கிழவர். அவர் மனைவி கருப்பாயி ஆத்தாள். அவர்களுக்கு அஞ்சுகம் என்றொரு மகள். பூரி ராமசாமித் தேவர் முத்து வடுகத் தேவரின் படைக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கும் பணியில் இருந்தவர். முதுமை அந்த வேலையைச் செய்யவொட்டாமல் தடுத்ததால் மருதுபாண்டியர் ஆட்சிக்கு வந்ததும் விடுதிக் காவல் பொறுப்பை மேற்கொண்டார். இளகிய மனம் கொண்ட ராமசாமித் தேவருக்குப் பாஞ்சாலங்குறிச்சியாரிடத்தில்

அனுதாபம் உண்டு. சந்தர்ப்ப வசமாக வீரத்தேவன் அந்த விடுதியிலே தங்கினான்.

தேவர், வீரத்தேவனிடம் அனைத்தையும் விசாரித்தார். ஊமைத்துரையைப்பற்றித் தெரிந்துகொள்வதில் அதிக அக்கறை காட்டினார். அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதுதான் 'அல்லங்காடி'யில் (இரவுச் சந்தை) காய் கறியும் மீனும் வாங்கிவர நகருக்குள் சென்றிருந்த அஞ்சுகம் வந்து சேர்ந்தாள். பேசிக்கொண்டேயிருந்த ராமசாமித் தேவர், மகளைக் கண்டதும் திரும்பி, ''ஆத்தா! என்ன இவ்வளவு நேரம்?'' என்று கேட்டார்.

''தொண்டியிலேருந்து வண்டியெல்லாம் இப்பத்தான் அப்பா வந்தது; புதுமீனா வாங்கிக்கிணு வரலாமுண்ணு காத்துகிட்டிருந்தேன்; நெறய வாங்கிட்டேன் அப்பா!'' என்றாள் அஞ்சுகம்.

வீரத்தேவன் அவளையே முறைத்துப் பார்த்தபடி இருந்தான். அவன் மறவர் நாட்டை விட்டுக் கம்பளத்து நாயக்கர்களோடு சுற்றிக்கொண்டு இருந்ததால், புதிதாக மறவர் நாட்டுப்பெண்ணைப் பார்ப்பது அதிசயமாக இருந்தது அவனுக்கு. அந்தப் பார்வையில் நாணிய அஞ்சுகம், வேகமாக உள்ளே சென்றுவிட்டாள். கடமைக்கு வந்த இடத்தில் காதல் தன்னை இழுத்துக் கொள்ளும் என்று வீரத்தேவன் எண்ணியதில்லை! ஆனால், அன்றிரவு நடந்த சுவை மிக்க நிகழ்ச்சி, அவன் உள்ளத்தில் காதல் போதையையே ஏற்றி விட்டது.

எல்லை விடுதியில் எவ்வளவோ பேர் வந்து தங்கியிருக்கிறார்கள். குடும்பத்தோடு சிலரும், தனியாகப் பலரும் அங்கே வந்து தங்கியதை ஆச்சரியத்தோடு பார்த்ததில்லை அஞ்சுகம். இந்தப் புதிய வழிப்போக்கன் வீரத்தேவன் அவளை மிகவும் கவர்ந்தான். அவனைப் பார்த்ததற்குப் பின்னால் அவள் நடையிலே கூட மாற்றம் பிறந்தது.



மீன் வாங்கி வந்த பாத்திரத்தை அடுப்படிக்குள் வைத்த அஞ்சுகம், சமையலைப்பற்றித் தந்தையிடம் கேட்க வருபவள்போல் வீரத்தேவன் இருக்கும் இடத்துக்கு மீண்டும் வந்தாள். முதல் சந்திப்புக்குப் பிறகு ராமசாமித் தேவரிடம், வீரத்தேவன் பேசியதொனியே வேறு விதமாக இருந்தது.

உண்மையிலேயே அறிவுள்ளவன் தன்னைப் பற்றிப் பேசிக்கொள்ளமாட்டான். ஆனால் சில நேரங்களில் சில காரியங்களுக்கு அது தேவைப்படுகிறது.

அழகே உருவான அஞ்சுகத்தைப் பார்த்துவிட்ட வீரத்தேவன், தேவர் பேச்சைத் திருப்பி தன் பெருமையைப் பேசத் தொடங்கினான் திட்டமிட்டுக் கொண்டு அப்படிப் பேசவில்லை. இயற்கையாகவே தொண்டை அந்த நிலைக்கு வளைந்தது: அவன் இல்லாவிட்டால், ஊமைத் துரையின் விடுதலைக்கு முயல ஆள்கள் இல்லை ஆனால், அதை அவனே தான் சொல்ல வேண்டுமா? சொன்னான் வீரத்தேவன்.

மறைந்திருந்து கேட்டாள் அஞ்சுகம்! அந்தப் பெருமைகளைக் கேட்கக் கேட்க அவள் மேனி சிலிர்த்தது! ஆடவன் அழகு வீரத்திலேயே அடங்கியிருப்பதாகக் கருதுவது மறவர் நாடு! வீரத்தேவனுடைய வீரத்தில் அஞ்சுகம் மயங்கினாள். சிறிது நேரம் தன்னை மறந்து, மறைவில் இருந்து அவனையே பார்த்துக்கொண்டு இருந்த அவள் நினைவு வந்தவளாய், ''அப்பா, மீனைப் பொரிக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''என்ன தம்பி, உனக்கு எது பிடிக்கும்?'' என்று கேட்டார் தேவர்.

''கூட்டு எனக்குப் பிடிக்கும்'' என்றான் வீரத்தேவன்.

''மீனைக் கூட்டு வைப்பதா?'' அஞ்சுகம் திகைத்தாள்.

''கத்திரிக்காய்க் கூட்டும், மீன் பொறியலும்'' என்று விளக்கம் தந்தான், வீரத்தேவன்.

தேவர் சிரித்தார்.

அஞ்சுகம் உள்ளே சென்றாள்.

கருப்பாயி ஆத்தாளேசமைப்பது வழக்கம். இப்போது அஞ்சுகம் தானே சமைத்திருந்தாள்.

சமையல் முடிந்ததும் 'சிலேட்' விளக்கை எடுத்துக் கொண்டு, தநதையும், வீரத்தேவனும் இருக்கும் இடத்துக்கு வந்தாள் அஞ்சுகம் படுத்துப் புரண்டுகொண்டிருந்த வீரத்தேவனைப் பார்த்தும் பார்க்காதவளாய், ''சாப்பிடலாம்'' என்றாள்.

தேவர் வாரிக் கட்டிக்கொண்டு எழுந்தார். ''தம்பி எழுந்திரு எழுந்திரு!'' என்றார்.

வீரத்தேவன் எழுந்தான். கைகால்களைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

ஆத்தாளை முந்திக்கொண்டு அவளே பரிமாறினாள். தேவரின் இலையைவிட வீரத்தேவன் இலையில் கறிகள் அதிகமாக விழுந்தன. அஞ்சுகத்தின் மன வேகம் கை வழியே பாய்ந்தது.

வீரத்தேவன் நன்றாகச் சாப்பிட்டான். அடிக்கடி. 'சாப்பாடு பிரம்மாதம், பிரம்மாதம்!'' என்றான்.

கூட்டிலே உப்பு; மீன் புளிக்கிறது; சோறு குழைந்து விட்டது. தேவருக்கு இது தெரிகிறது; வீரத்தேவனோ பாராட்டியபடி நிறுத்தாமல் சாப்பிடுகிறான்.

பாய்விரித்து இரண்டு தலையணைகளைப் போட்டிருந்தாள் அஞ்சுகம் அதன் அருகிலேயே சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது தேவருக்கு. களைப்புற்றிருந்த வீரத்தேவன் சாப்பிட்ட உடனேயே படுத்துவிட்டான்; சில விநாடிகளிலேயே தூக்கம் அவன் கண்களைத் தழுவியது.



இந்த மாதிரி நேரங்களில் கனவு வராமல் போகுமா?

ஒரு பூங்கா, பல நிறமான மலர்கள் செழிப்போடு மலர்ந்திருக்கின்றன. நதி ஓடிக்கொண்டு இருக்கிறது. மறவர் சீமைக்கே உரித்தான உருளைக் கற்கள் மின்னிக் கொண்டு இருக்கின்றன.

வீரத்தேவன் அங்கே ஓடி வருகிறான். அவன் கால்களைத் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திருக்கின்றன. நெற்றியிலே இரத்தம் வழிந்து கொண்டு இருக்கிறது. மார்பிலே கீறல்கள். கீழே விழுந்து தகதித் தவழ்கிறான். ''அஞ்சுகம்! அஞ்சுகம்!'' என்று கதறுகிறான்.

அங்கே மலர் கொய்துகொண்டு இருந்த அஞ்சுகம் ஓடிவருகிறாள். அவனைக் கட்டிப்பிடித்துத் தூக்குகிறாள். முந்தானையைக் கிழித்துக் காயங்களுக்குக் கட்டுப்போடுகிறாள். அவன் முகத்தோடு முகம் வைத்து, ''கவலைப் படாதீர்கள்; கவலைப்படாதீர்கள்!'' என்கிறாள்.

அவன் மெதுவாக எழுந்து உட்காருகிறான்: அஞ்சுகத்தைத் தன் மடியிலே சாய்த்துக் கொள்கிறான். அவன் உடம்பில் இருந்த காயங்கள் மறைந்துவிடுகின்றன. அஞ்சுகத்தை அப்படியே வாரி எடுத்து, மார்போடு அணைத்துக் கொள்கிறான்.

மீசை குத்துகிறது. திடுக்கிட்டு விழிக்கிறாள். தேவரும் விழித்துக்கொண்டே, ''என்ன தம்பி!'' என்கிறார்.

வீரத்தேவனுக்கு இரண்டு வகையான சங்கடங்கள். கனவு கலைந்துவிட்டதே என்பது ஒன்று; தான் ஏதோ கனவு கண்டதைத் தேவர் தெரிந்துகொண்டு விட்டாரே என்பது மற்றொன்று ''ஒன்றுமில்லை... கனவு...'' என்று இழுத்தபடி திரும்பிப் படுத்துக் கொண்ட வீரத்தேவன், உறங்குவதற்கு முயன்றான்.

உறக்கமா வரும்? மெதுவாகக் கண்களை விழித்து, விடுதியின் இரண்டாங்கட்டைப் பார்த்தான்.

உள்ளே சிறு சிலேட் விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. அதன் அருகில் பாய் போட்டு அஞ்சுகம் தூங்கிக் கொண்டு இருந்தாள். அந்த மங்கலான வெளிச்சத்தில் அவள் முகத்தில் புது அழகு தென்பட்டது.

அப்படியே சிறிது நேரம் பார்த்துக்கொண்டு இருந்தான். சற்று புரண்டு படுத்தான். பிறகு எழுந்து உட்கார்ந்து விட்டான்.

தேய் நிலவு காலம். எனினும், வானத்தில் நிலவு இருந்தது. சற்று வெளியிலே போய் வருவோம் என்று புறப்பட்டான் வீரத்தேவன்.

பெரியதோர் திண்ணை இருந்த முன்பகுதிக்கு வந்தான். அவன் கால் ஒரு கூடையைத் தட்டிவிட்டது. மூடப்பட்டு இருந்த கோழி சத்தம் போட்டுக்கொண்டே தாவித் திண்ணைக்கு ஓடிற்று. வீரத்தேவன் திடுக்கிட்டு, அந்தக் கோழியைப் பிடித்து மூட முயன்றான். கோழி அவன் கைக்கு வந்ததும், பலமாகச் சத்தமிட்டது.

உள்ளே அரைகுறையாகத் தூங்கிக் கொண்டிருந்த அஞ்சுகம், கோழியின் சத்தத்தைக் கேட்டு உடனே விழித்துக் கொண்டாள். எவனோ திருடன் போலிருக்கிறது என்று எண்ணி, கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டாள்.

வீரத்தேவன் படுத்திருந்த இடத்தைக் கடந்துதான் வெளியே வரவேண்டும். படுக்கை அருகில் வந்தபோது பார்த்தாள். வீரத்தேவனைக் காணோம். சந்தேகத்தோடு வெளியே வந்தாள். அங்கே வீரத்தேவன் கோழியைப் பிடித்து மூடுவதை நிலா வெளிச்சத்தில் கண்டாள்.

''கூடையைத் தட்டிட்டீங்களா?'' என்றாள் மெதுவாக.

வீரத்தேவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''ஆமாம்...'' என்று இழுத்தான்.



''குத்தமில்லை... நான் மூடறேன்; நீங்க போய்ப் படுத்துக்கங்க...'' என்றாள்.

''மூடிட்டேன்'' என்றான் அவன்.

''காத்து வரலையின்னா வெளியில் படுத்துக்கறீங்களா?'' என்றாள் அவள்.

வீரத்தேவன் மெதுவாகச் சிரித்தபடி, ''அடுப்படியில் மட்டும் காத்து வருதா?'' என்றான்.

அவன் கேட்டது அவளுக்குப் புரியவில்லை. அவளையும் வெளியில் வந்து தூங்கச் சொல்கிறானா? பொல்லாதவனாக இருப்பான் போலிருக்கிறதே!

அவள் பதில் சொல்லாமல் உள்ளே போய், அவன் படுத்திருந்த பாயைச் சுருட்டி எடுத்துக்கொண்டு வெளியில் வந்தாள். திண்ணையில் அதை விரித்தாள்.

வீரத்தேவன் உட்கார்ந்தான். பரிதாபமாக அவளைப் பார்த்தான்.

உள்ளே சென்றுவிட அவளுக்கு மனமில்லை. வெளிப்புறத்தில் கீழே இறங்கி, மரத்தடியில் போய் நின்று கொண்டாள்.

வீரத்தேவன் எழுந்து, படபடக்கும் நெஞ்சத்தோடு அவள் அருகில் போனான்.

அவன் வருவது அவள் காதுகளுக்குக் கேட்டது. திரும்பிப் பார்க்காமல் நின்று கொண்டிருந்தாள்.

வீரத்தேவன் காற்றுக் குரலில், ''அஞ்சுகம்!'' என்றான்.

''உம்...''— அவள் நிமிரவில்லை.

''ஏன் இங்கேயே நின்று விட்டாய்?''

''உள்ளே காத்து வரலை...''

''இங்கேயேதான் நிற்கப் போகிறாயா ?''

''உட்காரப் போகிறேன் !''

''நீ தனியா இங்கே இருக்கலாமா ?''

''தனியா இருக்கையில் நீங்க வந்து போகலாமா?''

''என்றைக்குமே என் மனசு இப்படித் துடிச்சதில்லை; யாரையும் நான் நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டேன். இன்னைக்கு என் மனசே கெட்டுப் போச்சு !''

''இப்படித்தான் எல்லார் கிட்டயும் பேசுவீங்களா ?''

''எந்தப் பொண்ணுகிட்டயும் நான் பேசினதில்லை.''

''இல்லாமலா இவ்வளவு தைரியம் வரும் ?''

''உறுதியாகச் சொல்கிறேன் ; புரட்சியில்தான் எனக்குப் பழக்கம்.''

''காதல் புரட்சியிலயா ?''

''பாத்தியா, என்னைத் தப்பாவா கணக்குப் போடுறே? அஞ்சுகம் ! உன்னைக் கண்ட உடனேதான் எனக்கு என்னமோ போலிருக்கு ! எனக்கு அப்பா, ஆத்தா யாரும் இல்லை. ஒரு தங்கச்சி இருந்தா அவளையும் யாரோ தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்க....''

—இதைச் சொல்லும்போது வீரத்தேவன் குரல் தழுதழுத்தது.

அஞ்சுகம் பரிதாபத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

வீரத்தேவன் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்ததைக் கண்டாள்.

''அழாதிங்க, அழாதிங்க !'' என்றாள்.

அவன் கண்களைத் துடைக்கக் கையை நீட்டியவள், பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.



''அஞ்சுகம் !'' என்றான் வீரத்தேவன்.

காதல் பொங்க, ''என்ன ?'' என்றாள் அஞ்சுகம்.

அப்படியே அவளை அணைத்துக் கொண்டான் வீரத்தேவன்.

நிறைந்திருந்த கண்ணீர் வழிந்து அஞ்சுகத்தின் முகத்தில் விழுந்தது. அவள் முழுக்க முழுக்க அவன் வசமானாள்.

பிறகு அவர்கள் பேசினார்கள், பேசினார்கள்; விடியும் வரை பேசினார்கள் பாதையிலே மாடுகள் செல்வதைப் பார்த்துப் பொழுது விடிந்துவிட்டதை உணர்ந்து விலகினார்கள். ஒருவர் இல்லாமல் ஒருவர் இல்லை என்ற முடிவுக்கு இருவரும் வந்திருந்தார்கள்.

ராமசாமித் தேவர் அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தார் வீரத்தேவன் அவரை எழுப்பினான். ஆத்தாளை மகன் எழுப்பினாள். அப்பொழுதே தேவரும் வீரத்தேவனும் சிவகெங்கைக்குப் போகப் புறப் பட்டார்கள்.

அஞ்சுகம் அவசர அவசரமாகச் சூடான 'ஆவாரம் பூந்தண்ணீர்' போட்டுக்கொண்டு வந்தாள். ஒரு குவளையைப் பெருமையோடு தந்தையிடமும் மறு குவளையை உரிமையோடு வீரத்தேவனிடமும் கொடுத்தாள். அவளையே பார்த்தவண்ணம் சுவைத்து அருந்தினான், வீரத்தேவன். பிறகு தேவரோடு புறப்பட்டான்.

## 7. சின்ன மருது செய்த முடிவு

சிவகெங்கை அரண்மனை அதிகாலையிலேயே சுறுசுறுப்பாக இருந்தது. வெளியிலே காவல்காரர்கள் இல்லை. தேவரும், வீரத்தேவனும் உள்ளே நுழைந்தார்கள்.

மூத்த மருதுபாண்டியர் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலை உணவு முடிவதற்குள், தன் கீழ் இருப்பவர்களுக்கு இடவேண்டிய ஆணைகளை இட்டுவிடுவார். தேவரும், வீரத்தேவனும் வந்தபோது சருகணி மாதா கோயிலுக்கு அளிக்கப் போகும் செப்புப் பட்டயத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தார். மறுநாளைக்கு மறுநாள் குன்றக்குடி முருகனுக்கு அவரது சாத்துபடி. ஏராளமான இளநீரும், பழங்களும் வண்டியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

செப்புப் பட்டயத்தைத் துடைத்து, பக்கத்தில் இருந்த ஒரு காரியஸ்தரிடம் கொடுத்துவிட்டு, வண்டிகள் இருக்கும் இடத்துக்கு வந்தார். தேவரும் வீரத்தேவனும் அங்கே வந்தார்கள். அவர்கள் வணங்குவதற்கு முன்னாலேயே, மருதேந்திரர் அவர்களைக் கண்டு கொண்டு ''வணக்கம் ஐயா! தேவர் மகன் என்ன திடீரென்று அதிகாலையில்.... ?'' என்று இழுத்தார்.

ராமசாமித் தேவர் மரியாதையோடு கைகளைக் கட்டிக்கொண்டு, ''ஒன்றுமில்லை .... இவர் பாளையங் கோட்டையில் இருந்து தங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். சமூகத்தில் பல விஷயங்கள் பேச வேண்டுமாம். இரவு நம் விடுதியில்தான் தங்கினார் ...'' என்றார்.

''அப்படியா ? பாளையங்கோட்டையில் இருந்தா ? மிக்க மகிழ்ச்சி. ஏதேனும் விஷயம் உண்டா ?'' என்று கேட்டார் மருதேந்திரர்.

வண்டியில் இளநீர் ஏற்றிக்கொண்டு இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். வீரத்தேவன் அங்கே எல்லா விஷயங்களையும் சொல்வதற்குத் தயங்கினான். அவனது தயக்கத்தைக் கண்ட மருதரசர் ஏதேனும் இரகசியம் இருக்கலாம் என்று கருதி, ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தார்.



மூவரும் அரண்மனை சலவைக்கல் மண்டபத்தில் வந்து அமர்ந்தார்கள்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டார், மருதேந்திரர்.

''நான் பாளையங்கோட்டையில் இருந்து வருகிறேன். குமாரசாமித்துரை ஒன்றரை ஆண்டுகளாச் சிறைச்சாலையில் கிடக்கிறார். நாங்கள் பத்தாயிரம் இளைஞர்களுக்கு மேல் ஒன்றாகச் சேர்ந்து, பாளையங்கோட்டைச் சிறையை உடைத்து அவரை விடுவிப்பதென முடிவு கட்டிக் கொண்டு இருக்கிறோம். எல்லாவற்றையும் ஓரளவுக்குத் திட்டமாகவே செய்து வைத்திருக்கிறோம். பணக்கஷ்டம் தான் சொல்ல முடியாத கஷ்டமாக இருக்கிறது. நெல்லேலி சுப்பிரமணிய பிள்ளை பணம் கொடுக்கச் சம்மதித்தார். ஆனால் ஊமைத்துரையின் கையெழுத்தை வாங்க முயன்றோம்; அது முடியவில்லை. நாளோ நெருங்கிக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் எங்களுக்கு உதவக்கூடியவர்கள் தாங்கள்தான் என்பதால் சமூகத்தை நாடிவந்தேன்'' என்று நிறுத்தினான் வீரத்தேவன்.

மூத்த மருதுபாண்டியர் இந்தச் செய்திகளை அமைதியாகக் கேட்டார். கவலையோடு சிந்தனையில் ஆழ்ந்தார். வீரத்தேவன் மனம் அடித்துக்கொண்டது. மருதேந்திரர் சொல்லப்போகும் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தான்.

''ஊமைத்துரையை விடுதலை செய்வதன் மூலம் என்ன பலன் விளையும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ?'' என்று கேட்டார் மருதேந்திரர்.

''மீண்டும் பஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கட்டுவது; கும்பினியாரை முறியடிப்பது—இவையெல்லாம் அடுத்தடுத்து உள்ள திட்டங்கள்'' என்றான் வீரத்தேவன்.

''நடக்கக்கூடியவற்றைச் சிந்திப்பது நல்லது. பெரும்பாலான பாளையங்களை அழித்துவிட்டார்கள், கும்பினியார். சண்டை என்றாலே மக்களுக்குச் சலிப்பு வந்து

விட்டது. பயனற்ற சண்டைகளில் காலமும், பொருளும், உயிர்களும் அழிவதை அவர்கள் விரும்பவில்லை. நிச்சயமாகப் பாஞ்சாலங்குறிச்சி அரசை மறுபடியும் நிலைக்க வைக்க முடியும் என்றால், இந்த முயற்சி செய்வதில் எனக்கு மறுப்பில்லை. பொம்மு நாயக்கரைக் காட்டிலும், இளைய நாயக்கருக்கு மக்களிடம் செல்வாக்கு இருப்பதை நான் கேள்விப்பட்டேன். என்னதான் இருந்தாலும், வெள்ளைக்காரத் திருடர்கள் கணக்கில்லாத பீரங்கிகளைக் கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். உங்கள் முயற்சியை நான் பலவீனப்படுத்துவதாக நினைக்கக் கூடாது. 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.' படபட வென்று ஓடிப்போய் எதிலும் விழுந்து சாவதை நான் விரும்பமாட்டேன். கொஞ்சம் காலம் தாழ்த்தினால் காரியம் முடியும் என்றால், அதுவரை கோழை போல் இருப்பதில்கூடத் தவறு இல்லை. இன்றைக்குச் சிவகெங்கை இருக்கிற வசதிக்கு, புதுக்கோட்டையைக் கூடப் பிடித்துவிட முடியும். அந்த வெற்றி என்றும் நிலைக்குமா என்பதைத்தான் நினைக்கவேண்டும். நான் சொல்லுவதைத் தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம். பத்தாயிரம் இளைஞர்கள் சின்ன நாயக்கருக்காகத் திரண்டு எழுகிறார்கள் என்பதே பெருமைக்குரியதுதான். ஏதோ முயலுங்கள். உங்களுக்கு வெற்றிகிட்ட வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன். பொருளுதவி சம்பந்தமாகத் தம்பியைக் கலந்து பேசுகிறேன். பாளையத்தின் வரவு செலவுகளை அவன்தான் கவனித்து வருகிறான். எதற்கும் இன்று மாலை மீண்டும் சந்தியுங்கள்'' என்றார் மருதேந்திரர்.

''நம்பிக்கையோடு இருக்கிறேன்'' என்றான் வீரத்தேவன்.

''இப்போதே உறுதி சொல்லும்படி என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம். மாலையில் வந்து பாருங்கள்'' என்று கூறிவிட்டு எழுந்தார் மருதேந்திரர்.



''போய் வருகிறேன்'' என்று கையெடுத்துக் கும்பிட்டார் ராமசாமித் தேவர்.

''போய் வாருங்கள். அஞ்சுகம் சுகமாக இருக்கிறாளா? ராக்காத்தாளுக்கு அவளைத்தான் மிகவும் பிடித்திருக்கிறது ...!'' என்றபடி சிரித்தார் மருது பாண்டியர்.

''சுகமாய் இருக்கிறாள். மாலையில் அவளையும் அழைத்துக்கொண்டு வருகிறேன்'' என்று கூறி விட்டுப் புறப்பட்டார், ராமசாமித் தேவர்.

வீரத்தேவன் அவரைப் பின் தொடர்ந்தான்.

மருதரசரோடு இவர்கள் பேசிய பேச்சை மறைவில் இருந்து கவனிதுக்கொண்டிருந்தான் கறுத்தான் என்னும் ஒரு தளபதி. மருதரசரிடம் அவனுக்குச்செல்வாக்கு அதிகம். வெளிவாசலை நோக்கிப் போய்க்கொண்டிருந்த வீரத்தேவனையும், ராமசாமித்தேவரையும் அவன் நிறுத்தினான்.

''ஓய், தேவரே! கம்பளத்தான் சம்பந்தமாய் எவனும் இங்கே வரக்கூடாது. பஞ்சாலங்குறிச்சி பொட்டைக்காடாய் ஆனதுபோல் சிவகெங்கையும் ஆக நாங்கள் விரும்பவில்லை. மரியாதையாக இவனை இப்பொழுதே பாளையங்கோட்டைக்கு அனுப்பிவிடும். ஊமைத்துரை செத்தால் என்ன வாழ்ந்தால் என்ன? ஜாக்கிரதை!'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

ராமசாமி தேவருக்குத் 'திக்' கென்றது. வீரத்தேவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது

இருவரும் அரண்மனை வாசலை விட்டு வெளியே வந்தார்கள். வீரத்தேவன் எதுவுமெ பேசவில்லை. அவன் வெகுவாகக் கலங்கி இருந்தான். ராமசாமித் தேவரும் அமைதியாகவே வந்துகொண்டிருந்தார். மருதரசர் மனத்தைக் கலைக்க, கறுத்தானால் முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

தெற்கு வாசல் வரையும் இருவரும் பேசாமலேயே வந்தார்கள். வீரத்தேவனுடைய கவலை படிந்த முகத்தைக் கண்ட ராமசாமித்தேவர் அவனை அமைதிப் படுத்த விரும்பிப் பேச்சைத் தொடங்கினார்.

''நீ ஒன்னும் மனசைத் தளர விட்டுடாதே. கறுத்தான் இப்படித்தான் பேசுவான். பெரிய மருதுபாண்டியர் இவன் பேச்சுக்குக் கட்டுப்படுவார். இருந்தாலும், சின்னப் பாண்டியரையும் பார்ப்போம். அவருக்குப் போர் என்றால் தான் ஆசை. திண்டுக்கல்லிலேயே அவர் சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறார். படை பலத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகக் கொஞ்சம் அமைதியாக இருக்கிறார். இதுமாதிரி ஒரு சந்தர்ப்பம் வருகிறது என்றால் அவர் நிச்சயமாக உதவி செய்வார். இந்தக் கறுத்தானையும் அவர் மடக்கி விடுவார். வேண்டுமானால் பார், உனக்குச் சிவகெங்கையின் உதவி கிடைக்கும்!''

வீரத்தேவனை அமைதிப்படுத்தத்தான் தேவர் இவ்வளவும் சொன்னார். ஆனால், அவருக்கே சந்தேகந்தான் இருந்தது. எட்டாண்டுக் காலம் திண்டுக்கல்லிலும் விளாமடத்திலும் வத்தலக்குண்டிலும், மேட்டுப்பட்டியிலும் அலைந்து மருதுபாண்டியர், கூடுமானவரை தம் நிம்மதியின்றி, காலம் முழுவதிலும் சிவகெங்கை அமைதியாக வாழட்டும் என விரும்புவதைத் தேவர் அறிவார். சலவைக் கல் மண்டபத்தில் கூட, போரைப்பற்றிச் சலிப்போடுதான் பேசினார், பெரிய மருதுபாண்டியர் இருந்தாலும், சின்ன மருதுவிடம் நம்பிக்கை இருந்தது.

''யார் அந்தக் கறுத்தான்?'' என்று கேட்டான், வீரத்தேவன்.

''அவன் இந்தப் பக்கத்து ஊர்க்காரன்தான். வேட்டையாடுவதிலே மிகவும் கெட்டிக்காரன்; துப்பாக்கி சுடுவதில் நிபுணன்: ஏராளமான கரடிகளையும் சிறுத்தைப் புலிகளையும் கொன்றிருக்கிறான். அவன் வீரத்துக்காகவே



மூத்த மருதேந்திரர் அவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார். மருதேந்திரர் குடும்பத்தைவிட இன்றைக்கு நிம்மதியாக இருப்பது அவன் குடும்பந்தான். வாரச் சந்தைகளில் மகமைப் பணம் வசூலிப்பதுகூட அவன் பொறுப்புத்தான். சிவகெங்கையில் எல்லோருக்குமே அவனிடம் கொஞ்சம் பயம் உண்டு'' என்றார் தேவர்.

''இவ்வளவு செல்வாக்குள்ளவன் இப்படிப் பேசும் போது மருதரசரின் உதவி எங்கே கிடைக்கப் போகிறது!'' என்றான் வீரத்தேவன்.

''அப்படிச் சொல்வதற்கு இல்லை. எதற்கும் மாலையில் சந்திக்கும் போது, இந்தப் போராட்டத்தில் வெற்றி நிச்சயம் என்பதை அவருக்கு உறுதியாகக் கூறு. முயற்சி பலிக்காது என்றால்தான் மருதரசர் எதையும் தட்டிக் கழிப்பார். நடக்கக்கூடிய காரியங்களில் தொல்லைகளைப் பொருட்படுத்த மாட்டார்'' என்றார், தேவர்.

இருவரும் விடுதிக்குவந்து சேர்ந்தபொழுது, அஞ்சுகம் புத்தாடை புனைந்து அழகே உருவாக எதிரே நின்றாள். விடுதிக்கு முன்னே இரண்டு கூட்டு வண்டிகள் அவிழ்க்கப் பட்டுக் கிடந்தன. யாரோ வழிப்போக்கர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைத் தேவர் தெரிந்துகொண்டார்.

''என்னப்பா! என்ன ஆச்சு?'' என்று கேட்டாள் அஞ்சுகம்.

''சாயங்காலம் திரும்பவும் போகிறோம்'' என்றார் தேவர்.

அவள் வீரத்தேவன் முகத்தைப் பார்த்தாள். அந்த முகம் வெற்றியைக் காட்டவில்லை.

''கண்டிப்பாக உதவி கிடைக்கும்'' என்று மிகவும் தெரிந்தவள் போல் சொன்னாள். அப்போதும் வீரத்தேவன் முகம் மலரவில்லை.

''ராணியம்மாளிடம் நானும் வந்து சொல்கிறேன். ராணியம்மாள் சொன்னால், ராசா கேட்பார். அப்பொழுதே உதவி கிடைக்கும்'' என்றாள், அஞ்சுகம்.

எப்படியாவது வீரத்தேவனின் முகத்தை மலரவைத்துப் பார்க்க வேண்டும் என்பதே அவள் ஆசை. வீரத்தேவன் இதைப் புரிந்துகொண்டான்; ஒப்புக்காகச் சிரித்தான். அவள் உள்ளம் குளிர்ந்தது.

மூவரும் உள்ளே நுழைந்தார்கள். அங்கே புதிதாக வந்த இரண்டு குடும்பங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தன. கருப்பாயி ஆத்தாள் சமையல் வேலையில் ஈடுபட்டு இருந்தாள். விடுதிக்கு மானியமான நிலங்களில் இருந்து, பொருள்கள் வந்து குவிந்திருந்தன.

இந்தக் குடும்பத்தினர் எங்கிருந்து வருகிறார்கள் எனத் தேவர் விசாரித்தார். பாளையங் கோட்டையில் இருந்து வருவதாக அவர்கள் சொன்னார்கள். வீரத்தேவன் அவர்கள் பேச்சைக் கூர்ந்து கவனித்தான். பாளையங் கோட்டையில் ஏதோ கலவரம் வரப்போவதாகப் பீதி கிளம்பிற்றாம். இதனால் பல குடும்பங்கள் பாளையங் கோட்டையை விட்டே வெளியேறிவிட்டனவாம். அவர்களும் சிவகெங்கைக்கு வந்து பிழைத்துக் கொள்ளலாம் என்று வந்திருக்கிறார்களாம்.

அந்தக் குடும்பங்களில் இருந்த ஒரு முதியவர், மிகவும் சலிப்போடு சொன்னார்: ''சனியன் பிடிச்ச இந்தச்சண்டை எப்பத்தான் ஓயுமோ, கடவுளே! நாங்கள் எப்பத்தான் நிம்மதியா ஒரு வேளை சாப்பிடுவோமோ! இந்த சண்டாளன் கட்டபொம்மன் பண்ணின வேலை உலகத்துக்கே நிம்மதியில்லாமப் போச்சு. காடு கழனியைக் கவனிக்க முடியலை. வயக்காடு வெளஞ்சு நாலு வருஷம் ஆச்சு. உழுக ஆரம்பிச்சா, சண்டை; வெதை பாவுற நேரத்தில சண்டை! நாத்து நடக்கூட நாதி இல்லாமப் போச்சே, கடவுளே; எல்லாத்தையும் வெள்ளைக்காரன் எடுத்துக்



கிட்டா, ஊர்ல அமைதியாவது இருக்கும்! ஒவ்வொருத்தனுக்காக ஆயிரம், ரெண்டாயிரம் பேர் செத்து... தினசரி சந்தையில் இருக்கிற கூட்டத்தைவிடச் சுடுகாட்டில் அல்ல அதிகமா இருக்கு!... இவளைப் பாருங்க அய்யா! என் மகள், கட்டிக்குடுத்த ஆறு மாசத்தில் அறுத்திட்டு வந்திட்டா; பட்டாளத்தில் போய்ச் செத்துப் போயிட்டான் மாப்பிள்ளை. என்ன பண்ணப் போறமோ, ஆண்டவன் எந்தவழி விடுவானோ! சொந்தக்காரங்க, தூரக்காரங்களைச் சந்திக்கக்கூட முடியாமப் போச்சு. நல்ல வேளையா, இந்த ஊராவது சங்கடமில்லாம இருக்கு; அதனால்தான் இங்கே வந்தோம். இல்லைன்னா எங்களுக்குப் போக்கிடம் ஏதுய்யா?''

தேவருக்கு கலக்கம் மிகுந்தது.

வீரத்தேவன் வேதனையோடு பட்டியல் கல்லில் அமர்ந்துவிட்டான்

சிறையை உடைக்கப்போகிற செய்தி, எங்கே வெளியாகிவிட்டதோ என்ற கவலை அவனுக்கு. இப்படிச் சலித்துப் போயிருக்கிற மக்களை எப்படித் திரட்டப் போகிறோம் என்றும் கலங்கினான்.

காணாமல்போன தங்கைக்காக அவன் நெஞ்சம் எவ்வளவு கலங்கிற்று! கணவனை இழந்த மகளுக்காக ஒரு தந்தை கொள்ளும் கலக்கம் அதைவிடப் பெரிது அல்லவா! போரில் அவனுக்கும் ஆசை இல்லைதான். ஓர் ஊமைத்துரைக்காக எவ்வளவு பேர் சாகவேண்டி இருக்குமோ என்பதும் அவன் நெஞ்சைத்துளைத்தது. இருப்பினும் அவன் மறவனாகையால், எடுத்த காரியத்தை முடித்துவிட வேண்டும் என்பதற்காக நெஞ்சைத் திடப் படுத்திக்கொண்டான்.

பாளையங்கோட்டையில் கிளம்பிய பீதிக்கு அடிப்படை என்ன என்பதை அவர்களிடம் விசாரித்தான். வெள்ளைக் காரர்களின் தமிழ்ப் பட்டாளம் ஏராளமாக அங்கே குவிக்

கப்பட்டு இருக்கிறதாம். அந்தப் பட்டாளம் கன்னிப் பெண்களைத் தூக்கிக்கொண்டு போகப் போவதாக வதந்தி உலவிற்றாம். அதனால் தான் பல குடும்பங்கள் வெளியேறினவாம்!

''அப்பாடா!'' என்று பெருமூச்சுவிட்டான்வீரத்தேவன்

அன்று மாலை, தேவர், வீரத்தேவன், அஞ்சுகம் மூவரும் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அந்த நேரத்தில் சிவகெங்கையின் தெருக்களைக் கவனித்தான் வீரத்தேவன். வேடிக்கைகளும், விநோதங் களும், முகமலர்ச்சியும், உற்சாகமும், நாட்டியங்களும், கூத்துக்களும், சிலம்பு விளையாட்டுக்களும் வீரத் தேவனுக்குப் பொறாமையே ஏற்பட்டது. இந்த உற்சாகம் திருநெல்வேலிப் பகுதியில் இல்லையே! பீதியும் பயமும் அல்லவா அங்கே நிறைந்து வழிகின்றன!

மருதரசர் ஆட்சியிலே அவனுக்குப் பெருமிதம் ஏற்பட்டது. 'இந்த மகிழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ள அவர்தான் எப்படி விரும்புவார்? அவர் உதவி செய்ய மறுத்துவிட்டால்கூடத் தவறு இல்லை' என்று கருதினான் வீரத்தேவன். அப்படியே உதவி செய்ய அவர் சம்மதித்து விட்டால், அதை வெள்ளைக்காரர்களுக்குத் தெரியாமல் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினான்.

கம்பீரமான அரண்மனையின் முகப்பு வாசலுக்குள் அவர்கள் நுழையும்போது, முதல் முதலில் அவர்களை எதிர்கொண்டவன், கறுத்தான். அவனைக் கண்ட உடனேயே தேவருக்கு ஏழு நாடிகளும் அடங்கி விட்டன. வீரத்தேவன், அவனிடமும் ஓர் அனுதாபத்தை எதிர் பார்த்தவனாய், பரிதாபத்தோடு அவனைப் பார்த்தான்.

''என்ன தேவரே! நீர் மரியாதையைதக் கெடுத்துக்காமப் போக மாட்டீர்... இல்லையா! ஒங்க ஆத்தா அப்பன் சம்பாதிச்சது இருந்தா, ஊமைத்துரைக்குக் கொடுத்து



அனுப்பும்... ராசாவை நீங்கள் பார்க்கமுடியாது'' என்றான் கறுத்தான்.

''இன்னிக்கு சாயங்காலம் எங்களை வரச்சொன்னார். அதுக்காகத்தான் வந்திருக்கோம்...'' என்று பணிவோடு சொன்னார், தேவர்.

''இல்லைன்னு சொல்றதுக்குத்தான் வரச்சொன் னார். அதை நானே சொல்லிட்டேன்; போகலாம்'' என்றான் கறுத்தான்.

''நீ என்ன சொல்றது? நீ யார் சொல்றதுக்கு?'' என்றாள், அஞ்சுகம். தேவர் அவள் வாயைப் பொத் தினார்.

இவர்களைச் சித்திர மேன்மாடத்தில் இருந்து கவனித் தார் பெரிய மருதுபாண்டியர். ஓர் ஆளை அனுப்பி அவர்களை அழைத்து வரச்சொன்னார்.

அந்த ஆள் வந்து அவர்களை அழைக்கும்போது கறுத்தானும் கூடவே சென்றான். சரி, காரியம் முடியாது என்றே முடிவு கட்டிக்கொண்டான், வீரத்தேவன்.

மாடத்தில் இருந்த மருதுபாண்டியர் முகப்புக்கு இறங்கி வந்தார். மூவரையும் அமர வைத்தார். கறுத்தான் நின்றுகொண்டிருந்தான். அவன் நிற்பது மருதரசருக்கும் சங்கடமாகவே இருந்தது. ஆனால், அவனைப் போகச் சொல்லும் துணிவு அவருக்கும் இல்லை! அவனும் சிவ கெங்கையின் நலம் நாடுபவன் தானே என்ற எண்ணத்தில் பேசத் தொடங்கினார்.

முதலில் சம்பந்தம் இல்லாத விஷயங்களையே ஆரம்பித்தார். அஞ்சுகத்தைப் பார்த்து, ''என்ன அஞ்சுகம்! நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறாயே! இந்தப் பெண்களே இப்படித்தான்; கண்ணுக்கு முன்னாலேயே வளர்ந்துவிடுகிறார்கள்!' என்று சிரித்தார். தேவரும் வீரத்தேவனும் சேர்ந்து

சிரித்தார்கள். அஞ்சுகம் வெட்கத்தோடும், உரிமையோடும் அந்தப்புரத்துக்கு ஓடினாள்.

தேவரைப் பார்த்து, "தம்பியிடம் எல்லா விஷயங்களையும் கலந்தேன். இளைய நாயக்கரின் விடுதலையில் அவனுக்கு மிகவும் ஆர்வம் இருக்கிறது. இருந்தாலும், மற்ற காரியஸ்தர்கள் விரோதமாக இருக்கிறார்கள். என்னதான் ஊமைத்துரையை விடுவித்தாலும், பாஞ்சாலங்குறிச்சியை மீண்டும் நிலைக்க வைக்க முடியாது என்று நம்புகிறார்கள். நானே மிகவும் சலித்துப் போயிருக்கிறேன். வருகிற வருமானத்தைக்கொண்டு ஆலயம் அன்னசத்திரம் இவற்றைக் கட்டி வைத்து, சிவகெங்கையைச் செழிப்பாக்க வைத்துக்கொண்டிருக்க ஆசைப்படுகிறேன். குன்றக்குடிக் கோவிலுக்கு மட்டும் கிட்டத்தட்ட ஐந்து லட்சத்துக்கு மேல செலவு. ஆத்தங்குடி, சேனா காவன்னா காடன் செட்டியார் வகையில் சிறிது கடன்கூட வாங்க வேண்டி வந்துவிட்டது. நாட்டுத் தொழிலுக்கு பணம் போடுகிறவர்கள்கூட, சண்டை என்றால் போட மறுக்கிறார்கள். உமக்குத்தான் சிவகெங்கையைப் பற்றி நன்றாகத் தெரியுமே; மற்றபடி கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை" என்று கூறிய பெரிய மருது பாண்டியார், வீரத்தேவனிடம் திரும்பி, "ஏதோ உங்கள் கை பலத்தைக்கொண்டு முயற்சி செய்யுங்கள் பின்னால் ஒரு காலத்தில் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்றார்.

வீரத்தேவனுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. "ஒரு லட்சம் வெள்ளி கிடைத்தாலும் போதும்..." என்று இழுத்தான்.

உடனே கறுத்தான் சிரித்தான்.

"லட்சம் வெள்ளிக்கு எங்கே போவது ? திருச்சுழிக்கு நாற்பதினாயிரம் ; திருப்புவனத்துக்கு எண்பதினாயிரம், திருப்பாச்சேத்தி கண்மாய் வெட்டுவதற்குப்பன்னீராயிரம்



இன்று அனுப்பியாக வேண்டும். சின்னப் பாண்டியரும், காரியஸ்தர்களும் அதற்கே யோசனை செய்து கொண்டு இருக்கிறார்கள்" என்றான்.

பெரிய மருதேந்திரர் 'ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தார்.

"இதுதான் முடிவு. பன்னிப் பன்னி ஏன் பேச வேண்டும்? இருங்கள், சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று கூறியபடி எழுந்தார்.

அந்தப்புரத்தில் இருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

"என்னங்க, இங்கே கொஞ்சம் வர்றியளா ?" என்று மருதரசரை அழைத்தாள், ராணி ராக்காத்தாள்.

அவர் உள்ளே செல்வதற்குள், ஒரு சேகவன் வந்து, "அரசே ! மேஜர் வெல்ஸ் துரை தங்களைப் பார்க்க வருகிறார்" என்றான்.

சேவகனைப் பார்த்து, "அவரை மண்டபத்தில் உட்கார வை !" என்று சொன்ன மருதரசர், அந்தப்புரத்திற்கு நடந்தார்.

எதிர்கொண்ட ராணிராக்காத்தாள் ஊமைத்துரைக்கு உதவி செய்யும்படி மருதரசரை வேண்டினாள். அஞ்சுகமும் இதை அருகில்நின்று கவனித்துக்கொண்டு இருந்தாள்.

ராக்காத்தாளுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் முடிவாகப் "பார்க்கலாம்" என்று சொன்ன மருதரசர், திரும்பிச் சலவைக்கல் மண்டபத்திற்குள் நடந்தார்.

மேஜர் வெல்ஸ் அங்கே தன் பரிவாரங்களோடு அமர்ந்திருந்தான்.

பெரிய பாண்டியரைக் கண்டதும் ஓடிவந்து தழுவிக் கொண்டான். தன் நாட்டில் இருந்து கொண்டு வந்திருந்த

பலவித ஆடையணிகளைப் பெரிய பாண்டியருக்கு வழங்கினான். தன் பழைய நண்பரை மீண்டும் காணப்பெற்றதற்கு வெல்ஸ் மகிழ்ச்சி தெரிவித்தான்.

சின்ன மருதுவைப்பற்றி விசாரித்தான். அரண்மனை சிறுவயலுக்குப் போயிருப்பதாகவும், சிறிதுநேரத்தில் திரும்பக்கூடும் என்றும் பெரிய பாண்டியர் பதில் அளித்தார்.

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போதே சிறு வயலில் இருந்து சின்ன மருது வந்து சேர்ந்தார். வெல்ஸைக் கண்டதும் சின்னமருதுவுக்கும் உற்சாகம் பிறந்தது. சின்ன மருதுவுக்கு உற்சாகம் பிறக்கிறது என்றால், இரண்டு 'வளரிக்காம்பு' களாவது முறியும்; வெல்ஸைக் கண்ட ஆனந்தத்தில், கையில் இருந்த வளரியைத் துடையில் தட்டி முறித்துப்போட்டுக் கையை நீட்டினார், சின்னமருது.

வெல்ஸ் கை கொடுத்தான். ''நாம் எப்போதும், இப்படி நண்பர்களாகவே இருப்போம்!'' என்றான்.

இவற்றை எல்லாம் ஒரு பகுதியில் நின்று கவனித்துக் கொண்டு இருந்தான், வீரத்தேவன். வெள்ளையருக்கு மருதுபாண்டியரிடம் உள்ள மரியாதையைக் கண்டு பிரமித்தான். 'இது பயத்தால் விளைந்ததா, பாசத்தால் விளைந்ததா ?' என்பதே அவனுக்குப் புரியவில்லை.

'பாஞ்சாலங் குறிச்சியைக் கருவறுத்தபிறகும், ஒரு பாளையக்காரனிடம் வெள்ளையர்கள் இவ்வளவு மரியாதையாய் நடந்துகொள்வது உண்டா ? இனி தென் பாண்டி மண்டலத்தில் எந்தப் பாளையத்தையும் வெல்வது அவர்களுக்குச் சுலபம்தானே !' மருதரசரிடம் வீரத்தேவனுக்கு இருந்த மரியாதை பன்மடங்கு வளர்ந்தது.

மேஜர் வெல்ஸ் பெரிய பாண்டியரிடம் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் •ன் கவனித்துக் கேட்டான்.



''லண்டனில் இங்கிலீஷ் கொடி பறக்கிறவரை, சிவகெங்கையில் உங்கள் கொடி பறக்கும்!'' என்றான் வெல்ஸ். கும்பினியாருடைய மொத்தக் கருத்தையே, அவன் பிரதிபலித்தான்.

சிவகெங்கையின் உரிமை தன்னைச் சார்ந்தது என கவுரிவல்லபத்தேவர் வாதாடிக்கொண்டு இருப்பதையும், அவர் சென்னைக்கு வந்து கவர்னரைப் பேட்டி கண்டதையும், ஆயிரம்தான் காரணங்களைக் காட்டினாலும் மருதுபாண்டியர் பரம்பரை உள்ளவரை சிவகெங்கை அவர்களுக்குத்தான் என கவர்னர் சொல்லிவிட்டதை, வெல்ஸ் ஆங்கிலத்தில் சொல்ல, இரு மொழிக்காரன் (துபாஷ்) மொழி பெயர்த்தான்.

மருதரசர்கள் வெல்ஸுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். பெரிய பாண்டியரும் வெல்ஸுக்குப் பல வகையான பொருள்களைப் பரிசு அளித்தார். வெல்ஸ் விடை பெற்றுக்கொண்டான்

அவர்கள் சென்றதும் சின்னமருது, 'பாளையங் கோட்டையில் இருந்து வந்த தூதுவன் போய் விட்டானா?'' என்று பெரிய மருதுவைக் கேட்டார்.

''இல்லை! விடுதிக்காவல் ராமசாமித் தேவரும் அவனும் முகப்பில் உட்கார்ந்து இருக்கின்றனர். கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்!'' என்றார், பெரிய பாண்டியர்.

சின்னமருது வேகமாக முகப்பிற்குச் சென்றார். அங்கே ராமசாமித் தேவர் மட்டும் இருந்தார். அவரிடம், ''பாளையங்கோட்டைத் தூதுவன் எங்கே?'' என்று கேட்டார் சின்ன மருது.

''இங்கேதான் நின்றார்!'' என்ற ராமசாமித் தேவர் எழுந்து, சுற்று முற்றும் பார்த்தார். வீரத்தேவனைக் காணவில்லை. அங்கும் இங்குமாக அலைந்து அரண்மனை முழுவதும் தேடினார். வீரத்தேவன் தென்படவில்லை.

அந்தப்புரத்தில் இருந்த அஞ்சுகம் இதை அறிந்தாள். அவளும் வீரத்தேவனைத் தேடினாள்.

சின்னப்பாண்டியர், ராமசாமித் தேவரைப் பார்த்து, "ஒரு லட்சம் பூவராகனுக்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்குத்தான் அரண்மனை சிறுவயலுக்குச் சென்றேன். சிறுவயல் முத்தப்ப செட்டியார் கையெழுத்து இல்லாமலே இந்தக் கடனைக் கொடுக்கச் சம்மதித்து இருக்கிறார். அதற்குள் இந்தத் தூதுவன் எங்கே போனான்?" என்றார்.

"நான் எப்படியும் தேடிப் பிடிக்கிறேன். ஒரு வேளை தெருப்பக்கம் போயிருக்கக்கூடும்" என்று கூறிவிட்டுத் தெருவை நோக்கி நடந்தார், தேவர். அஞ்சுகமும் அவர் பின்னாலேயே சென்றாள்.

நம்பிக்கையற்று, அரண்மனையை விட்டு வெளியேறிய வீரத்தேவன் கால்போன போக்கில் சிவகெங்கைத் தெருக்களிலே நடந்து சென்றான்.

ஒரு தெருவிலே ஒரு சுவரில் 'இங்கே வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும்' என்று எழுதியிருந்தது. அதிலேகூட வீரத்தேவனுக்குச் சபலம் தட்டியது. ஆனால், முன்பின் அறியாதவர்களுக்குமா கடன் கொடுப்பார்கள்? தன் சபலத்தை எண்ணி விரக்தியோடு நடந்தபடி மேலும் சென்றான், வீரத்தேவன்.

அஞ்சுகத்திடங்கூடச் சொல்லிக்கொள்ளாமல் நேரே பாளையங்கோட்டைக்குச் சென்றுவிட அவன் முடிவு கட்டினான். அவன் மனம் அவ்வளவு சலித்துப் போயிருந்தது.

ஓரிடத்தில் கருத்தானைச் சேர்ந்தவர்கள் சிலர் கூடி நின்று கொண்டு இருந்தார்கள். அவர்களிலே ஒருவன் வீரத்தேவனைக் கையைக் காட்டி, 'இவன் தான்!' என்றான். இன்னொருவன், "ஒன்பது கம்பளத்தான் ஊரைச் சுற்றி வம்பளந்தான்!" என்றான். மூன்றாமவன், "போங்கடா போங்க போக்கத்த பயலுகளா! துரை சிக்கிலே, சிறைச்சாலையிலே ஊமைத் போயிட்டான். நீங்கள் ஏன் கிடந்து அலையறீங்க?" செத்துப் என்றான்.



வீரத்தேவனின் இரத்தம் கொதித்தது. கைகள் துடித்தன. என்றாலும், இருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் எண்ணி, மேலே நடந்தான். சிவகெங்கையில் அவன் இமைப்பொழுது தாமதிக்கவும் விரும்பவில்லை. நேரே விடுதிக்கு வந்து, குதிரையில் ஏறி, யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டு விட்டான்.

விடுதி உட்பட நகர் எங்கும் அவனைத் தேடி அலைந்து விட்ட ராமசாமித் தேவர், அஞ்சுகம் பின் தொடர சின்னப்பாண்டியரை மீண்டும் சந்தித்து, வீரத்தேவன் காணாத செய்தியைச் சொன்னார். அஞ்சுகம் கண்கலங்கி நின்றிருந்தாள்.

சின்னமருது யோசித்தார்; ஏதோ முடிவுக்கு வந்தது போலத் தலையை ஆட்டினார் எந்த விளைவுக்கும், தயாரானவர் போலக் காணப்பட்டார் 'சிவகெங்கையின் வரலாற்றில் ஒரு துயர ஏட்டைத் திறந்து வைக்கிறோம்' என்னும் எண்ணமின்றி, ஒரு துணிச்சலான முடிவுக்கு வந்தார்.

## 8. சிறை உடைந்தது புலி பாய்ந்தது

மறுநாள் பொழுது விடிகிற நேரத்தில் பாளையங் கோட்டைக்கு வந்து சேர்ந்தான், வீரத்தேவன்.

ஆத்திரத்தில் புறப்பட்டுவிட்டாலும், வழி நெடுகிலும் அவன் உள்ளம் அலைபட்டுக்கொண்டு இருந்தது. அஞ்சு

சத்திடம்கூடச் சொல்லாமல் வந்து விட்டோமே என்று கலங்கினான்.

ஒரு வீரனுக்கு இருக்க வேண்டிய விவேகமும், முன் யோசனையும் வீரத்தேவனுக்கும் உண்டு. ஆனால், எந்த விவேகத்தையும் பழுதுபடுத்திவிடும் கோபம், அவனையும் தனக்குள் அடக்கிவிட்டது. அது தெளிந்த நேரத்தில் அவன் சிந்தை கலங்கிற்று. திரும்ப அஞ்சுகத்தைச் சந்திப் போம் என்ற நம்பிக்கை கூட அவனுக்கு இல்லாமல் போயிற்று.

குறிப்பிட்ட நாளில் சிறை உடைப்பு நடந்தாக வேண்டும்; அதற்குள் வெளியூர்களில் இருந்து வந்தி ருக்கிற இளைஞர்களுக்கு உணவும் இடமும் கொடுத்தாக வேண்டும். அதற்கு வசதியில்லாமல் போய்விட்டால், என்ன நேருமோ, யாருடைய மனம் மாறுமோ தெரியாது. பல்லாயிரம் பேரில் யாராவது ஒருவன் நடக்கப்போவதை வெள்ளையருக்குச் சொல்லிவிட்டாலும், முதலில் வீரத் தேவன் தலை உருளும். மிகுந்த குழப்பத்தோடு வீரத் தேவன் பாளையங்கோட்டையில் வந்து இறங்கினான்.

நேரே சிங்கத்தேவன் வீட்டிற்கேதான் வந்திருந்தான். அவன் கதவைத் தட்டும்போது கண்ணாத்தாள் உள்ளே பலகாரம் செய்து கொண்டு இருந்தாள். சிங்கத்தேவன் வெளியிலே சென்று இருந்தான்.

யாரோ தட்டுகிறார்கள் என்று எண்ணிய கண்ணாத் தாள், கதவைத் திறக்க வந்தாள். ''சிங்கத்தேவா! சிங்கத் தேவா!' என்று அழைத்த குரல் தனக்குப் பழக்கமான குரலாக இருக்கக் கேட்டாள். வந்திருப்பது தன் அண்ணன் தான் என்ற முடிவுக்கு வந்தாள். வீட்டில் அவளைத் தவிர, வேறு யாரும் இல்லை கதவைத் திறப்பதா, இல்லையா என்று தயங்கினாள். மெதுவாகக் குரலை மாற்றிக் கொண்டு, ''யாரது?'' என்று கேட்டாள்.



''நான்தான், வீரத்தேவன்; சிங்கத்தேவன் இல்லையா?''

கண்ணாத்தாள் திடுக்கிட்டாள். அண்ணனைப் பார்க்க அவள் மனம் துடித்தது. 'அண்ணா' என்று கதற வேண்டும் போலிருந்தது. கதவைத் திறந்து அண்ணனைப் பார்த்து, நடந்ததெல்லாம் கூறி கணவனை மன்னிக்கும்படி செய்துவிடலாம் என்று எண்ணினாள். ஒரு கணம் இந்த நினைவு உறுதிப்பட்டது. தாழைத் திறக்கக் கைகள் நீண்டன மறுகணம் அதே கைகள் பின்னுக்கு வந்தன.

'சீச்சீ! என்ன தவறு செய்யப் போகிறோம்! நாம் என்னதான் சொன்னாலும் அண்ணனுடைய ஆத்திரம் தீராது! கண்டிப்பாக, அண்ணனோ, கணவனோ மடிய நேரிடும்.'

அவள் கதவைத் திறக்க விரும்பவில்லை. கதவு மேலும் பலமாகத் தட்டப்பட்டது. குரல் நடுங்க, ''அவர் இங்கே இல்லை. மத்தியானம்தான் வருவார்!'' என்றாள் கண்ணாத்தாள்.

வீரத்தேவனுக்கும் இது பழக்கப்பட்ட குரலாகத் தோன்றிற்று. ஆனால், தன் தங்கையாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான். தங்கையாக இருந்தால் கதவைத் திறக்காமலா இருந்திருப்பாள்?

சிங்கத்தேவன்மீது இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் நீங்கிவிட்டது. மீண்டும் குதிரையில் ஏறி, பொம்மையா வைத் தேடிப் புறப்பட்டான்.

வீரத்தேவன் சிவகெங்கையில் இருந்தபோது பொம்மையா பல காரியங்களைச் செய்து முடித் திருந்தான்.

பாளையங்கோட்டையின் எல்லாத்திசைகளுக்கும் நண்பர்களை அனுப்பி, வெளியூர்களில் இருந்து வருகிற இளைஞர்களை ஆங்காங்கே மடக்கி,

சுற்றுப்புறக் கிராமங்களிலேயே தங்க வைத்திருந்தான். சிறைக்காவலர்களிலேயே இரண்டொரு பேர்களை நண்பர்கள் ஆக்கி வைத்திருந்தான். தான் செய்த தவறுக்கு இவற்றின் மூலம் பிராயச்சித்தம் செய்து கொண்டிருந்தான்.

ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், ஆயிரம் பூவராகன் மட்டும் கொடுத்து அனுப்பியிருந்தார். அதில் இரண்டு குதிரைகளை வாங்கியிருந்தான் பொம்மையா. பொறுப்பு மிக்க ஒரு தலைவனாகப் பணியாற்றி வந்தான்.

சிங்கத்தேவன் பட்டும் படாமலுமே இவற்றில் பங்கு கொண்டு இருந்தான். அவன் உதவி இல்லாமலே பொம்மையா தன் காரியங்களை முடித்தான்.

விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ பாளையங் கோட்டையில் வெள்ளைக்காரர்களின் படைகள் ஏராள மாகக் குவிக்கப்பட்டு இருந்தன. வெள்ளைக்காரர் களுக்குச் சேவை செய்வதில், அந்தப் படைகள் மனப்பூர்வ மாகவே ஈடுபட்டு இருந்தன. எட்டயபுரம், மணியாச்சி, புதுக்கோட்டை பாளையங்களில் இருந்து, கும்பினிப் படையில் சேர்ந்த தமிழர்கள் மிக உற்சாகமாகவே இருந்தனர்.

பாஞ்சைக் கோட்டையிலும், சிவகிரியிலும், ஏழாயிரம் பண்ணையிலும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை படை வீரர்களைப் பங்கு போட்டுக் கொள்ளும்படி வெள்ளையர்கள் விட்டு விட்டார்கள். அதனால் வெள்ளைப் படையில் ஒவ்வொரு வீரனும் தன்னை ஓர் அதிகாரியாகவே கருதிக் கொண்டு இருந்தான். பயன் அதிகமாக இருந்த காரணத்தால், வெள்ளைப் படையில் சேவை புரிவதை பெரிதாகவே அவர்கள் மதித்தார்கள். கட்டபொம்மன் படையில் இருந்தவர்களிலேயே சிலர் வெள்ளைப் படையில் சேர்ந்திருந்தார்கள். மேற்கத்திச் சாராயம் வேண்டுமளவு அவர்களுக்குக் கிடைத்தது.



பாளையங்கோட்டையில் இவ்வளவு படைகளும் தங்கி இருந்ததால் பீதியடைந்தவர்கள் பலர் ஊரை விட்டே வெளியேறினர். ஆனால், பெண்களைக் கெடுக்கும் விஷயத்தில் மட்டும் வெள்ளைக்காரர்கள் கண்டிப்பாக இருந்தனர். அப்படிச் செய்யும் எந்த வீரனையும் அவர் கள் கொல்லத் துணிந்தனர். சில வீரர்கள் வெள்ளைக் காரர்களிடம் அன்பு கொண்டதற்கு இதுவும் ஒரு காரணம்.

பொம்மையாவைத் தேடிப் புறப்பட்ட வீரத்தேவன், நகர் முழுவதும் அலைந்துவிட்டு, பழைய கோட்டைக்கே வந்து சேர்ந்தான். ஆனால், அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக, அந்தக் கோட்டைக்குள் ஆங்கிலத் தளபதிகள் பலர் இருந்தார்கள். கோட்டைக் காவலர்கள் யாரையும் சந்திக்க அவனால் முடியவில்லை. குடியும் கூத்துமாகக் கோட்டை அமர்க்களப்பட்டுக் கொண்டு இருந்தது. அங்கும் தங்க வழியின்றி அலுப்போடு திரும்பினான் வீரத்தேவன்.

'எங்கே தொலைந்தான் இந்தப் பொம்மையா?' என்று, தனக்குத் தானே ஆத்திரமாகக் கேட்டுக் கொண் டான். மறுகணம் ஆத்திரம் தணிந்து பயம் பிறந்தது. 'ஒருவேளை வெள்ளைக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டானோ? இல்லை, சலித்துப்போய் ஊரை விட்டே புறப்பட்டுவிட்டானோ? புரட்சிக் கூட்டத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனைக்கூடக் காணோமே!'

அவன் மனம் சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தது. யாரையாவது சந்தித்து விவரங்களைத் தெரிந்துகொண் டால் ஒழிய, மனத்துக்கு அமைதி இல்லை. உடல் தளர்ச்சிகூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

அப்படியே கொக்கர குளத்துக்கு வந்தான். தாமிர பரணியாற்றில் குளித்தான். கட்டியிருந்த ஆடையையே உலர்த்திக் கட்டிக்கொண்டு, படுத்திருந்த குதிரையை

எழுப்பினான். தட்டித் தட்டிப் பார்த்தான். 'ஓ' வென்று அலறினான். குதிரை இறந்து போய்க் கிடந்தது.

வீரத்தேவனுடைய இலட்சியம், அவனது களைப்பைப் போக்கிற்று. இரவு பகல் தூக்கம் இல்லாமல் உழைக்க அவன் இலட்சியம் உறுதுணையாய் நின்றது. ஆனால், குதிரை உடல் தளர்ந்தது, உயிர் துறந்தது.

குதிரை இல்லாமல் அவனால் எங்கும் போக முடியாது. அவன் கையில் இருந்ததோ நான்கு பூவராகன். சுற்றுமுற்றும் பார்த்தவனாய், திசை தெரியாதவனாய், பித்துப்பிடித்தவனாய், குதிரை கிடந்த இடத்தை விட்டு நடந்தான், வீரத்தேவன். ஓர் இடியாப்பக் கடைக்குள் நுழைந்தான். நல்ல பசி எடுத்தது. நிறையச் சாப்பிட்டான், புறப்பட்டான்.

களைப்புத் தீர்ந்தது போலிருந்தது. ஆனால், தூக்கம் கண்களைச் சுற்ற வைத்தது. அப்படியே ஆற்றங்கரை மண்டபத்தில் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டான்.

சிறை உடைக்கத் திட்டமிட்ட நாள் நெருங்கிக் கொண்டு இருந்தது.

மறுநாள் சிறையை உடைத்தாக வேண்டும்!

அவனிடம் குதிரையும் இல்லை; யாரையும் சந்திக்க அவனால் முடியவும் இல்லை. தூங்கி விழித்த அவன் கண்களுக்கு நேரே, உலகம் பயங்கரமாகத் தோற்றம் அளித்தது; மெதுவாக எழுந்து பாளையங்கோட்டையை நோக்கி நடந்தான்.

அந்தி பட்டுவிட்டது. பாளையங்கோட்டையை நெருங்க நெருங்க, அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது.

பல திசைகளிலும் தீவட்டி வெளிச்சம் தெரிந்தது.

புரட்சி ஒலிகள் கேட்டன



அவன் மெய் சிலிர்த்தது. துள்ளிக் குதித்து ஓடினான். தான் யார் என்பதைச் சொல்லாமல் ஒரு கூட்டத்தில் போய்ச் சேர்ந்துகொண்டான். அவனுக்கும் அந்த ஒலி பழக்கம் இருந்ததால், அவர்களும் அவனைச் சேர்த்துக் கொண்டார்கள்.

இரவு அவர்களுடனேயே தங்கினான்.

காலைப் பொழுது பலபலவென்று விடிந்தபோது, அங்கு இருந்தவர்கள் எல்லாம் பலவகையில் மாறினார்கள். விறகு வெட்டிகள், புல்கட்டுக்காரிகள், காய்கறி வியாபாரிகள், வேப்பெண்ணெய் வியாபாரிகள், பண்டாரங்கள், சாமியாடிகள், பகல் வேடக்காரர்கள் இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேடம் அணிந்து கொண்டார்கள்.

எல்லோரும் சிறைச்சாலைக்கு எதிரே இருந்த சந்தைப் பொட்டலை நோக்கி நடந்தார்கள்.

வெள்ளைப் படையினருக்கே அது ஆச்சரியமாக இருந்தது. 'பொங்கல்தான் முடிந்துவிட்டதே, இன்றைய சந்தைக்கு ஏன் இவ்வளவு கூட்டம் வருகிறது' என்று ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், சிறை உடைபடப் போகிறது என்ற சந்தேகம் யாருக்கும் எழவில்லை.

புதிய கள் விற்பவர்களே அங்கு அதிகமாகக் கூடியிருந்தார்கள். சிலர் கள்ளிலே நஞ்சு கலந்து கொண்டு வந்திருந்தார்கள். புரட்சி வீரர்கள் யாராவது அந்தப் பக்கம் வந்தால், மோதிர விரலால் பானையின்மீது யாராவது மூன்று தட்டுத் தட்டுவார்கள். "இது நஞ்சு கலந்தது!" என்று அதற்குப் பொருள்.

வெள்ளைச் சிப்பாய்களும், சிறைக் காவலர்களும் கள்ளை வாங்கி நிறையக் குடித்தனர். புரட்சிப் பெண்களும் காசு வாங்காமலே அவர்களுக்குக் கொடுத்தனர். அவித்து வைத்த சோளக் கதிர்களை வாங்கித் தின்று, கள்ளுண்ட காவலர்கள் கூத்தாடினர்.

நாய்களைக் கொன்று அவற்றின் மாமிசத்தைச் சுட்டுக் கொண்டு வந்திருந்தார்கள், சிலர். பணம் வாங்காமலே அதை வெள்ளைச் சிப்பாய்களுக்குக் கொடுத்தார்கள். அதைத் தின்றுவிட்டுத் "தண்ணீர்! தண்ணீர்!" என்று கத்தி, மேலும் மேலும் கள் குடித்து, சுருண்டு விழுந்தனர், வெள்ளைச் சிப்பாய்கள்.

இதற்குள் பண்டாரம் வேடத்தில் இருந்த வீரத்தேவன் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, தான் சங்கு ஊதி, சேகண்டி அடித்ததும் எல்லோரும் சிறையை நோக்கிப் பாய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தான்.

பாம்பாட்டி வேடத்தில் இருந்தவர்கள் பாம்புகளைத் தயாராக வைத்துக் கொண்டு இருந்தார்கள். குதிரைகளில் வந்து தாக்கும் வெள்ளைக்காரர்கள் மீது மட்டும் பாம்புகளை வீச வேண்டும் என்பது ஏற்பாடு

நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொண்டு இருந்தான் வெள்ளைக்கார கர்னல் ஒருவன். அவனுக்குச் சந்தேகம் தட்டிவிட்டது. கையில் ஒரு சவுக்கோடு வேகமாகச் சந்தைக்குள் நுழைந்தான். சுருண்டு கிடந்த தன் சிப்பாய்களை, சவுக்கால் அடித்தான்.

இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த புரட்சிப் படைகளில் ஒருவன், தலையில் இருந்த விறகுச் சுமையைக் கீழே போட்டுவிட்டு, கையில் இருந்த கோடாரியால் அந்தக் கர்னலை வெட்டி வீழ்த்தினான்.

காரியம் கெட்டுவிடப் போகிறதே என்று பயந்த வீரத்தேவன், சூட்டோடு சூடாக எல்லாம் நடந்து விடட்டும் என்று எண்ணி, கையில் இருந்த சேகண்டியை அடித்து சங்கு ஊதினான்.

'ஓ' வென்ற பேரிரைச்சலோடு, புரட்சிக் கூட்டம் சிறையைநோக்கிப் பாய்ந்தது; சிறைக் காவல்காரர்களைக்



கொன்று குவித்தது ; சிறைக் கதவை உடைத்து உள்ளே புகுந்தது.

உள்ளே தயாராக வைக்கப்பட்டு இருந்த ஒரு பீரங்கி, புரட்சிக்காரர்களை நோக்கிச் சுட்டது. அதன் பேய் வாயை மீறி, புரட்சி வீரர்கள் உள்ளே புகுந்தனர். சிலர் செத்து விழுந்தனர்.

சிறையின் ஒவ்வோர் அறையும் உடைக்கப்பட்டது.

உள்ளே இவ்வளவு நடந்துகொண்டு இருக்கும்போது பக்கத்து முகாமில் இருந்த வெள்ளைப்படை தயாராக ஓடிவந்து சிறைவாசலில் நின்றது.

உள் சுரங்க வாசலை உடைத்து, ஊமைத்துரையை இழுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான், வீரத்தேவன். சுரங்கத்துக்கு உள்ளேயே, கொஞ்ச நேரம் நின்றார்கள், இருவரும்.

கைதிகளும், புரட்சி வீரர்களும் ஒன்றாகச் சேர்ந்து, வெளியில் இருந்த வெள்ளைச் சிப்பாய்களையும் எதிர்த்தனர். கொல்லப்பட்டவர்களின் துப்பாக்கிகளைப் பொறுக்குவதில், சிங்கத்தேவனும், பொம்மையாவும் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். நூறு துப்பாக்கிகளுக்கு மேல் பொறுக்கிக் கட்டி, இரண்டு குதிரைகளில் ஏற்றிக்கொண்டு அவர்கள் புறப்பட்டனர்.

இறந்தவர்கள் போக மிஞ்சிய புரட்சி வீரர்கள், வேறு வேறு திசைகளில் ஓடி மறைந்தார்கள்.

சுரங்கத்தின் வழியாகப் போன ஊமைத்துரையும் வீரத்தேவனும் பின் கோட்டைக்குள் ஏறும்போது அங்கே வெள்ளைக்காரச் சிப்பாய்கள் யாரும் இல்லை. கோட்டையின் காவலர்கள் இரண்டு குதிரைகளைத் தயாராய் நிறுத்தி வைத்திருந்தார்கள். அவர்கள் காலைத் தொட்டு வணங்கிவிட்டு, வீரத்தேவனும் ஊமைத்துரையும் குதிரைமீது ஏறிப் பறந்தார்கள்.

காட்டில் இருந்த ஒரு மண்டபத்து அருகில் வந்தபோது ஏற்கெனவே அங்கு ஐநூறுக்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் வெற்றிப் பெருமிதத்தோடு அமர்ந்து இருப்பதைக் கண்டார்கள். ஊமைத்துரையையும், வீரத்தேவனையும் அவர்கள் ஓடிப்போய்த் தழுவிக்கொண்டார்கள்.

அந்த ஆரவாரத்துக்கு இடையே "வீரத்தேவா!" என்று குரல் கேட்டது

"அத்தான்" என்று ஒரு குரல் ஆசையோடு எழுந்தது.

வீரத்தேவன் திடுக்கிட்டுக் கவனித்தான்.

பூரி ராமசாமித் தேவரும், அஞ்சுகமும் அங்கு நின்றார்கள்.

தன்னை மறந்த வீரத்தேவன், "அஞ்சுகம்!" என்று கூவி, அவளைப் போய்த் தூக்கிக்கொண்டான்.

ராமசாமித் தேவர் ஆவலோடு, வீரத் தேவனைப் பார்த்து, "சின்ன மருதுபாண்டியா எங்கே?" என்று கேட்டார். வீரத்தேவன் திடுக்கிட்டான்.

சின்ன மருதுபாண்டியர் பாளையங் கோட்டைக்கு எப்படி வந்தார்?

தேவரின் கேள்வி வீரத்தேவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"அவர் வந்திருக்கிறாரா?" என்று அவரையே திருப்பிக் கேட்டான்.

"அதிகாலையிலேயே வந்துவிட்டோம். அவர் கூடத் தான் நாங்கள் வந்தோம். எங்களை இங்கே உட்கார வைத்துவிட்டு, விறகு வெட்டியின் வேடத்தில் சின்னப் பாண்டியர் புறப்பட்டார்!" என்று விளக்கம் கொடுத்தார் தேவர்.

வீரத்தேவனுக்குச் சொல்லவொணாத உணர்ச்சி ஏற்பட்டது. சவுக்கால் அடித்த வெள்ளையனை வெட்டி



எறிந்தவர் அவர்தானோ? அசைப்பில் பார்த்த காட்சியை மீண்டும் மனக்கண்ணுக்குக் கொண்டு வந்தான், வீரத் தேவன்.

"ஐயோ, அவர் அகப்பட்டுக்கொள்ளாமல் இருக்க வேண்டுமே" அவன் மனம் துடித்தது.

கூட்டத்தினரையும் ஊமைத்துரையையும் விட்டு விட்டு, தேவரையும் அஞ்சுகத்தையும் தனியாக அழைத்துச் சென்றான், வீரத்தேவன்.

"என்ன தம்பி, சொல்லாம கொள்ளாம வந்துட்டே!" என்று கேட்டார், தேவர்.

"அன்றைக்கெல்லாம் என் மனது சரியாகவே இல்லை; அதனால்தான் புறப்பட்டுவிட்டேன். ஆமாம்; சின்னப் பாண்டியர் எதற்காக வந்தார்?"

"நீ அவசரக்காரனாக இருந்தால், எல்லோருமா அப்படி இருப்பார்கள்! பெரிய பாண்டியர் வெல்ஸைப் பார்க்கப்போன கால்நாழிகைக்கு எல்லாம் சின்னவர் வந்துவிட்டார். வந்தவுடனே உன்னைத்தான் கேட்டார். அரண்மனை எங்கும் ஊரெங்கும் தேடித் தேடி அலைந்தேன். பணத்திற்குக்கூட அவர் ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தாராம். கொஞ்ச நேரம் நீ தாமதித்து இருந்தால் அவரைப் பார்த்து இருக்கலாம். உன்னை காணவில்லை என்று சொன்னதும், மிகவும் வருத்தப் பட்டார். அவரது குணம் உனக்குத் தெரியாது. ஒன்றை செய்வது என்று தீர்மானித்துவிட்டால், தாமதம் இல்லாமல் செய்துவிடுவார். பெரிய பாண்டியர் யோசித்த அளவுக்குக் கூட அவர் யோசிக்கவில்லை. உடனேயே என்னைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய், சிறையை உடைக்கப் போகும் நாள் பற்றிக் கேட்டார்; சொன்னேன். அன்று நாமும் புறப்படுகிறோம் என்றார். அஞ்சுகமும் உன்னைப் பார்க்க வேண்டும் என்றதால், அவளையும்

அழைத்துக் கொண்டு வந்தோம். முக்குளத்துக்குப் போவதாகப் பெரிய பாண்டியரிடம் சொல்லிட்டு, எங்களை அழைத்துக் கொண்டு இங்கே வந்தார்.''

வீரத்தேவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

ஒரு மண்ணில் பிறந்த பாசம் யாரைத்தான் விட்டு விடும்!

எட்டயபுரம், மணியாச்சி, புதுக்கோட்டை பாளையக்காரர்களிடங் கூடத் துரோக புத்திக்கு இடையேயும் தேச பக்தி இருக்கிறதே! துரோகிகளின் நரம்பிலேயும் பாசப் பிடிப்பு இருக்கும்போது, தளராத நாட்டுப்பற்றும் ஆண்மையும் கொண்ட மருது பாண்டியர்களிடம் இல்லாமலா போகும்?

அப்பொழுது சின்னப்பாண்டியாரைப் பார்த்து விடத் துடித்தான், வீரத்தேவன். 'எங்கே இருக்கிறாரோ? எப்படி இருக்கிறாரோ?'— அவன் மனம் பதைத்தது.

மீண்டும் பாளையங்கோட்டைக்குள் செல்ல முடியாது. நகரெங்கும் வெள்ளைப் படைகள் கடுங்கோபத்துடன் உலாவிக்கொண்டு இருக்கும். பொம்மையா, சிங்கத்தேவன் முதலியோரும் எங்கெங்கே இருக்கிறார்களோ?

திகைத்து நின்ற அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள், அஞ்சுகம்.

''இப்படியே காட்டு வழியாகவே போய், நம் ஆள்கள் எல்லோரையும் நான் சந்தித்து விட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

வீரத்தேவன் அதை விரும்பவில்லை.

''கோபத்தோடு உலவும் வெள்ளைக்காரர்கள் வழியில் போகிறவர்களையெல்லாம் பிடித்து அடைக்கக் கூடும்! நீ போக வேண்டாம்!'' என்று அஞ்சுகத்துக்குப் பதில்



சொன்ன வீரத்தேவன், திரும்பி ஊமைத்துரையிடம் வந்தான்.

''சிங்கத்தேவர், பொம்மையா, சின்னமருது பாண்டியர் இவர்களைச் சந்திக்க வேண்டும். என்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

சின்னப்பாண்டியர் வந்திருப்பது பற்றி ஊமைத்துரை ஆச்சரியத்தோடு, ஆவலோடு விசாரித்தார். முன்பு தேவர் சின்னபாண்டியரைப் பற்றி விசாரித்தது. புரட்சிக்காரர் ஆரவாரத்துக்கு இடையே அவருக்குக் கேட்கவில்லை. தான் சிவகெங்கை சென்றதில் இருந்து நடந்தவற்றை விவரமாகச் சொன்னான்; வீரத்தேவன்.

ஊமைத்துரையின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கு எடுத்தது. மறவர் நாட்டின் அரசு நெறிகளை அவர் அறிவார். கிழக்கு வட்டகைப் பாளையக்காரர்களைவிட, மேற்கு வட்டகைப் பாளையக்காரர்கள் வீரம் மிக்கவர்கள். அவர்களையும் விட இராமநாதபுரம, சிவகெங்கை மறவர்கள் பண்புமிக்கவர்கள். அங்கே சில்லரைக் குழப்பங்கள் வருவது இல்லை. தினமும் ஒரு தொல்லை பாஞ்சாலங் குறிச்சிக்கு இருந்தது. அதனால் பொது எதிரியை மட்டுமே சமாளிக்க வேண்டிய அளவுக்கு இனக்கட்டுப்பாடு மறவர் நாட்டில் இருந்தது.

சின்னப் பாண்டியர் தனக்கு உதவ வந்து இருக்கிறார் என்றால், சிவகெங்கையே உதவுவதாகத்தான் பொருள். சிவகெங்கையின் எழுபத்தையாயிரம் படை வீரர்களும் தன் அருகில் இருப்பதுபோல் தோன்றிற்று அவருக்கு. ஊமைத்துரையின் நாடி நரம்புகளில் புது உணர்ச்சி பாய்ந்தது. வீரத்தேவனைப் பார்த்து, ''நாம் எல்லோருமே புறப்படுவோம். காட்டுப் பாதையிலேயே தேடிக்கொண்டு போவோம்'' என்றார்.



27630
L.ML.22707

வீரத்தேவனுக்கும் அது சரி என்று பட்டது. காயங்களுக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு இருந்த புரட்சி வீரர்களும் அவசர அவசரமாக எழுந்து புறப்பட்டார்கள்.

பாளையங்கோட்டை நகருக்குள்ளே நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சந்தேகத்துக்கு இடமாகத் தோன்றுபவர்களை எல்லாம், வெள்ளையரின் வீரர்கள் பிடித்தார்கள். கயிறுகளால் பிணைத்து ஆங்காங்கே உள்ள மரங்களில் கட்டினார்கள். சிறை உடைப்பில் ஈடுபட்டு, அகப்பட்டுக் கொண்டவர்களை நையப் புடைத்தார்கள். கூட்டமாக நிற்பவர்களைக் குதிரைப் படைகள் கலைத்தன.

சின்னப் பாண்டியரும், சில வீரர்களும் வெள்ளையரிடம் இருந்து தப்பி, மதுரைப் பாதையை நோக்கிப் போய்விட்டார்கள்.

சிங்கத்தேவனும் பொம்மையாவும் கைப்பற்றிய துப்பாக்கிகளோடு ஒட்டப்பிடாரம் நோக்கிப் போய் விட்டார்கள்.

சுப்பம்மாளும் சில பெண்களும் மேற்குத் திசைக் காட்டுக்குள் புகுந்துவிட்டார்கள்.

இந்த நிலையில், கயத்தாற்றுப் பகுதியில் வைக்கப் பட்டு இருந்த படைகளை வெல்லாம் வெள்ளைக்காரர்கள் பாளையங்கோட்டைக்கு அழைத்துக்கொண்டார்கள்.

காட்டு வழியாகப் புறப்பட்ட ஊமைத்துரைக் குழுவினர், முதன் முதலாக சுப்பம்மாள் குழுவினரைச் சந்தித்தார்கள். அங்கு இருந்து மேலும் நடந்து ஒட்டப் பிடாரம் எல்லைக்கு வந்தபோது, சிங்கத்தேவன், பொம்மையா குழுவினர் காணப்பட்டார்கள். அவர்களைக் கண்டதுந்தான் வீரத்தேவனுக்கு உற்சாகம் பிறந்தது.

ஏறக்குறைய முந்நூறுக்கு மேற்பட்ட துப்பாக்கிகள் அவர்களிடம் இருந்தன. துப்பாக்கிகள் இருந்தனவே தவிர கருமருந்து இல்லை. மருந்துக்காக ஒட்டப்பிடாரம் வெடி மருந்துக் கிடங்கைத் தாக்குவதென அவர்கள் முடிவு கட்டினார்கள்.



புரட்சிக்காரர்கள் அனைவரும் உற்சாகமாகவே இருந்தனர். சின்னப் பாண்டியர் என்ன ஆனார் என்பது தெரியாததுதான் வீரத்தேவனுக்குக் கவலையை அளித்தது. பொம்மையா சொன்ன செய்தியில் இருந்து, சின்னப் பாண்டியர் தப்பித்துவிட்டது மட்டும் புலனாயிற்று.

அந்தி பட்டுவிட்டது,

ஏறக்குறைய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அந்தப் புரட்சி வீரர்கள், ஒருமுகமாக இரைச்சலிட்டுக் ஒட்டப்பிடாரம் வெடிமருந்துக் கிடங்கை நோக்கிப் பாய்ந்தார்கள்.

பாளையங்கோட்டைப் புரட்சியைப் பற்றி அப் பொழுதுதான் கேள்விப்பட்டு இருந்த ஒட்டப்பிடாரத்து மக்களும் இதில் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

கிடங்கில் அதிகமான காவல் இல்லை. சுற்றி நின்ற அறுபது பேர்களைக் கொல்வது புரட்சி வீரர்களுக்குச் சுலபமாக இருந்தது.

ஆனால் கிடங்கின் சுவரை உடைப்பது கடினமாகி விட்டது. பதினாறடி கனம் இருந்த அந்தச் சுவரை மிகவும் கஷ்டப்பட்டு, புரட்சிவீரர்கள் தகர்த்தார்கள். எல்லாத் துப்பாக்கிகளிலும் மருந்தை நிரப்பிக் கொண்டார்கள். ஓலைப் பெட்டிகளிலும் மருந்தை அள்ளிக்கொண்டார்கள். திட்டமிட்டபடி, இரவோடு இரவாகப் பாஞ்சாலங் குறிச்சிக்குப் போக முடிவு கட்டினார்கள்.

அஞ்சுகம் மிகவும் களைத்துப் போயிருந்தாள். கையில் இருந்த குதிரைகளில் ஒன்றில் அவளும் வீரத்தேவனும் ஏறிக் கொள்ளும்படி வற்புறுத்தினார் ஊமைத்துரை.

தாமும் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டார். கையில் கருமருந்து இருந்ததால், யாரும் தீப்பந்தங்கள் ஏந்த வேண்டாம் என்று கட்டளையிட்டார். இருளிலேயே எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சி நோக்கிப் புறப்பட்டார்கள்.

நகரில் நடந்தவற்றையெல்லாம் வீட்டில் இருந்தே கேள்விப்பட்ட கண்ணாத்தாள், தன் கணவன் என்ன ஆனான் என்பதைத் தெரிந்து கொள்ளப் புறப்பட்டாள்.

நகரில் நின்று கொண்டு இருந்த மக்கள் பேசிய பேச்சில் இருந்து எல்லோரும் பாஞ்சாலங் குறிச்சிக்குத் தான் போயிருக்க முடியுமென முடிவு கட்டினாள்.

கதிரவன் படியுமுன்பே நகரைவிட்டு வெளியேறினாள். பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் புறப்பட்டாள்.

வழியில் எதிர்ப்பட்ட ஒரு வெள்ளைப்படை அவளைப் பிடித்துக்கொண்டது. ''யார் அவள்?'' என்று விசாரித்தது. அவள் தயக்கமின்றிப் பதில் சொன்னாள். வெள்ளையர்கள் அவளை விட்டு விட்டார்கள். தைரியம் மிகுந்தவளாய் அவள் மேலும் நடந்தாள்.

பாஞ்சாலங்குறிச்சிக்கு மூன்றாவது கல்லில் ஒரு சிறிய கிராமம்; அங்கு ஐந்தே வீடுகள்! ஒரு வீட்டைத் தவிர பாக்கி நான்கும் குடிசைகள்.

அந்தப் பெரிய வீட்டின் தலைவன் சென்னகேசவ நாயக்கன் என்பவன். வெள்ளையர்களுக்கு உளவு சொல்வதில் பேர்போனவன். பாஞ்சாலங்குறிச்சியில் யாரும் சந்தேகப்படாமல் நடந்து கொண்டவன்; கட்டபொம்மனுக்கு ஓரளவு கடனும் கொடுத்து வந்தவன். இங்கே கடன் கொடுப்பான்; அங்கே உளவு சொல்வான். சுற்று வட்டாரத்தில் ஆறு ஏழு கிராமங்கள் வரை அவனுக்குச் சொந்தம்.

அவனது வீட்டின் வாசலுக்கு வந்தாள் கண்ணாத்தாள். வெளியிலே தெருவிளக்கு மினுக்கிட்டுக் கொண்டு



இருந்தது. ஒரு மூலையில் நான்கு கம்பளத்தார்கள் உட்கார்ந்து சுருட்டுப் புகைத்துக்கொண்டு இருந்தார்கள்.

கண்ணாத்தாள் அந்த முன் திண்டின்மீது வந்து அமர்ந்தாள். நடந்து வந்த களைப்போடு, பசியும் தோன்றிற்று. ஆனாலும், அவள் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. பாஞ்சாலங்குறிச்சிக்கு ஊமைத்துரையும் குழுவினரும் வந்துவிட்டார்களா என்பதையும், அங்கு ஏதாவது நடந்துகொண்டிருக்கிறதா என்பதையும் அந்தக் கிராமத்திலேயே தெரிந்து கொள்ள அவள் விரும்பினாள்.

அங்கு இருந்த நால்வரிடம் கேட்கலாமா என்று எண்ணினாள். அவர்கள் நால்வரும் தங்களுக்குள் தெலுங்கில் ஏதோ பேசிக் கொண்டு இருந்தனர். அவள் கேட்பதற்குள், அவர்களிலே ஒருவன் அவளைப் பார்த்து, ''யாரம்மா நீ?'' என்றான்.

''எனக்குச் சொந்த ஊர் நாட்டரசன் கோட்டை ஐயா! அங்கேதான் போய்க்கொண்டு இருக்கிறேன்!'' என்றாள்.

ஒருவன் அவளைக் கூர்ந்து கவனித்தான்.

''இப்படித் தனியாகப் போகலாமா, அம்மா?'' என்று ஒருவன் கேட்டான்.

''நான் ஓர் ஏழை. என் தந்தைக்கு உடல் நலம் இல்லை. என்னைப் பாளையங்கோட்டையில் கொடுத்திருக்கிறார்கள். இரவுக்குள் நான் நாட்டரசன் கோட்டை போய்ச் சேர வேண்டும். இல்லையென்றால் நான் என் தந்தையை உயிரோடு காண முடியாது!'' என்று ஒரு பொய்யைச் சொன்னாள் அவள்.

''ஐயோ பாவம்!'' என்று அனுதாபப்பட்டார்கள் அவர்கள்.

"ஏனய்யா! பாளையங்கோட்டையில் ஏதோ புரட்சியாமே! சிறைச்சாலையை உடைத்து, ஊமைத்துரையை விடுதலை செய்துவிட்டார்களாமே! உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டாள்.

"ஆங்... அது வேற நடக்குமா? கப்பளத்தான் எல்லாம் இப்ப செத்துப் போய்க் கெடக்கான். சிறைச்சாலை என்ன கடலைக் கொட்டையா, உடைச்சு எறியறதுக்கு. தினசரி வழியில் போறவங்க ஏதாவது புளுகிக்கிட்டிருப்பாங்க. வெள்ளைக்காரன் பீரங்கிக்கு முன்னால் இனி எதுவும் நடக்காது" என்றான் ஒருவன்.

"அப்படியே சிறையை ஒடச்சுத்தான் இனி என்ன கிழிக்கப் போறாங்க! எல்லாப் பயலும் சோத்துக்கில்லாம சாகிறாங்க; இனி எங்கே சண்டை போட வாராப் போறான்! ஊமைத்துரை சிறைச்சாலையிலேயே செத்துப் போவான். உள்ளேயே பொசுக்கிடுவாங்க; பொணத்தைக் கூடக் காட்ட மாட்டாங்க!" என்றான் இன்னொருவன்.

"இனி இந்த வீட்டு ஐயா தான் பாஞ்சாலங்குறிச்சியை ஆளப்போறாரு! வெள்ளைக்காரங்க வந்து ரொம்பச் செஞ்சிக்கிட்டிருக்காங்க. இவர் தான் முடியாதுன்னு சொல்லிக்கிட்டிருக்காரு" என்றான் மற்றொருவன்

அந்தப் பரிதாபத்துக்கு உரியவர்களை அனுதாபத்தோடு கவனித்தாள். 'நாட்டு நிலைமையைப்பற்றி இவர்கள் எவ்வளவு தெளிவாகக் கணக்குப் போட்டு இருக்கிறார்கள், ஒரு காரியம் நடந்து முடிந்ததற்குப் பின்னாலே கூட அப்படி நடக்கும் என்ற எண்ணம் இவர்களுக்கு இல்லையே! ஓர் இனத்துக்கு உள்ளேயே இப்படி இருந்தால், வருகிறவர்களுக்கு ஏன் ஏளனமாகத் தோன்றாது!'

அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

திடீரென்று வீட்டின் கதவு திறக்கப்பட்டது.

உயரமாக இருந்த ஒருவர் வெளியிலே வந்தார்.



அவரைப் பார்த்ததும், அந்த நால்வரும் சுருட்டைக் கீழே போட்டுவிட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு எழுந்து நின்றார்கள்.

உட்கார்ந்து இருந்த கண்ணாத்தாளை அவர் கவனித்தார். விசாரித்தார். பழைய பொய்யையே திருப்பிச் சொன்னாள், கண்ணாத்தாள்.

"வாம்மா, சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று அவர் அவளை உள்ளே அழைத்தார்.

"தைரியமா போம்மா; சாப்பிட்ட உடனே வண்டி கட்டிக்கொண்டு போய்விடுவோம்" என்று சிபாரிசு செய்தார்கள், அவர்கள்.

கண்ணாத்தாள் தயங்கினாள்.

அவர்கள் மிகவும் அன்போடு பேசினார்கள்.

நம்பிய கண்ணாத்தாள் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அவளை மாடியில் கொண்டு போய் உட்கார வைத்து விட்டு, கீழே வந்து கதவைத் தாழிட்டார் அவர்.

வெளியில் இருந்து நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

## 9. பசி வந்திடப் பறந்துபோம்!

மாடியில் வந்து உட்கார்ந்த கண்ணாத்தாள் திகைத்தாள்.

அந்த வீட்டில் வீட்டுக்காரரைத் தவிர யாரும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

கீழே இறங்கிவிடலாமா என்று எண்ணினாள் வெளியில் இருந்தவர்களிடம் அப்போதுதான் அவளுக்குப்

பயம் வந்தது. அவசரத்தில் சிறிது கூடச் சிந்திக்காமல் வந்துவிட்டதற்காகத் தன் மீதே எரிச்சல் பட்டுக் கொண்டாள்.

கதவைத் தாளிட்ட சென்னகேசவ நாயக்கன் நேரே மாடிக்கு வந்து, ''சாப்பாடு கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டான்.

''இல்லை; எனக்குப் பசியில்லை!'' என்றாள் கண்ணாத்தாள்.

அவன் ஒரு பழத்தை எடுத்து வந்து, ''என் தோட்டத்திலேயே விளைந்த பழம், சாப்பிடு'' என்றான்.

''வேண்டாம்'' என்று கூறிய கண்ணாத்தாள், ''நான் இப்பொழுதே புறப்படுகிறேன். நேரமாய் விட்டது'' என்றாள்.

''சாப்பிட வந்துவிட்டுச் சாப்பிடாமல் செல்கிறேன் என்கிறாயே, பயித்தியமே! நான் கொஞ்சம் கூடப் பொல்லாதவன் அல்ல. ஒரு நல்ல மனைவி கிடைக்காததால்தான் தனிமையிலேயே இருந்து வருகிறேன். முந்நூறு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஐம்பது குதிரைகள் வைத்திருக்கிறேன். நஞ்சையும் புஞ்சையுமாக நாலாயிரம் காணிக்கு மேல் இருக்கிறது. மூன்றாவது மாடத்தில் போய் நின்று, கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பார்! அவ்வளவும் என் நிலம்! பாஞ்சாலங்குறிச்சியைக்கூட நானே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வெள்ளைக்காரர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நீ எதற்கும் கவலைப் படவேண்டியது இல்லை. இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடுவதானால், ஒரு வீடு வேண்டுமானாலும் கட்டித் தருகிறேன்.''

—அவன் தன்னைப்பற்றியே பேசிக்கொண்டு இருந்தான். சாடையாகத் தன் ஆசையையும் வெளியிட்டான்.

கண்ணாத்தாள் பயந்தது நடந்தே விட்டது.



ஆம்; அவன் வெகு நேரம் தாமதிக்க விரும்பவில்லை.

புரிந்துகொண்ட கண்ணாத்தாள், இருந்த இடத்தை விட்டு எழுந்தாள்.

''ஐயா, உங்களைக் கும்பிடுகிறேன்! சாப்பிட அழைத்து விட்டுத் தவறாக ஏன் பேசுகிறீர்கள்! எங்கள் உருவச் சிலைகள்கூட இந்தப் பேச்சைச் சகித்துக்கொண்டு இருக்க மாட்டா. கம்பளத்துப் பெண்களைப் போலவே, மானம் மரியாதையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள். தயவு செய்து என்னை அனுப்பி விடுங்கள்'' என்றாள்.

''நான் என்ன சொல்லிவிட்டேன் என்று இப்படிப் பதறுகிறாய். வேண்டுமானால், நீ நிரந்தரமாக இங்கே தங்க வேண்டாம்; விடிவதற்குள் வண்டி கட்டி உன் ஊருக்கு அனுப்பிவிடுகிறேன். கொஞ்ச நேரம் நீ இங்கே இருப்பது யாருக்குத் தெரியப் போகிறது!'' என்றான் அவன்.

''உங்களுக்கு வெட்கமாக இல்லையா? காலாகாலத்தில் உங்களுக்குக் கல்யாணமாகியிருந்தால், இப்போது என்னைப் போலொரு பேத்தி இருப்பாள். தயவு செய்து என்னை அனுப்பி விடுங்கள். நீங்கள் நினைப்பது எதுவும் நடக்காது. நான் காத்திருந்து பழிவாங்கும் மறவர் குலத்திலே பிறந்தவள். என் சகோதரர் ஊமைத்துரையின் தளபதி. என் கணவர் மற்றொரு தளபதி. உங்களைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டுவிடுவார்கள். உங்களைப் பயமுறுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. அவர்கள் இன்றோ நாளையோ பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்துவிடப் போகிறார்கள்! மரியாதையாக என்னை வெளியில் அனுப்பி விடுங்கள்!'' என்றாள், கண்ணாத்தாள்.

சென்னகேசவ நாயக்கனுக்குக் கோபம் பிறந்தது.

''என்னம்மா பூச்சி காட்டுகிறாய்! ஊமைத்துரை கூட்டம் இங்கு வரப்போகிறதா? நீ தூக்கத்தில் இருக்கிறாயா? கண்களை நன்றாகத் துடைத்துக் கொள். கனவு கண்டு மலைக்காதே. இனி இந்தப் பகுதியை ஆளப் போகிறவனே நான்தான். நீ அழகாக இருக்கிறாய். அழகான பெண்கள் ஒழுங்கானவர்களாக இருந்தால், இப்படி காட்டு வழியில் நடுராத்திரியில் தனியாக வர மாட்டார்கள். நிறையப் பொன் வாங்குவதற்கு அடி போடுகிறாயா? சரி ஐநூறு பொன் கொடுத்துவிடுகிறேன் வா!'' என்று அவளை நெருங்கினான்.

பளிச்சென்று கண்ணாத்தாள் பக்கத்தில் இருந்த குத்துவிளக்கை எடுத்துக்கொண்டாள்.

''என்னை நீ புரிந்து கொள்ளவில்லை, அறிவு கெட்டவனே! மறவன் மகள் நான். முறத்தினால் புலியைத் துரத்திய சாதி, எங்கள் சாதிதான். நாங்கள் பெண்ணாகவும் இருப்போம்; புலியாகவும் மாறுவோம். எங்கள் இதயத்திலே பெண்மை இருக்கிறது; கைகளிலே ஆண்மை இருக்கிறது; எங்கள் கண்களிலே கணவருக்கு முன் கனிவு பிறக்கும்; பகைவர்களின் முன் கனல் பிறக்கும் நீ இப்போதுதான் மறக்குலப் பெண்ணைச் சந்திக்கிறாய் என்று கருதுகிறேன். இதற்கு முன்னால் எந்த மறத்தியிடமாவது இப்படி நீ பேசியிருந்தால், இன்று உயிரோடு இருந்திருக்க மாட்டாய். கற்பும், பொற்பும் உயிரினும் பெரிதாகக் கருதிக் காமுகர்களைக் காவுகொண்டவர்கள் மறக்குலப் பெண்கள். மானங்கெட்ட உனக்கு அதன் பெருமை தெரியாது. என்னைக் காப்பாற்றுவதற்காக யாரையும் இங்கு நான் எதிர்பார்க்கப்போவது இல்லை. இன்னும் என்னை நெருங்கினால் உன்னைக் கொல்வேன்; அல்லது நான் சாவேன்!'' என்று முழங்கினாள் கண்ணாத்தாள்

அந்தக் காமுகன் இப்போது மிகவும் ஆத்திரம் கொண்டவன் ஆனான். அவளை அடையாமல் விட்டு விடுவது தன் பெருமைக்கு இழுக்கு என்று கருதினான்.



எப்படியும் அவளை அணைத்தே தீருவது என்று முடிவு கட்டினான்.

வார்த்தைகளை முடித்துக்கொண்டு, பலவந்தத்தில் இறங்கினான்.

குத்துவிளக்கின் துணையோடு பலங்கொண்டமட்டும் போராடினாள், கண்ணாத்தாள். விளக்கு முனையால் அவனைக் காயப்படுத்தினாள், மான உணர்ச்சியால் அவள் உடம்பில் புது பலம் பாய்ந்தது மறவர்குல மகளுக்கு இயற்கையான மனவலிவு மிகுந்தது. இருவருக்குள்ளும் ஒரு போரே நடந்தது.

இந்த நேரத்தில் வெளியில் ஏராளமான மக்களின் ஆரவாரம் கேட்டுத் திகைத்தான், சென்னகேசவ நாயக்கன்.

அது ஊமைத்துரை குழுவினரின் ஆரவாரந்தான் என்பதை உணர்ந்துகொள்ள கண்ணாத்தாளுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. அவள் முகம் மலர்ந்தது. களைத்திருந்த நிலையிலும் உற்சாகமாக, ''வருகிறார்கள், ஊமைத்துரையும் வீரர்களும் வருகிறார்கள்!'' என்று கூவினாள்.

அவனும் புரிந்து கொண்டான். வெளியில்கூட ஆரவாரத்தில் ''ஊமைத்துரை வாழ்க!'' என்ற ஒலி அமைதியாக இருந்தது.

அவன் மேனி வியர்த்தது. கண்ணத்தாள் சொன்னவை உண்மை என்பதை உணர்ந்துகொண்டான். இப்போது அவளை வெளியில் விட்டால் தனக்கு ஆபத்து என்பதைப் புரிந்துகொண்டான்!

கண்ணாத்தாள் அணைந்துபோன குத்துவிளக்கோடு மாடியை விட்டு இறங்கி ஓடினாள். பின்னாலேயே ஓடி தலைமயிரைப் பிடித்து இழுத்துப் போட்டான், அவன்.

உடனே கதவைத் திறந்து வேகமாக வெளியிலே போய், வெளிப்புறம் பூட்டிக்கொண்டான்.

அங்கே உட்கார்ந்து இருந்த நான்கு பேரையும் அவசர அவசரமாக இழுத்துக்கொண்டு, பருத்திக் காட்டுக்குள் நுழைந்துவிட்டான். திவட்டி வெளிச்சம் இல்லாமல் இருந்தும், தூரத்தில் ஒரு கூட்டம் வந்து கொண்டு இருப்பதை அவனால் காண முடிந்தது.

ஊமைத்துரையும் குழுவினரும் வருகிற வழியெல்லாம் ஒவ்வொரு கிராமத்திலும் புகுந்து வீரர்களைச் சேர்த்துக் கொண்டு வந்தார்கள். அந்தக் கிராமத்தை நெருங்கிய போது, பத்தாயிரத்து மேற்பட்டவர்கள் அதில் சேர்ந்து இருந்தார்கள்.

அந்தக் கிராமத்துக்குள் வராமல் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போவதற்கும் வழி இருந்தது. இருப்பினும் சென்ன கேசவநாயக்கனின் உதவியைக் கேட்கும் நோக்கத்துடன் பாதையைக் கிராமத்தின் உட்புறமாகத் திருப்பிக் கொண்டார் ஊமைத்துரை.

வீரர்கள் கிராமத்தை நெருங்க, நெருங்கப் பருத்திக் காட்டுக்குள் இருந்த சென்னகேசவ நாயக்கனுக்கு பயித்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. அவர் தன்னைக் காண வருகிறார் என்பதை அறிந்துகொண்டான். 'இந்நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் எப்படி அவர் முகத்தில் விழிப்பது! ஐயோ! அவளைக் கொன்று ஒரு கூடைக்குள் போட்டு மறைக்காமல் போனோமே! மறைத்திருந்தால் ஊமைத்துரையும் சந்தித்து வேண்டியவன் போல் நடித்திருக்கலாமே! இப்போது என்ன செய்வது? ஆ! ஊமைத்துரையும் வீரர்களும் நம் வீட்டை நோக்கித்தான் போகிறார்கள். அவள் சத்தம் போடுவாள். கதவை உடைப்பார்கள். உள்ளே போய் விவரத்தைப் புரிந்துகொள்வார்கள், பாஞ்சாலங் குறிச்சியை நாம் ஆளப்போவதாக வேறு சொன்னோமே! அதையும் அவள் ஊமைத் துரையிடம் சொல்லிவிட்டால்,



ஊமைத்துரை நம் வஞ்சக எண்ணத்தைப் புரிந்து கொண்டு விடுவாரே! வெள்ளைக்காரன் சிறையை உடைத்துவிட்டாரே! இனி இந்த ஊரில் நாம் தலை காட்டவே முடியாதே!'

—அவன் கல்லாகச் சமைத்து பருத்திக்காட்டுக் குள்ளேயே உட்கார்ந்துவிட்டான்

அவன் பயந்தபடியே நடந்தது. ஊமைத்துரையும் வீரர்களும் அவன் வீட்டுக்கு வெளியே வந்து நின்றார்கள். ஊமைத்துரை குதிரையைவிட்டுக் கீழே இறங்கி, கதவு அருகில் வந்து, "நாயக்கரே! நாயக்கரே!" என்று அழைத்தார். உள்ளே கதவு அருகில் நின்ற கண்ணாத்தாள், "ஐயா! கதவைத் திறங்கள்! பாவி என்னைப் பூட்டிவிட்டுப் போய்விட்டான்! கதவை உடையுங்கள் கதவை உடையுங்கள்!" என்று கத்தினாள்.

உள்ளிருந்து வந்த அலலக் குரலைக் கேட்டுத் திகைத்தார், ஊமைத்துரை. வெளியிலே பூட்டப்பட்டு இருப்பதையும் கண்டார். அவருக்கு எதுவும் புரியவில்லை.

"ஐயா, நீங்கள் ஊமைத்துரைத் தானே! சீக்கிரம் கதவை உடையுங்கள்; முழு உண்மைகளையும் நேரில் சொல்லுகிறேன். கதவை உடையுங்கள்!" என்று கத்தினாள் கண்ணாத்தாள்.

அந்தக் குரல் கேட்டுக் குதிரைகளில் இருந்த சிங்கத் தேவனும் வீரத்தேவனும் குதித்தோடி வந்தார்கள். இருவருக்குமே அந்தக் குரல் பழக்கமான குரலாகத் தோன்றிற்று. துடிக்கின்ற இதயங்களோடு அவர்கள் நின்றார்கள்.

வீரர்கள் கதவை உடைத்தார்கள். கதவு கீழே தள்ளப் பட்டது.

அங்கே தலைவிரி கோலமாகக் கண்ணாத்தாள் நின்றாள்.

"ஆ, கண்ணாத்தா!" என்று அலறினான், வீரத் தேவன்.

அதே குரலில் தன்னை மறந்து கதறிவிட்டான், சிங்கத் தேவன்.

இருவரையும் ஒருங்கே கண்ட கண்ணாத்தாள் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள்.

பாளையங்கோட்டையில் இருந்து தப்பி, மதுரைப் பாதையில் சென்ற சின்னப் பாண்டியரும் வீரர்களும் ஒரு காட்டு மண்டபத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

பின்னாலேயே மற்ற வீரர்களும் வருவார்கள் என்று எதிர்பார்த்த அவர் ஏமாந்தார். அவருடன் வந்து இருந்தவர்கள், பெரும்பாலும் கம்பளத்து நாயக்கர்களாகவே இருந்தனர். யாருக்கும் அவர்தான் சின்னமருது என்பது தெரியாது. அவரும், தன்னை யாருக்கும் காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

தான், பாளையங்கோட்டைக்கு வந்தது அண்ணனுக்குத் தெரிந்தால், மிகவும் கடுமையாக நடந்து கொள்வார் என்பதோடு, சிவகெங்கைக்கும் ஆபத்தாக வந்து சேரும். அதனால், தன்னையும் ஒரு சாதாரண வீரனாகவே மற்றவர்கள் கருதும்படி நடந்துகொண்டார், அவர்.

அவர் ஏறிவந்த குதிரையும், பாளையங்கோட்டையில் குத்தப்பட்டு இறந்தது. இனி, எப்படிச் சிவகெங்கைக்குப் போய்ச் சேருவது என்பதே அவருக்கு ஒரு பிரச்சினையாகி விட்டது.

தான்தான் மருது என்று சொல்லிக்கொண்டால் சுற்று வட்டாரக் கிராமங்களில் உள்ளவர்கள், ஒருவேளை குதிரை கொடுத்து உதவக்கூடும். அதைச் சொல்லிக் கொள்ளவும் முடியாத சூழ்நிலை. இந்நிலையில் தன்னுடன் வந்த இருபது பேருக்கு மத்தியில் சிந்தனையோடு அமர்ந்து இருந்தார், சின்ன மருது பாண்டியர்.



காளையார் கோவில் முத்துவடுகத் தேவர் கொல்லப் பட்டதும், வேலு நாச்சியாரோடு திண்டுக்கல்லைநோக்கிப் போகும் பொழுதுதான், அவர் பசியால் ஏற்படும் வேதனையைக் கண்டு இருந்தார். அதே வேதனையை, இப்பொழுது மீண்டும் அவர் சந்தித்தார்.

பசி, காதை அடைத்தது. எந்தக் கிராமத்துக்காவது போகலாம் என்றால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெளிச்சமே தெரியவில்லை. ஆயினும், பசியை அவர் பொறுத்துக்கொண்டார். காலையில் எப்படியாவது ஒரு குதிரையை வாங்கி, சிவகெங்கைக்குப் போய்விடுவது என்று முடிவு கட்டினார்.

இல்லை என்றால், பெரிய பாண்டியரின் முகத்தில் விழிக்க முடியாது. பாவம்! நல்லெண்ணத்தோடு பாளையங்கோட்டைக்கு வந்த அவரைச் சந்தர்ப்பம் காட்டிக் கொடுத்துவிடப் போகிறது என்பதை, அவர் அறிய மாட்டார்.

பொழுது விடிந்தது.

பசிக் கிறக்கம் இருந்தாலும், பாளையங்கோட்டையின் வெற்றி பெற்றுவிட்ட உற்சாகத்தில், அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தார்கள் வீரர்கள்.

சின்னப் பாண்டியர் மட்டும், முழு இரவையும் விழித்தே கடத்தியிருந்தார்.

நிலம் தெளிந்த நேரத்தில் எழுந்து அந்த வீரர்களை விட்டுவிட்டுத் தனியாகவே புறப்பட்டுவிட்டார்.

அவர் உள்ளம் பல எண்ணங்களோடு போராடிக் கொண்டு இருந்தது. அடிக்கடி தாம் தவறு செய்து விட்டதாகவே ஓர் எண்ணம் தலை தூக்கியது. ஒரு பெரிய காரியம் முடிந்திருப்பதை எண்ணி, அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டே நடந்தார்.

கதிரவன் தோன்றி, மூன்று நாழிகையாயிற்று.

அவர் கண்களுக்கு ஒரு கிராமம் தட்டுப்பட்டது. எதிரே வந்த வழிப்போக்கரிடம், அது என்ன கிராமம் என்று விசாரித்தார். அவர். நல்லூர் என்பது அந்தக் கிராமத்தின் பெயர். முற்றிலும் வெளியுலகத் தொடர்பே இல்லாமல், விவசாயத்தையும் கால்நடைகளையுமே நம்பி வாழ்பவர்கள், அந்தக் கிராமத்து மக்கள்.

கிராமத்தின் அருகில் இருந்த பெரிய கண்மாய் நிரம்பி வழிந்ததைக் கண்ட சின்னப் பாண்டியருக்கு, வழிப்போக்கர்கள் சொல்வது உண்மை என்றே பட்டது. ''அங்கே விலைக்குக் குதிரை கிடைக்குமா'' என்று கேட்டார். ஆடுமாடு கோழிகளைத் தவிர, வேறு எதுவும் அங்கு இல்லை என்றார், ஒரு வழிப்போக்கர். சின்னப் பாண்டியர் வேறு கிராமத்தை நாட வேண்டியவரானார்.

பக்கத்திலே நான்கு கல் தூரத்திலே ஒரு கிராமம் இருப்பதாகவும், அங்கே குதிரை வியாபாரி ஒருவன் இருப்பதாகவும், அவனிடம் கிடைக்கக்கூடும் என்றும், வழிப்போக்கர்கள் சொன்னார்கள். சின்னப் பாண்டியர் மேலும் நடந்தார்.

இரண்டுக்கல் தூரத்தைச் கடந்திருப்பார்கள், எதிரே ஒருவன், தான் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு, வேறு ஒரு குதிரையைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த குதிரை தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை, சின்னப்பாண்டியருக்குத் தோன்றியது.

மெதுவாக அவன் அருகே நெருங்கி, விசாரித்தார். குதிரையை விற்பதற்கு, அவன் தயாராக இருந்தான். விலையாக நானூறு பூவராகன் கேட்டான்,

அவரிடம் பணம் இல்லை. சற்று திகைத்தார். அவன் தனியாக இருந்ததால், அவனையும் சிவகெங்கைக்குக் கொண்டு போய் பணம் கொடுத்து அனுப்பிவிடலாம் என்று எண்ணினார். அந்த எண்ணத்தை மெதுவாக அவனிடமே வெளியிட்டார்.



அவனோ தான் அவசரமாகத் தன் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பிக்கொண்டு இருப்பதாகவும், சிவகெங்கைக்கு வரமுடியாது என்றும் கூறிவிட்டான்.

அவன் உடனேயே போய்விடுவான் போல்இருந்தது. தான் யார் என்பதைச் சொல்லிவிட்டால், அவன் குதிரையை கொடுத்துவிடுவான் என்று நம்பிய சின்னப் பாண்டியர் முதலில் அவனைப்பற்றி விசாரித்தார். அவன் வெள்ளைக்காரர்களின் ஆளாக இருந்தால், அவர் பெயரை வெளியிடுவது ஆபத்தாக முடியும் அல்லவா? அவன் ஊமைத்துரையின் ஆதரவாளனாக இருக்கவேண்டும் என்று அவர் ஆசைப்படவில்லை. எதிலும் தொடர்பற்ற கிராமவாசியாக இருந்தாலும் போதும். அந்த ஆசையில் தான் விசாரித்தார்.

அவன் சொன்ன விவரங்களில இருந்து, அவன் ஒரு சாதாரண வியாபாரியே என முடிவு கட்டினார் அவர். அவன் சொந்த ஊர் ஒட்டப்பிடாரமாம். குதிரை விற்பது தான் அவன் தொழிலாம். சின்னப் பாண்டியருக்கு நம்பிக்கை பிறந்தது.

அவர் எதற்காக வந்தார் என்பதை மட்டும் சொல்லாமல், தான் யார் என்பதை வெளியிட்டார். அவன் முதலில் அதை நம்பவில்லை. உடனே, சின்னப்பாண்டியர் தம் கழுத்தில் கிடந்த வயிரம் பதித்த புலி நகத்தை மெதுவாக எடுத்து, அவன் கையில் கொடுத்தார்.

''இந்தா, இதை வைத்துக்கொள். ஆயிரம் பூவராகனுக்கு மேல் விலை உள்ளது. இதை உன்னை நம்பி கொடுக்கிறேன். இதில் என் பெயர் பொறித்திருக்கிறது. இதை வைத்துக்கொள். பத்து நாளுக்குள் எப்போதாவது, இதை எடுத்துக்கொண்டு சிவகெங்கைக்கு வா.

பணத்தைக் கொடுத்துவிட்டு, இதை வாங்கிக் கொள்கிறேன். அப்போதாவது, உனக்கு நம்பிக்கை வரட்டும்!" என்றார்.

அவன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். ஒரளவு நம்பினாலும் அதை வாங்கிக்கொள்ளாமல் குதிரையை கொடுக்க அவன் தயாராய் இல்லை.

அவன் வியாபாரி அல்லவா! வியாபாரிகள் அரசியலில் புகுந்தால்கூட, அதையும் ஒரு வியாபார மன்றமாக்கி விடுவார்களே!

அவனும் அந்த முறையிலேயே, சின்னப் பாண்டியரின் புலிநகச் சங்கிலியைப் பெற்றுக்கொண்டு, கையில் இருந்த குதிரையைக் கொடுத்தான்.

அதன் பிறகு, அவன் மிகவும் குழைந்து பேசினான்; மருது பாண்டியரைப் புகழ்ந்தான். "இனி நல்ல குதிரைகள் கிடைக்கும் போதெல்லாம், சிவகெங்கைக்குக்கொண்டு வருகிறேன்!" என்றான். சின்னப்பாண்டியருக்கு உற்ற தோழன்போல ஆகிவிட்டதாகப் பெருமிதம் கொண்டு பேசினான். ஆயிரம் பூவராகன் விலையுள்ள சங்கிலியல்லவா கிடைத்து இருக்கிறது!

சின்னப் பாண்டியர், அவனிடம் விடை பெற்றுக் கொண்டு, குதிரையில் ஏறினார்.

"மதுரைப் பாதையிலா போகப் போகிறீர்கள்? என்று கேட்டான், அவன்.

"ஆமாம்!" என்றார், அவர்.

"கொஞ்சம் பார்த்துப் போங்கள். எங்கேயாவது தங்கி விட்டு இரவிலே பயணம் போவது நல்லது. குதிரை கூட இரவு நேரத்தில் வேகமாகப் போகும்" என்றான்.

சின்னப் பாண்டியர் சிரித்துவிட்டுக் குதிரையைத் தட்டி விட்டார். வியாபாரி, சங்கிலியை ஒருமுறை பார்த்துக் கொண்டு, பாளையங்கோட்டைப் பாதையில் சென்றான்.



கொடுத்தாகி
குதிரைக்கு ஈடாகச் சங்கிலியைக் விட்டது. ஏதாவது ஒரு நாற்சந்தி உணவு விடுதியில் இறங்கிப் பலகாரம் சாப்பிடலாம் என்றால், அதற்குக் காசு இல்லை. பசி மயக்கத்தோடு வழியையும் கடக்க முடியுமா என்பது, அவருக்குச் சந்தேகமாயிருந்தது.

'சரி, கயத்தாறுவரை போய்விடுவோம். அங்கே இருக்கும் பொது விடுதியில் இறங்கி, ஏழைகளோடு ஏழையாகப் பிச்சைக்காரர்களுக்கு இடப்படும் புளிச்சோற்றை வாங்கி உண்ணலாம்' என்று எண்ணினார், சின்னப் பாண்டியர். இதை நினைப்பதற்கே அவருக்கு வெட்கமாகத் தான் இருந்தது. என்றாலும், வேறு வழியில்லை. பிச்சைக்காரர்களும் மனிதர்கள் தானே? இந்த தத்துவங் கூட அவர் மனத்தில் தோன்றியது.

" மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்!"

என்ற பாடலை, மனத்திற்குள்ளாகவே ஒரு முறை பாடிக் கொண்டு, சின்னப் பாண்டியர் குதிரையை வெகு வேகமாகத் தடவி விட்டுக்கொண்டு பறந்தார்.

உச்சி வேளையில் கயத்தாற்றுக்கு வந்து சேர்ந்தார்.

எண்ணக் குழப்பத்தில், கயத்தாற்றில் வெள்ளைப் படையிருப்பதையே மறந்து இருந்தார் அவர். இருப்பினும், அவர் யார்என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் அவரை எந்தக் கேள்வியும் கேட்காமல் விட்டுவிடுவார்கள் என எண்ணினார்.

பொது விடுதியில் இறங்கி, ஒரு குத்துக் கல்லில் குதிரையைக் கட்டிவிட்டு, உள்ளே நுழைந்தார் சின்னப் பாண்டியர்.

வெளியிலே நின்றுகொண்டு இருந்த சில ஆங்கிலச் சிப்பாய்கள், அவரையும் குதிரையையுமே மாறி மாறிப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அவர் உள்ளே சென்றதும், ஒரு வெள்ளைச் சிப்பாய் குதிரையின் அருகில் வந்து, கூர்ந்து கவனித்தான். முதுகில் இரண்டு தட்டுத் தட்டினான். பட்டாளத்து ஒலிகளை எழுப்பினான். அந்தக் குதிரையும் அதில் மிகவும் பழக்கப் பட்டதுபோல் நடந்து கொண்டது.

அந்தச் சிப்பாயின் முகம் மலர்ந்தது. வேகமாக ஆங்கிலத் தளபதிகள் தங்கியிருக்கும் கூடாரததை நோக்கி ஓடினான்.

சின்னப்பாண்டியர் விடுதிக்குள் தான் யார் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், ஏழைகளுக்காகப் போடப்பட்டு இருந்த இலைகளில் ஒன்றில் அமர்ந்து கொண்டார். வயிறாரச் சாப்பிட்டார். பலநாள் சாப்பிடாத ஓர் ஏழைகூட, அவ்வளவு அதிகமாகவும் அவசரமாகவும் சாப்பிட மாட்டான். அப்படிச் சாப்பிட்டார், சின்னப் பாண்டியர்.

அவர் வெளியில் வந்து கை கழுவுவதற்கும், பத்துக் குதிரைகள் கொண்ட சிறிய படையோடு ஓர் ஆங்கில மேஜர் அங்கே வருவதற்கும் சரியாய் இருந்தது.

''இவன்தான், இவன்தான்'' என்று கத்தினான், ஒரு சிப்பாய்.

''பிடியுங்கள்!'' என்று, ஆங்கிலத்தில் உத்தரவிட்டார் மேஜர்.

பத்துச் சிப்பாய்கள் சின்னப் பாண்டியரைப் பிடித்து இழுத்துக் கையில் விலங்கு இட்டார்கள்.

அவர் திகைத்தார். பாளையங் கோட்டையில் தன்னைப் பார்த்துவிட்டார்கள் போல் இருக்கிறது என்று எண்ணினார். இமைப் பொழுதில், அவர் உள்ளத்தில்



ஆயிரம் எண்ணங்கள் சூழ்ந்து கொண்டன. பெரிய பாண்டியரின் கோபம் கலந்த தோற்றம், அவர் மனக் கண்ணுக்கு வந்தது. போர்க்களத்தில் அஞ்சாத அவரது உடல், ஒரு முறை ஆடி அடங்கிற்று. வியர்வை வழிந்தது.

வெள்ளையர் படையில் இருந்த ஒரு தமிழன், சின்னப் பாண்டியரை ஓங்கி அறைந்தான். ''காலின்ஸ் துரையைக் கொன்று போட்டுவிட்டு, குதிரையைத் திருடிக்கொண்டு ஓடினாயே, களவாணிப் பயலே ; எவ்வளவு தைரியமாக, மீண்டும் கயத்தாற்றுக்கே வந்திருக்கிறாய் ?'' என்றான் அவன்.

சின்னப் பாண்டியரை ஆச்சரியமும் கவலையும் சூழ்ந்து கொண்டன. 'தன்னிடம் குதிரையைக் கொடுத்தவன் குதிரை வியாபாரி அல்ல ; குதிரைத் திருடன் என்பதை உணர்ந்துகொண்டார். எப்படித் தப்புவது? திருட்டுக் குற்றத்தோடு ஒரு கொலைக் குற்றமும் அல்லவா சேர்ந்து கொண்டு இருக்கிறது! என்ன சொன்னாலும் நம்ப மாட்டார்களே. நான் தான் சின்னமருது என்பதனைச் சொல்லிவிட்டால், பெரிய பாண்டியருக்கு ஆள் அனுப்பு வார்களே ! அவருக்குத் தெரியாமல் அல்லவா, பாளையக் கோட்டைக்குச் சென்று இருக்கிறோம்...'

இத்தகைய எண்ணங்களோடு, எந்தப் பதிலும் சொல்லாமல் நின்ற சின்னப் பாண்டியரை மேலும் உதைத்துக் கூடாரத்திற்கு இழுத்துச் சென்றார்கள், ஆங்கிலச் சிப்பாய்கள்.

கூடாரத்துக்குச் செல்லும் வழி, திருநெல்வேலியில் இருந்து மதுரை போகும் நேர்வழியாகவே இருந்தது ; வலி தாங்காமல், சிப்பாய்களுக்கு மத்தியில் சென்று கொண்டிருந்த சின்னப் பாண்டியரை, அந்த வழியில் மதுரை நோக்கிப் போய்க்கொண்டு இருந்த ஒரு குதிரை வீரன் கூர்ந்து கவனித்தான். சின்னப் பாண்டியரும் அவனைக் கவனித்தார். அவன் கறுத்தான் என்பதைத் தெரிந்து கொள்ள, அவருக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

## 10. பொய்யும் உண்மை ஆகும்?

கண்ணாத்தாள் மூர்ச்சையுற்று விழுந்த போதும் வீரத்தேவனுக்குக் கலக்கம் ஏற்படவில்லை, உற்சாகமே பிறந்தது. செத்துப் போயிருப்பாளோ என்று சந்தேகப்பட்ட தங்கை, உயிரோடு இருப்பதை அவன் கண்டு கொண்டுவிட்டான்.

ஆனால், சிங்கத்தேவன் நிலைமை அதுவல்ல. அவனை வாழ வைத்துக்கொண்டு இருந்த கண்ணாத்தாள் சாகடிக்கிற நிலைமையில் வந்திருக்கிறாள்.

ஊமைத்துரைக்கோ, கண்ணாத்தாளைப்பற்றி எந்த விதக் கலக்கமும் இல்லை. சென்னகேசவ நாயக்கன் வீட்டில் 'என்ன நாடகம் நடந்துகொண்டு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புபவர் போல் அவர் காணப்பட்டார்.

வீரத்தேவன் தங்கையை அலக்காகத் தூக்கி, உள்ளே இருந்த கட்டிலில் படுக்க வைத்தான்.

சிங்கத்தேவன் அறிமுகம் இல்லாதவன் போலவே நடக்க துவங்கிவிட்டான்.

சூழ்ந்து வந்த புரட்சி வீரர்கள், ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு, உள்ளே என்ன நடக்கிறது என்பதைக் காண விழைந்தனர். ஊமைத்துரை கடுமையான குரலில் சத்தம் போட்டு. அவர்களை வெளியிலே இருக்க வைத்தார்.

கண்ணாத்தாள் விழித்தால்தான், என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்! அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து விசிறினான், வீரத்தேவன்.

சென்னகேசவநாயக்கன் எங்கே என்று தேடினார், ஊமைத்துரை எங்கு தேடியும் அவனைக் காணவில்லை.



"இது யார் வீடு?" என்று அவரிடம் கேட்டான், வீரத்தேவன்.

"சென்னகேசவ நாயக்கர் வீடு. என் அண்ணாவுக்குப் பல சமயங்களில் கடன் உதவி செய்தவர்; பாஞ்சாலங்குறிச்சி வட்டகையில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற பணக்காரர்! ஆமாம்... இவள் உன் தங்கை என்றால், இங்கே வரவேண்டிய அவசியம் என்ன?" என்றார், ஊமைத்துரை.

"அதுதான் எனக்குப் புரியவில்லை. அயோக்கியர்களால் தூக்கி வரப்பட்ட என் தங்கைக்கு அடைக்கலம் கொடுத்தவராக இருக்கலாம்" என்றான் வீரத்தேவன்.

கண்ணாத்தாள் இலேசாகக் கண் விழித்தாள்.

வீரத்தேவன் முகம் மலர்ந்தது.

சிங்கத்தேவன் தலை சுழன்றுகொண்டு இருந்தது.

இரவோடு இரவாக ஊமையன் கோட்டையைக் கட்டி முடிப்பதற்கு முன், வீரத்தேவன், சிங்கத்தேவன் இருவரில் ஒருவரை ஊமைத்துரை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாகச் சிங்கத்தேவன் கருதினான்.

கண்ணாத்தாளிடம் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. எக்காரணம் கொண்டும் தன்னை அவள் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்பதும் அவனுக்குத் தெரியும். இருந்தும், எங்கே அவள் ஏதாவது உளறி வைத்து விடுவாளோ என்று அவன் பயந்தான். எதற்கும் தயாராகக் கத்திப்பிடியிலே கையை வைத்துக் கொண்டே நின்றான்.

கண்ணாத்தாள் முழுக்கக் கண் விழித்தாள். ஆவலோடு "கண்ணாத்தா" என்றான், வீரத்தேவன்.

"அண்ணா" என்று கண்ணாத்தாளின் வாய் அழைத்தது. ஆனால், கண்கள் சிங்கத்தேவனைத் தேடிக் கொண்டு இருந்தன. அவள் கண்களில் படாமல் சிங்கத்தேவன் மறைந்துகொண்டான்.

வீரத்தேவனின் குடும்பப் பிரச்சினையில் தலையிட விரும்பாதவர் போல், ஊமைத்துரை ஒரு மூலையில் போய் உட்கார்ந்து, சென்னகேசவ நாயக்கன் என்ன ஆகியிருப்பான் என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

வீரத்தேவன் கண்ணாத்தாளிடம், "யாரடா உன்னைத் தூக்கி வந்தது? எப்படி இங்கே வந்தாய்?" என்று பரபரப்போடு கேட்டான். தம்பியோடு பிறக்காத வீரத்தேவன், தங்கையை 'அடா' என்று அழைத்து, மகிழ்ச்சி கொள்வது வழக்கம்.

ஓரளவு தெளிந்திருந்த கண்ணாத்தாள் சமாளித்துக் கொண்டாள், கண்விழித்த உடனேயே, "எங்கே அவர்?" என்று கேட்டுவிட இருந்தாள்; நல்ல வேளையாக அப்போது நா எழவில்லை. இப்போது முழுக்கச் சமாளித்துக்கொண்டு விட்ட அவள், அண்ணனின் கேள்விக்கு அமைதியாகவே பதில் சொன்னாள். அவள் சொல்வதை மறைவில் நின்றபடி கூர்ந்து கேட்டுக்கொண்டு இருந்தான், சிங்கத்தேவன்.

"இந்த வீட்டுக்காரன் என்னைத் தூக்கி வந்துவிட்டான், யாருக்கும் தெரியாமல் இவ்வளவு நாள் என்னை மறைத்து வைத்திருந்தான். இப்போது நீங்கள் எல்லாம் வருகிறீர்கள் என்று கேள்விப் பட்டதும், கதவைப் பூட்டிக் கொண்டு ஓடிவிட்டான்" என்றாள், கண்ணாத்தாள்.

வீரத்தேவன் ஆத்திரம் அடைந்தான். சிங்கத்தேவன் பயந்தெளிந்தான். ஊமைத்துரை அதிர்ச்சி அடைந்தார்.

"இந்த வீட்டுக்காரரா? சென்னகேசவ நாயக்கரா?... அம்மா! நன்றாக நிதானித்துக்கொண்டு சொல். நிச்சயமாக உன்னைத் தூக்கி வந்தவர் இவர்தானா?" என்று கேட்டார், ஊமைத்துரை.

சென்னகேசவ நாயக்கரை மிக உயர்ந்த மனிதர் என்றுதான் அவர் கருதியிருந்தார். கண்ணாத்தாள் சொல்வதை நம்ப முடியாமல்தான், அவர் அந்தக் கேள்வியைத் தொடுத்தார்.



ஆனால், கண்ணாத்தாள் அதை வேறு விதமாக எடுத்துக்கொண்டு பயந்தாள். ஒரு வேளை, தன்னைத் தூக்கிச் சென்றது சிங்கத்தேவன் என்பது, ஊமைத்துரைக்குத் தெரிந்து இருக்கும் போலும்; அதனால்தான் இந்தக் கேள்வி கேட்கிறார் என்று எண்ணிவிட்டாள்.

இருந்தாலும், நின்ற இடத்திலேயே நின்றால் பொய்யும் உண்மையாகிவிடும் என்ற துணிவில், "இவரே தான் என்னைத் தூக்கி வந்தார்; இவ்வளவு காலமும் பருத்திக் காட்டுக் குடிசையில் மறைத்து வைத்திருந்தார். தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி என்னை வற்புறுத்தினார். இவ்வளவு காலமும், நான் மறுத்துக்கொண்டு சமாளித்து வந்தேன். நேற்று இரவு, என்னை மூடப்பட்ட வண்டியில் இங்கே அழைத்து வந்தார். பலவந்தமாகவாவது கெடுத்துவிடுவது என்று முடிவுக்கு வந்தார். நான் எதிர்த்துப் போராடினேன்; குத்துவிளக்கால் சாடினேன். நீங்கள் வருகிற ஆரவாரம் கேட்டது. அதனால்தான், அவர் வெளியிலே பூட்டிக்கொண்டு சென்றுவிட்டார்" என்றாள் கண்ணாத்தாள்.

வீரத்தேவன் தங்கையின் தலையைக் கோதிக் கொடுத்தான். மானத்துக்காகப் போராடியிருக்கிறாள், தன் தங்கை; கற்புக் கெடாமல் வாழ்ந்திருக்கிறாள்; அவள் கன்னிதான் என்று எண்ணிப் பெருமை கொண்டான்.

மறைவில் நின்ற சிங்கத்தேவன் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டான்.

ஊமைத்துரை, முன்னும் பின்னுமாக நடக்க ஆரம்பித்தார். கண்ணாத்தாளின் வார்த்தைகளிலே அவருக்கு நம்பிக்கை பிறந்தது. "சென்னகேசவன் அயோக்கியனா? காமுகனா? கம்பளத்தாரும் மறவர்களும் பெண்களைத் தெய்வங்களாகக் கருதுப

வர்கள் ஆயிற்றே! அவனைச் சும்மா விடக்கூடாது. இனி, அவன் சொத்துகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அவனைக் கண்டதுண்டமாக்கிப் போட வேண்டும்'' என்றெல்லாம் எண்ணியபடி உலாத்தினார் அவர்.

வீரத்தேவன் கொஞ்ச நேரம் அவர் முகத்தைப் பார்த்தான் சென்ன கேசவ நாயக்கன், பொம்மு நாயக்கருக்கு எவ்வளவு உதவியிருக்கிறான் என்பது அவனுக்கும் தெரியும். அதனால்தான் கடுமொழியாலே அவன் பெயரைக் குளிப்பாட்டாமல், ஊமைத்துரையின் முகத்தைப் பார்த்தான்.

ஊமைத்துரை தெளிவோடும் அழுத்தமாகவும், ''சென்னகேசவனை எப்போது கண்டாலும் கொன்று முடிப்பேன்'' என்றார்.

கண்ணாத்தாள் சொன்னதிலே பின்பாதி உண்மை தானே! முன்பாதி பொய்யானாலும் அது வள்ளுவன் சொற்படி வாய்மைதானே! பொய், அவள் கணவனைக் காப்பாற்றியது; உண்மை, ஒரு காமுகனைக் கொல்லப் போகிறது! கண்ணாத்தாள் அமைதியுற்றவள் போல் காணப்பட்டாள்.

வீரத்தேவன் கண்களிலே கண்ணீர் பெருக்கு எடுத்தது. இத்தனை மாத காலமும் போராடிக் கொண்டுதானே இருந்திருப்பாள், தங்கை. கடைசிவரை கற்பழியாமல் இருந்திருக்கிறாள் என்றால், அதற்காக எவ்வளவு பாடு பட்டு இருப்பாள், காமுகன் ஒவ்வோர் இரவிலும் நெருங்கியிருப்பான். அழுதோ அலறியோ ஆத்திரங்கொண்டோ, அவனைத் துரத்தியிருப்பாள். எத்தனை நாள் சாப்பிடாமல் கிடந்தாளோ! வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான், வீரத்தேவன்.

'இப்போது பொய் சொல்லியாகிவிட்டது. இனி எப்படி நடந்துகொள்வது? எந்த வகையில் தன் இரகசியத்தை மறைப்பது?' என்னும் எண்ணங்களில் ஆழ்ந்தாள் கண்ணாத்தாள்.



அளவுக்கு மீறிய தந்திரம் தெரிந்தால் ஒழிய, கணவனுக்கு முன்னால் அறிமுகம் இல்லாதவள் போல் நடந்துகொள்ள அவளால் முடியாது. இது ஒரு பெரிய பிரச்சினை.

ஒரு புறம் அண்ணன்; மறுபுறம் கணவன். இருவரும் பக்கம் பக்கமாக இருப்பார்கள், அந்த இருவரின் அருகிலேயே அவளும் இருக்க வேண்டும். கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டாலும் குமுறும் எரிமலை வெடித்துவிடும்! அண்ணனைக் கண்ட ஆனந்தத்தை விட அடுத்து நடந்து கொள்ள வேண்டிய முறையே அவளைப் பெரிதும் இழுத்தது.

சிங்கத்தேவன் மனத்தை இப்போது சிறிய சந்தேகம் ஒன்று கவ்விற்று. 'சென்னகேசவன் வீட்டிற்கு கண்ணாத்தாள் வரவேண்டிய அவசியம் என்ன? ஊமைத்துரை குழுவினருக்கு இடையில் நான் இருக்கும்போது தன்னைத் தேடி வருவது ஆபத்து என்று கண்ணாத்தாளுக்குத் தெரியாதா? வீரத்தேவனும் அருகிலேயே இருப்பான் என்பதை மறந்திருக்க முடியுமா? தன்னைக் காட்டிக் கொடுக்கும் எண்ணம் அவளுக்கு இல்லை என்பது இப்போது வெளியாகிவிட்டது. இருந்தாலும் எப்படி அவள் நேர்வழியை விட்டு இந்தக் கிராமத்துக்குள் நுழைந்தாள்? உண்மையிலேயே சென்னகேசவனிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டு இருப்பாளா?'

இப்படியெல்லாம் பொருளற்ற முறையில் அவன் சிந்தனை சந்தேகத்தோடு புறப்பட்டது. விவகாரத்தை தனியாகக் கண்ணாத்தாளிடம் கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான். பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றதும் எப்படியாவது கண்ணாத்தாளைத் தனியாகச் சந்தித்து விடுவது என்று முடிவு கட்டினான்.

வீரத்தேவன் கட்டிலைச் சுவரோரமாகத் தள்ளிக் கண்ணாத்தாளை அதிலே நிமிர்த்தி உட்கார வைத்தான். ஊமைத்துரை வெளிப்புறத்துத் திண்ணையிலே வந்து அமர்ந்துகொண்டார். கண்ணாத்தாள் இன்னும் தெளிவுற்றதும் எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய் விடலாம் என அவர் எண்ணிக்கொண்டு இருந்தார். சென்னகேசவனைத் தேடிக்கொண்டு இருப்பதற்கு இது நேரமில்லை அல்லவா!

''ஏதாவது சாப்பிடுகிறாயா?'' என்று கண்ணாத்தாளைக் கேட்டான் வீரத்தேவன்.

''இல்லை; பசி இல்லை. கிறக்கமாக இருக்கிறது; மயக்கம் வரும் போலத் தோன்றுகிறது. அம்மா... அப்பா...'' என்று முனக ஆரம்பித்தாள் கண்ணாத்தாள்.

திடீரென்று என்ன வந்தது? வீரத்தேவன் பயந்து போனான். ஊமைத்துரை உள்ளே ஓடி வந்தார். கண்ணாத்தாள் ''குபுக்''கென்று வாந்தி எடுத்துவிட்டாள்!

''வைத்தியரை அழைத்து வாருங்கள், வைத்தியரை அழைத்து வாருங்கள்'' என்று சத்தம் கொடுத்தார் ஊமைத்துரை.

பாஞ்சாலங்குறிச்சி வீரன் ஒருவன், பக்கத்தில் இருந்த வைத்தியரைத் தூக்கக் கலக்கத்தோடு அழைத்து வந்தான்.

வைத்தியர் கண்ணாத்தாளின் கையைப் பிடித்துப் பார்த்தார்.

இப்போது கட்டிலில் சாய்ந்து கண்களை மூடியவாறு கிடந்தாள் கண்ணாத்தாள்.

''என்னையா என்ன?'' என்று பதறினான், வீரத்தேவன்.

''இதில் பயப்படறதுக்கு என்ன இருக்கு? இயற்கையா வர்ற வாந்திதான்'' என்றார், வைத்தியர்.



''அப்படியென்றால் ...?''

''பொண்ணு மூணுமாசக் கர்ப்பம்'' என்று முத்திரை வைத்த வைத்தியர், மருந்துப் பெட்டியை மூடலானார்.

வீரத்தேவன் தன்னை மறந்து ''அம்மா'' என்று அலறியபடி எழுந்து நின்றான்.

ஊமைத்துரை ஒருபுறம் ஒதுங்கி நின்றுகொண்டார்.

சிங்கத்தேவன் மீண்டும் சிக்கலில் ஆழ்ந்தான்.

கண்ணாத்தாள் கண்விழித்தால் ஒழிய அவனுக்குக் கர்ப்பம் வந்த கதையை யாரும் அறிந்துகொள்ளமுடியாது. அதைச் சொல்லக்கூடியவனும் சிங்கத்தேவன்தான். ஆனால், இந்த நேரத்தில் அவள் முகத்தைக்கூடப் பார்க்கக் கூடாத நிலையில் உள்ளவனும் அவன்தான்.

வீரத்தேவன் அவமானச் சுழலில் அவதிப்பட்டான். ஊமைத்துரையோ இதுவும் சென்னகேசவ நாயக்கனால் விளைந்ததாக இருக்குமோ என்று எண்ணத் தலைப்பட்டார்.

வீரத்தேவனுக்குக் கண்ணாத்தாள் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. மெதுவாக வெளியிலே வந்தான்.

வழி நடைக் களைப்பில் அயர்ந்து போய் அங்கு வெளித் திண்ணையிலே படுத்துத் தூங்கிக்கொண்டு இருந்தாள் அஞ்சுகம். அவர்கள் வந்தது, கதவைத் தட்டியது, கதவு திறக்கப்பட்டது வரைதான் அவளுக்குத் தெரியும். பிறவற்றை அறிய முடியாத அளவுக்கு அவளைச் சோர்வு தள்ளிற்று. அப்பொழுதே படுத்துத் தூங்கிவிட்டாள்.

பூரி ராமசாமித் தேவர் ஒரு விளக்குக் கம்பத்தில் சாய்ந்து தூங்கிக்கொண்டு இருந்தார். பெரும்பாலான வீரர்களும் அதே கதியில் இருந்தனர்.

வீரத்தேவன் அவர்களைக் கடந்து சுமார் நூறடி தூரம்வரை சென்று ஒரு குடிசையின் முன் திண்ணையில் அமர்ந்துகொண்டான். அவனது வீரம் எங்காவது தோல்வியுற்றிருந்தால்கூட, அவன் இவ்வளவு வேதனை அனுபவித்திருக்க மாட்டான்!

கண்ணாத்தாள் எதையோ மறைக்கிறாள்! ஏன் மறைக்க வேண்டும்? அவள் தூக்கிச் செல்லப்பட்ட இடத்தில் கெடுக்கப்பட்டு இருந்தால், அதையே தன்னிடம் சொல்லலாமே! அவளது விருப்பமின்றி நடந்த காரியங்களுக்கு, அவளைக் குற்றவாளியாக்க மாட்டோமே! பின், ஏன் அவள் பொய் சொல்ல வேண்டும்?

ஒருவேளை, அவளே மனம் விரும்பி ஓடியிருப்பாளோ! அப்படி ஓடினால், சென்ன கேசவ நாயக்கன் வீட்டுக்கு வரவேண்டிய அவசியம் என்ன? எந்தக் கேள்விக்கும் பதில் புரியாமல், தலையில் கையை வைத்துக்கொண்டான் வீரத்தேவன்.

இருட்டில், அவன் கண்களுக்கு யாரும் பார்ப்பதற்கு இல்லை. அதுதான், அவனுக்கு ஓரளவு அமைதியாய் இருந்தது. அவமானம் அவனை அவ்வளவாகச் சிதைத்திருந்தது. பூமியையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தான்.

மெதுவாக, அவன் அருகில் வந்தார், ஊமைத்துரை. ''வீரத்தேவா!' என்று அழைத்தார். வீரத்தேவன், நடுக்கத்தோடு எழுந்து நின்றான்.

''மனத்தைத் தேற்றிக்கொள்! இத்தகைய நேரங்களில் தான், தைரியமாக இருக்கவேண்டும். பகைவர்களை முழுமூச்சாக எதிர்க்க வேண்டிய நேரத்தில் பலவீனத்துக்கு ஆளாகக் கூடாது! இவ்வளவு காலமும், உன் கண்களுக்குத் தட்டுப்படாமல் இருந்த உன் தங்கை, இன்னும் சிறிது காலத்திற்கு அப்படியே இருந்திருக்கக்கூடாதா!



உற்சாகமான நேரத்தில் கடுமையான சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பது உண்மை! அந்தச் சோதனைகளை, எப்படிச் சமாளிப்பது என்பதில்தான், வீரனுக்கும் சாதாரண மனிதனுக்கும் பேதம் இருக்கிறது. மான உணர்ச்சி உன்னை அலைக்கழிக்கிறது! தெரிகிறது எனக்கு! கண்ணாத்தாள் கண் விழித்துவிட்டாள். இப்பொழுது கண்டித்துக் கேட்டால், முழு விவரத்தையும் சொல்லி விடுவாள். அது திருப்தியாக இருந்துவிட்டால் கவலையில்லை. உன்னை மேலும் தொல்லைக்கு உள்ளாக்குவதாக அமைந்துவிடுமானால், நாம் போய்க் கொண்டு இருக்கிற காரியம் கெட்டுவிடும்! ஆகவே, என் அருகிலேயே வா! கண்ணாத்தாளுக்குத் துணையாக அஞ்சுகத்தையும் சுப்பம்மாவையும் விட்டுவிடுகிறேன்! கோட்டை கட்டி முடிக்கப்பட்டு போரில் வெற்றி பெறுகிறவரை, இது பற்றி நீ அதிகம் சிந்திக்க வேண்டாம்'' என்றார், ஊமைத்துரை.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு இருந்த வீரத்தேவன், தலை குனிந்தபடி அவர் பின்னாலேயே நடந்தான்.

தூங்கிக்கொண்டு இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து தயாரானார்கள்.

சுப்பம்மாளும் அஞ்சுகமும், கண்ணாத்தாளை அணைத்தபடி. வீட்டுக்குள் இருந்து வெளியே வந்து கொண்டு இருந்தார்கள்,

எதிரே நின்ற சிங்கத்தேவன், கண்ணாத்தாளை ஒரு மாதிரியாகப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

அசப்பிலேகூட அவளைப் பார்க்காமல், நேரே நடக்க ஆரம்பித்தான், வீரத்தேவன்.

அஞ்சுகம் ஏதும் புரியாதவளாய், தானும் அவனிடம் பேசாது இருந்து விட்டாள்,

எல்லா வீரர்களும், நேரே பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி விரைந்தார்கள்

வீரத்தேவனையும் சிங்கத்தேவனையும் தவிர, அனைவரும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள். பானகம் என்னும் கருப்பட்டித் தண்ணீரைச் சூடாகத் தயார் செய்து வைத்திருந்தார்கள், பாஞ்சாலங்குறிச்சி மக்கள். ஒவ்வொரு வீரனும் அதைக் குடித்துவிட்டுப் புதிய உணர்வு பெற்றார்கள்.

வெள்ளையர்களால் இடித்துத் தூளாக்கப்பட்டு இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்ட பாஞ்சைக் கோட்டையை மீண்டும் கட்டும் வேலை தொடங்கிற்று.

பனஞ்சாறு விட்டுப் பிசையப்பட்ட களிமண்ணால் கோட்டையை எழுப்பலானார்கள்!

ஏராளமான தீப்பந்தங்கள், முன்னும் பின்னும் உலவின.

பொழுது விடிகிற நேரம்! கோட்டையின் அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது.

பொழுது விடிந்துவிட்டால், வேலைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு எல்லோரும் போய்விட வேண்டும் என்ற ஏற்பாடு! கதிர் உதிக்கும் முன்னால் கோட்டை வேலை நின்றது. எல்லோரும் ஒவ்வொரு திசையில் சென்று மறைந்தார்கள்.

கண்ணாத்தாளும் அஞ்சுகமும், பாதுகாப்பான ஒரு வீட்டில் இடம் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்பதை மட்டும் அறிந்துகொண்ட சிங்கத்தேவன், காட்டுக்குள் மறைந்துகொண்டான்.

வீரத்தேவனும் ஊமைத்துரையும், பாஞ்சாலங்குறிச்சி நகரிலேயே ஒரு வீட்டில் இருந்து கொண்டார்கள்.



அஞ்சுகம், மெதுவாகக் கண்ணாத்தாளை விசாரித்தாள். அவன்தான் வீரத்தேவனின் தங்கை என்பதைக் கேட்டு அதிசயப்பட்டாள் கேள்வி மேல் கேள்வி போட்டாள். பதில் சொல்வது, கண்ணாத்தாளுக்குக் கடினமாக இருந்தது. உண்மையைச் சொல்ல முடியாது திரும்பத் திரும்பப் பொய் பேசுவதற்கும் சலித்து விட்டது. அதனால், அவள் அஞ்சுகத்தையும் சுப்பம்மாளையும் தொல்லைகளாகக் கருதி, ''கொஞ்சம் பேசாமல் இருங்கள்'' என்று கூறிவிட்டு, வேறு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அவள் கருவுற்று இருப்பதாக வைத்தியர் சொன்னதையோ, வீரத்தேவன் அதிர்ச்சி அடைந்ததையோ, அவள் அறிய மாட்டாள். ஆம்! அவள் மூர்ச்சையுற்று அல்லவா கிடந்தாள்! பெருங்குழப்பமும் வேதனையும், அவளைச் சுற்றிக்கொண்டன.

அஞ்சுகமும் சுப்பம்மாவும் அரட்டை பேச ஆரம்பித்தனர். எந்தக் கவலையும் இல்லாமல் சிரித்துக் கொண்டிருந்த அவர்களைப் பார்த்து, கண்ணாத்தாள் பொறாமைப் பட்டாள். 'வாழ்ந்தால் இப்படி அல்லவா வாழ வேண்டும்! நாம் வாழ்வதும் ஒரு வாழ்வா?' என்று, தன்னைத் தானே நொந்துகொண்டாள். அன்றையப் பகல் பொழுது முழுவதும் இதே வேதனையோடு கழிந்தது.

## 11. சின்ன மருது கிளம்பினார்

சிவகெங்கை அரண்மனை கலவரப்பட்டது.

சின்னப்பாண்டியர் பிடிபட்ட செய்தியை, கறுத்தான் பலவாறாகத் திரித்தான். பாளையங்கோட்டைச் சிறையை உடைக்கும்போதே, சின்னப் பாண்டியரை கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டதாகக் கூறினான். சிவகங்கையின்

அழிவு காலம் தொடங்கிவிட்டதெனப் படை வீரர்களிடம் பகிரங்கமாகப் பேசினான்.

கறுத்தான், சிவகெங்கையின் வாழ்விலே அக்கறை கொண்டவன் என்பதைவிட, கம்பெனியாரைப் பகைத்துக் கொள்ள விரும்பாதவன் என்பதே பொருந்தும். வேறு எந்தப் படையோடுமோதுவது என்றாலும், அவன் உற்சாகமாக ஈடுபடுவான். கம்பெனிப் படைகளிடம், அவனுக்குப் பயமில்லை; ஆனால், பக்தி அதிகம். பல வேட்டைகளில், ஆங்கிலத் துரைமார்களின் பாராட்டுதல்களைப் பெற்றவன். ஒரு முறை, மேஜர் ஷெப்பர்டின் மேலே பாய்ந்த ஒரு சிறுத்தைப் புலியை, வாலைப் பிடித்துத் தூக்கி, வானவெளியிலே சுற்றியவன் அவன். துப்பாக்கிச் சண்டையில், வெள்ளைப் படைகளைவிட, அதிகம் பக்குவம் பெற்றவன் அவன். காளையார் கோவில் காடுகளில் வேட்டையாடச்செல்லும் வெள்ளைத்துரைமார்கள், சிவகெங்கைக்கு வந்து, கறுத்தானையோ சின்ன மருதுவையோதான் அழைத்துச் செல்வது வழக்கம். அரண்மனையில் அவனுக்கு இருந்த செல்வாக்குக்கு இது ஒரு காரணம்.

கம்பெனிக்கு விரோதமாக ஏதாவது சிவகெங்கையில் நடந்தால், கறுத்தான் கோள் மூட்டிவிடுவான் என்பது பெரிய பாண்டியருக்கும் தெரியும். போரைப் பற்றிப் பயம் அவருக்கு இல்லை. இருப்பினும், நியாயமான காரணங்கள் அன்றிச் சண்டையை வருவித்துக் கொண்டு பல பேரைச் சாகடிப்பதைப் பெரிய பாண்டியர் அரசியலாகக் கொள்ளவில்லை. அதனால் கூடுமான வரை எச்சரிக்கையாகவே இருந்து வந்தார்.

சின்னப் பாண்டியர் கொஞ்சம் துடிதுடிப்பானவர்.

திடீரென்று எதையும் துணிந்து செய்துவிடுவார். கறுத்தானுக்கும் இது தெரியும். வீரத்தேவனும் பூரி ராமசாமித் தேவரும் பெரிய மன்னரிடம் உதவி கேட்க வந்ததில் இருந்து, கறுத்தான் சின்னப் பாண்டியரையே அதிகமாகக் கவனித்தான். சாதாரணமாகப் பேசும்போது கூட, ஊமைத் துரைக்கு உதவி செய்து, வெள்ளைப்படைகளைக் கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று பேசினார், சின்னப் பாண்டியர். அதனால், அவர் தூங்கும் போது கூட, அந்தப்புரத்திற்கு வெளியே உலாத்திக்கொண்டு இருந்தான் கறுத்தான். மாறுவேடமிட்டு, லாயத்தில் இருந்த குதிரையைத் தானே போய் அவிழ்த்துக்கொண்டு, பாளையங்கோட்டைக்குப் புறப்பட்ட சின்னப்பாண்டியரை அவனும் மாறுவேடத்தில் பின் தொடர்ந்தான்.



எல்லை விடுதிக்குச் சென்று, பூரி ராமசாமித் தேவரையும் அஞ்சுகத்தையும் அழைத்துக்கொண்டுதான், சின்னப் பாண்டியர் புறப்பட்டார். கறுத்தான் ஓர் ஒற்றன் போலவே பாளையங்கோட்டை வரை அவர்களைத் தொடர்ந்தான். சிறை உடைப்பு நடந்துகொண்டு இருக்கும் போது, சின்னவர் அங்கே வந்திருக்கும் செய்தியை வெள்ளையரிடம் சொல்லிவிடலாமா என்றுகூடக் கறுத்தான் நினைத்தான். உள்ளூர எழுந்த பயத்தினால் அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான். சிறை உடைப்பிற்குப் பிறகு யார் எந்த மூலையில் பிரிந்தார்கள் என்றே கறுத்தானால் கண்டுபிடிக்க முடியவில்லை. நிகழ்ந்த செய்தியைப் பெரிய பாண்டியரிடம் சொல்வதற்காகத் திரும்பி வரும் வழியில்தான் கயத்தாற்றுச் சாலையில் சின்னப் பாண்டியரைக் கைதியாகக் கண்டான்.

கறுத்தான் ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்ல பெரிய பாண்டியரின் முகம் வியர்த்தது; இதயம்கொதித்தது. அடுத்தென்ன நேருமோ என்ற அச்சமும் பிறந்தது. ஒவ்வொரு தடவையும், சின்னமருதுவாலேதான், சிவகெங்கைக்குத் தொல்லைகள் விளைகின்றன என்றே எண்ணத் தலைப்பட்டார். "இதை வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்" என்று கறுத்தானைக் கேட்டுக் கொண்டார். வருகிற வழியில் அவன் சுமார் ஆயிரம்

பேரிடம் அதைக் கூறியிருப்பான். பெரிய பாண்டியரின் வேண்டுகோள், அவனுக்குச் சிரிப்பை மூட்டியது. ''நான் ஏன் சொல்லப் போகிறேன்!'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு நகர்ந்தான்.

அங்கே சயத்தாற்றில், கூடாரத்தில் இருந்த சில துரைகள் சின்னப் பாண்டியரை அடையாளம் கண்டு கொண்டார்கள் அவர்களுக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது கொல்லப்பட்ட காலின்ஸ்துரைக்கு மிகவும் வேண்டியவர், சின்னமருது. அவர் லண்டனில் இருந்த தம் மனைவிக்குக் கடிதம் எழுதும் போதுகூட, சின்னமருதுவைப் போன்ற ஒருவன் ஆங்கிலேயனாகப் பிறந்திருந்தால், அகில உலகத்தையும் கட்டி ஆள்வது ஆங்கிலேயருக்கு எளிதாக இருந்திருக்கும் என்று எழுதியவர். தனியாகச் சாப்பிட உட்காரும் போதுகூட ஒரு கறித்துண்டைத் தனியாக எடுத்து வைத்து, 'சின்னமருதுவுக்கு' என்று சொல்லி விட்டுத்தான் சாப்பிடுவார். அவ்வளவு பிரியம் வைத்திருந்த அவரை, சின்னமருது ஏன் கொல்ல வேண்டும்? குதிரையைத் திருடுவதற்காகவா?

சின்னப்பாண்டியரா! அவர் கேட்டால், காலின்ஸ் துரை தம் தலையையே கழற்றிக் கொடுத்திருப்பாரே! எதுவும் புரியாத துரைமார்கள், ''நடந்தது என்ன?'' என்று சின்ன பாண்டியரையே கேட்டார்கள்.

பாளையங்கோட்டைச் சிறை உடைப்பில் கலந்து கொண்டதைத் தவிர, அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவர் கூறினார். தாம், திருநெல்வேலியில் வாணிகம் புரியும் தம் தாய் மாமனைப் பார்க்கச் சென்றதாகச் சொன்னார்.

துரைமார்கள் அதை நம்பினார்கள், நம்பக் கூடிய பதவியில் அவர் இருந்ததால் வீரர்கள் அவரை அடித்து விட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.



சின்னவருக்குத் தைரியம் பிறந்தது. ஓரக்கண்ணால் துரைமார்களைப் பார்த்தபடி, ''கம்பெனியின் நண்பன் தான் நான்'' என்று கூறிவிட்டு, விடைபெற்றுக் கொண்டார்.

சிவகெங்கைக்கு அவர் வந்தபோது, அடிபட்ட புலி போல் முன்னும் பின்னும் நடந்துகொண்டு இருந்த அண்ணனையும், அமைதியே வடிவாகக் கைகளைக் கட்டியபடி மூலைத்தூணில் சாய்ந்துகொண்டிருந்த கறுத்தானையும் கண்டார்.

வேட்டைக்குச் சென்று திரும்பியவர் போலவே, ஆடைகளைக் கழற்ற ஆரம்பித்தார் அண்ணனிடம் கறுத்தான் என்ன சொல்லியிருந்தாலும் அதைத் தான் மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கை, அவருக்கு இருந்தது. கறுத்தான் அவரைப் பார்த்த பார்வையும் சிரித்த சிரிப்பும் அரண்மனையில் ஏதோ நடந்திருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்தன.

பெரிய பாண்டியர் எதுவும் பேசவே இல்லை, நடை மட்டும் துரிதமாகிக்கொண்டிருந்தது.

சின்னப் பாண்டியர் மெதுவாக, ''சாப்பிடவில்லையா அண்ணா?'' என்றார். ''எனக்குப் பசியில்லை'' என்று வேறு புறம் பார்த்தபடி கூறிய பெரிய பாண்டியர், மேலும் நடக்க ஆரம்பித்தார்.

''பசி எடுக்கக்கூடிய நேரமா, இது?'' என்றான் கறுத்தான்.

புரிந்துகொண்ட பாவனையில், உட்புறம் போக முயன்றார் சின்னப்பாண்டியர்.

''நில்!'' என்ற குரல், கடுமையாக ஒலித்தது. சின்னவர் திரும்பினார்.

பெரியவர் கண்கள் அனல் பிழம்பைச் சிந்திக் கொண்டு இருந்தன.

கறுத்தான் எப்போதும் போல் அமைதியாக இருந்தான்.

"பாளையங்கோட்டைக்கு ஏன் போனாய்?" பெரிய பாண்டியர் கேட்டார்,

சின்னவர், கறுத்தானைப் பார்த்துவிட்டுத் திரும்பி, "என்ன நடக்கிறது என்று பார்த்துவரப் போனேன்" என்றார்.

"அதில் உனக்கு என்ன அக்கறை ?"

"சும்மா, தெரிந்து கொள்ளத்தான்!"

"சிவகெங்கைக்குக் கொள்ளிவைப்பது என்றே முடிவு கட்டிவிட்டாயா ?"

"என்னையா அப்படி நினைக்கிறீர்கள் ?"

"ஒவ்வொரு போருக்கும் நீயே காரணமாகிறாய்! சிவகெங்கையில் போர் இல்லை என்றால், எந்தப் போரிலாவது கலந்துகொள்ளத் துடிக்கிறது உனக்கு! எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், போர் நினைவு வரும்போது 'வேட்டைக்குப் போ! வேட்டைக்குப் போ' என்று.

ஆறாண்டு காலமாக அமைதி தவழுகிறது. நாட்டில். கலவரப்பட்டு எங்கேயோ ஓடிப்போய் கிடந்த மக்கள் இப்போதுதான் கிராமங்களுக்குத் திரும்பி விவசாயத்தைக் கவனிக்கிறார்கள்; இன்னும் ஒரு பத்தாண்டு இந்த அமைதி இருந்தால் எவ்வளவோ ஆக்க வேலைகளைச் செய்யலாம் என்று கனவுகொண்டு இருக்கிறேன். ஒருமுறை திருமயத்தில் இருந்து புறப்பட்டு சிவகெங்கை வட்டகை முழுவதையும் சுற்றிப்பார். இந்த அமைதியையும் ஆனந்தத்தையும் நீ ஏன் கெடுக்கிறாய் ?

பாஞ்சாலங்குறிச்சியைத் தூக்கி நிறுத்தும் பணியை உன் தலைமேல் ஏன் போட்டுக் கொள்ளுகிறாய் ? நடக்கக் கூடிய காரியமா அது ? வினை வலியும் தன் வலியும் மாற்



றான் வலியும் துணைவலியும் நோக்கிச் செயல்படுவது தானே அரசியல்.

ஊமைத்துரையின் விடுதலையைத் தொடர்ந்து இழந்து போன வாழ்வு அனைத்தும் திரும்பிவிடுமா ? ஏதோ ஒரு மாதம் இரண்டு மாதம் உற்சாகம் ! மீண்டும், ஆயிரம் இரண்டாயிரம் பேர் மடிவார்கள். இதைத் தவிர உருதியான சாதனையாக எதைச் செய்ய முடியும் ?

அழிந்துபோன பாளையங்கள் இருபத்திரண்டு. அவற்றின் வீரர்களும் இப்போது கம்பெனிப் படையில் இருக்கிறார்கள் ! இன்னும் கொஞ்சம் தொல்லை கொடுத்துவிட்டு சாவோம் என்றுதான் பாஞ்சாலங்குறிச்சி இளைஞர்கள் மறு கட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள். பிழைத்து எழுந்து மறுபடியும் பாஞ்சாலங்குறிச்சியைத் தழைக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கே இருப்பதற்கு இல்லை.

உதவி கோரி இங்கு வந்தவர்களை ஏன் திருப்பி அனுப்பினேன் ? நான் என்ன கோழையா ? சிவகெங்கையிலேயே நீ ஒருவன்தான் வீரனா ? நீ ஆடுகிற சதுரங்கத்தை நான் ஆடமாட்டேனா ?

எதை எப்போது எப்படிச் செய்வது என்பதுதான் நல்ல நிர்வாகிக்கு இருக்கவேண்டிய புத்தி.

வலிமை குன்றித் தோற்றவர்கள் எல்லாம் காலந் தெரியாமல் தோற்றவர்கள்தான் !

பழுத்துவிட்டால் தானே விழுந்துவிடும் என்பது தெரியாமல் காயைக் கல்லால் அடிக்கிறாய் !

காத்திருக்கக்கூடிய பொறுமை இல்லாதவனுக்கு ஆபத்து தலையிலேயே நிற்கும்.

நடைபெறும் பத்துக் காரியங்களைச் சும்மா கவனித்திருந்துவிட்டு, பதினோராவது காரியத்தில் தானே ஈடுபடுகிறவன், என்றைக்கும் தோல்வி அடையமாட்டான்.

பேசாமலே இநப்பவனைப் பார்த்து ஊர் கோழை என்றே சொல்லட்டும், கவலையில்லை! 'பார்வைக்குக் கோழை. பாய்ச்சலிலே புலி' இதுதான் அரசுமுறை! அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.

படபடவென்று வீரத்தைக் காட்டிக்கொண்ட ராமப் பையன், பரிதாபமாக மாண்டான்! கண்டு தெளிந்து, நின்று நிதானித்து, வென்று புகழ் பெற்றவன் கிழவன் சேதுபதி

வரலாறு போதிக்கும் உண்மைகளைத் தெரிந்து கொள்ள மறுப்பவர்கள், அந்த வரலாற்றிலேயே விழ்ச்சிக்கு உதாரணமாகி விடுவார்கள்.

முத்து வடுகத் தேவரும் வேலுநாச்சியாரும் நம்மை நம்பித்தானே இப்பொறுப்பை ஒப்படைத்தார்கள்? அவர்கள் மனம் ஒப்பி, நம்மை ஆட்சியில் அமர்த்தினார்கள். நாச்சியார் கண் மூடும்போது, நாடு இனி மருதுபாண்டியரால் வாழும் என்ற நம்பிக்கையோடு கண் மூடினார்கள். அந்த நம்பிக்கையை, நீ குலைக்கிறாய்!

உன் ஒருவனால் நாடு பாழாவதை நான் விரும்ப மாட்டேன்! உனக்குத் தரப்பட்ட பொறுப்புகளை எல்லாம், அரண்மனை காரியஸ்தரிடம் ஒப்படைத்துவிட்டு இப்பொழுதே உன் மனைவி மக்களைக் கூட்டிக்கொண்டு, சிறுவயலுக்குப் போய்விடு! இனி ஒரு கணமும், நீ இங்கே தாமதிக்கக்கூடாது.''

பெரிய பாண்டியர் ஆவேசத்தோடு பேசி நிறுத்தினார்.

சின்னமருது குனிந்த தலை நிமிரவில்லை!

இவ்வளவு நேரமும், மறு கட்டில் இருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்த இளையராணி கண் கலங்கியபடி பெரிய ராணியின் அந்தப்புரத்துக்குச் சென்றாள்.



பின்னாலேயே வந்த சின்னமருது, ''பொன்னாத்தா! புறப்படத் தயாராயிரு'' என்றார்.

பெரிய பாண்டியரின் வார்த்தைகளைவிட இந்த வார்த்தைகளே இளையராணியை அதிகமாகக் கலங்க வைத்தன.

பெரிய ராணி அதிர்ச்சி அடைந்தாள். ''ஏன், எதற்காக?'' என்று, சின்னமருதுவைக் கேட்டாள்.

''இனி சிறுவயலிலேயே தங்க உத்தேசம்!'' என்றார் சின்னமருது.

''காரணம் இல்லையா? புரியும்படி சொல்!'' என்றாள், பெரிய ராணி.

''ஒன்றுமில்லை. கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்.''

''இன்னும் எனக்குப் புரியவில்லை. எந்தக் காரணம் பற்றி, நீ இந்த முடிவுக்கு வந்தாலும் சரி; இது தவறு என்பது மட்டும் எனக்கு உறுதியாகப்படுகிறது. ஏதோ நடந்திருக்கிறது என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. அது என்ன என்பதை, உன் அண்ணனிடமே கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். உங்கள் இருவருக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டு இருந்தால் ஒழிய, இந்த முடிவுக்கு நீ வந்திருக்க முடியாது. பொன்னாத்தாளின் கண் கலக்கமும், எனக்கு அதைத்தான் சொல்கிறது. பெரியவர்கள் அப்படித் தான் கோபித்துக்கொள்வார்கள். அதற்காகப் பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்கள், அந்தப் பொறுப்பைத் தட்டிக கழித்துவிட்டு ஓடக்கூடாது. சரி, அப்படியே நீ போவதாக முடிவு கட்டினாலும், இரண்டு நாள் கழித்துப் போ. அதற்குள் மனம் எவ்வளவோ மாறி விடும்'' என்றாள், பெரிய ராணி.

''இல்லை, என்னைத் தடை செய்யவேண்டாம். பொன்னாத்தாள்! புறப்படு. நான் காரியஸ்தரிடம்

பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, நடந்தார் சின்னமருது.

அவர் வெளியே செல்வதற்கும், பெரிய பாண்டியர் உள்ளே வருவதற்கும், சரியாக இருந்தது.

''தம்பியிடம் என்ன கோபம்?'' என்று கேட்டாள் பெரியராணி.

மூத்த கொழுந்தனுக்கு முன்னால் நிற்கக்கூடாது என்னும் மறவர் நாட்டு வழக்கப்படி, தன் அந்தப்புரத்துக்குச் சென்று விட்டாள், இளைய ராணி.

''கோபம் என்ன கோபம்? இங்கே பொறுப்பில் இருந்துகொண்டு, பாளையங்கோட்டைக்குச் சென்று வந்திருக்கிறானாம்! தேவையில்லாமலே வம்புகளை வருவித்துக்கொள்வதை எப்படி அனுமதிப்பது? அவன் சிறுவயலுக்கே போய்விடட்டும்'' என்றார் பெரிய பாண்டியர்.

''ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இந்தத் தடவை அவனை மன்னியுங்கள்! பொன்னாத்தாள் மிகவும் கலங்கிப் போயிருக்கிறாள். எனக்கும் அவன் போய்விட்டால் என்னவோ போலிருக்கும்'' என்று உருக்கமாக வேண்டினாள், பெரிய ராணி.

''பார்ப்போம்'' என்று பெருமூச்சு விட்டபடியே கட்டிலிலே சாய்ந்தார், பெரிய பாண்டியர்.

கோபித்துக்கொண்டு சிறிது நேரந்தான் ஆகியிருந்தது. அதற்குள், அவர் மனம் இளக ஆரம்பித்து விட்டது

பாசமும் பழக்கமும் மிகவும் வலுவுடைய சக்திகள். மனித இயல்புகளை அவை ஆட்டிவைத்து, கூத்துப் பார்த்து விடுகின்றன.

திடீர் திடீரென்று உணர்ச்சியும் போக்கும் மாறுகின்றன. ஒரு கணம் அழுகை— மறு கணம் சிரிப்பு—



நிலையான இயல்புகளுக்கு இது பகை. ஆனால், பாசத்துக்கும் பழக்கத்துக்கும் இந்த நிலைதான் உறவு.

கோபத்தால் எழுந்த கரம், பிள்ளையை அடித்து விடுகிறது; அதே கரம், கணமும் தாமதியாமல் தூக்கி அணைத்துக்கொள்கிறது.

உறவுகளால்தான் உலகத்தில் உயிரோட்டம் இருக்கிறது!

ஒவ்வொரு சமயங்களில் எழுகின்ற உணர்ச்சியே நிரந்தரமாக அமைந்துவிடுமானால், மனிதனின் ஒரு கரத்துக்கும் மறு கரத்துக்கும் இடையிலேகூட, பிளவு அதிகரித்துவிடும்!

பெரிய பாண்டியர், பாசத்துக்கும் பழக்கத்துக்கும் கட்டுப்பட்டவர். மிகச் சிறிய பூமியின் தலைவர் என்றாலும் உறுதியான அரசு கண்டவர். அரசுகள் முடிவுற்ற இடத்தில், எளிமையான அரசு அவர் தலைமையில் தொடங்கியது. அரசின் எளிமைபோல் மன எளிமையும் கொண்டு இருந்ததால், ஆசாபாசங்களுக்கு அதிகமாகக் கட்டுப் பட்டவர் ஆனார். அரச பரம்பரையைப் பற்றிய வரலாற்றில் இந்த நிலை இல்லை. தந்தையைக் கொன்று முடிசூட்டிக் கொண்டவர்கள், அண்ணனைக் கொன்று அரியாசனத்தைக் கைப்பற்றியவர்கள் வரலாற்றின் பெரும் பகுதியை நிரப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், பெரிய பாண்டியரைப் பொறுத்தவரை, பெரிய தவற்றைச் செய்துவிட்ட தம்பியைக் கடுமையாகக் கோபித்துக்கொண்ட பிறகும், மன்னிக்கின்ற குணநலம் இழையோடி வந்தது. 'பார்ப்போம்' என்று அவர் சொன்ன ஒரு வார்த்தை, அவர் எவ்வளவு தூரம் அமைதி அடைந்து விட்டார் என்பதைக் காட்டிற்று. பெரியராணி பதில் கூறவில்லை. பெரிய பாண்டியரே, சின்னமருதுவைப் போகாமல் தடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையோடு கால்களைப் பிடிக்க ஆரம்பித்தார்.

அரண்மனை முன் பகுதி மண்டபத்தில் இருந்த காரியஸ்தரிடம் வந்தார் சின்ன மருது. அங்கே கறுத்தான் ரகசியம் பேசிக் கொண்டு இருந்தான். அவனை உதைக்க லாமா என்றுகூட, அவருக்குத் தோன்றியது.

அவனும் நிலைமையைப் புரிந்து கொண்டவனாய் அவர் வந்ததும் எழுந்து சென்றுவிட்டான்.

சின்னமருது, காரியஸ்தரின் எதிரில் அமர்ந்து, கொடுக்க வேண்டிய சாவிக்கொத்துகளை எல்லாம் கொடுத்து, சொல்ல வேண்டியவற்றையும் சொல்லி முடித்தார்.

பின்னாலேயே, பெரிய பாண்டியர் அழைப்பதாகச் சேவகன் வந்தான். இது சின்னமருது எதிர்பார்த்ததுதான். அண்ணனின் குணந்தான் அவருக்கு நன்றாகத் தெரியுமே! எழுந்து உள்ளே சென்றார்.

பெரிய பாண்டியர் அவர் முகத்தைப் பாராமலே, "இன்னும் பத்து நாள் கழித்துப் போகலாம்" என்றார்.

"இல்லை; இன்றைக்கே புறப்படுகிறேன். ஒரு மாதம் சிறுவயலில் இருந்துவிட்டு வருகிறேன்" என்றார் சின்னப் பாண்டியர்.

அதற்கு மேல் பேசப் பெரிய பாண்டியர் விரும்ப வில்லை. அதே நேரத்தில், சின்னவர் சிறுவயலுக்குப் போவதையும், அவர் இப்போது விரும்பவில்லை. சாடையாகப் பெரிய ராணியைப் பார்த்தார். பெரிய ராணி கொஞ்சம் கடுமை தொனிக்க, "எதற்கெடுத் தாலும் மறுத்துப் பேசாதே! பேசாமல் இங்கேயே இரு!" என்று வலியுறுத்தினாள்.

சின்னப்பாண்டியர் சிறுவயலுக்கே போக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததற்கு வேறொரு நோக்கமும் காரணமாக இருந்தது. எப்படியாவது, பாஞ்சாலங் குறிச்சியில் ஊமையன் கோட்டைப் போராட்டத்தில்



கலந்துகொள்ள வேண்டும்; சிவகெங்கையில் இருந்தால், அது நடக்காது; கறுத்தான் நிழல் போலத் தொடருவான். சிறுவயலுக்குப் போய்விட்டால், அங்கு இருந்து பாஞ் சாலங்குறிச்சிக்குப் போவது எளிது. அதனாலேயே, அவர் பயணத்தை நிறுத்த முடியாது என்றார்.

இளமையின் துடிப்பு, அந்நியரை முறியடித்து விட முடியும் என்ற நம்பிக்கையோடு பிறந்திருந்தது. தெளிவான அரசியல் நியாயங்களைவிடத் திடீர்ப் போராட்டங்கள் சிலரை உற்சாகப்படுத்தும்; பக்குவம் இல்லாமல் காலம் தெரியாமல் இடம் தெரியாமல் குதிக்கும்படி வைக்கும். ஏறக்குறைய சின்னப் பாண்டி யரின் நிலை அதுதான். யாரானாலும், அவர்கள் கை களைப் பலப்படுத்த அவர் விரும்பினார். அதுவும் தம்மால் முடியும் என்று நம்பினார்.

ஆகவே, பெரிய ராணியின் வேண்டுகோளையும் புறக்கணித்து விட்டுப் பொன்னாத்தாளைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டார். குதிரை வண்டி புறப்படுவதை, சித்திர மேன்மாடத்தில் இருந்து கவனித்த பெரிய பாண்டியர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

## 12. காதல், மண்ணை மிதித்தது!
## காதல், கண்ணை மிதித்தது!

இரவு தொடங்கிற்று.

ஏராளமான இளைஞர்கள் எங்கெங்கோ மறைந் திருந்தவர்கள் எல்லாம், கோட்டை மைதானத்தில் வந்து குவிந்தார்கள்.

நிலவு பெருந்துணை புரிந்தது.

ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு பணி யில் ஈடுபட்டார்கள்

விநாடிக்கு விநாடி கோட்டை ஏறிற்று.

வீரத்தேவன், சிங்கத்தேவன், பொம்மையா முதலியோர் அங்குமிங்கும் ஓடி ஆணையிட்டுக்கொண்டு இருந்தார்கள். ஊமைத்துரை ஒவ்வொரு பகுதியாகக் கவனித்து வந்தார்.

உள்வாய்ச் சுரங்கம் மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக்கப் பெற்றது. அந்தச் சுரங்கத்தின் மற்றொரு வாசல், பாஞ்சாலங்குறிச்சி நகருக்குள் இருந்த வீட்டின் மைய மண்டபத்தில் இருந்தது. இடைப்பட்ட சுரங்கப் பாதையை வெட்டுவதற்குத்தான், ஏராளமான பேர் கஷ்டப்பட்டார்கள்.

அஞ்சுகமும் சுப்பம்மாவும் பாடிக்கொண்டும் கேலி பேசிக்கொண்டும், பணியிலே ஈடுபட்டு இருநதார்கள்.

தங்கியிருந்த இடத்தில் அமைதி இழந்த கண்ணாத்தாள், மெதுவாக எழுந்து கோட்டை மைதானத்துக்கு வந்தாள்.

எப்படியாவது சிங்கத்தேவனையும் வீரத்தேவனையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச வேண்டும் என்று விரும்பினாள்.

கோட்டை வாசலுக்குக் கதவுகள் செய்யும் இடத்து அருகே நின்று இருந்தான், சிங்கத்தேவன்.

அங்குமிங்கும் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்த கண்ணாத்தாளின் கண்களுக்கு, முதலில் அவன்தான் தெரிந்தான்.

மெதுவாக அவன் அருகில் சென்று அருகிலே நின்று கொண்டாள், அவள்.

பாட்டும் கூத்துமாக அமர்க்களத்தோடு பணி செய்து கொண்டு இருந்தவர்கள் யாரும், இவர்களைக் கவனிக்கும் நிலையில் இல்லை.

மெதுவாக ''அத்தான்!'' என்றாள், கண்ணாத்தாள்.



சிங்கத்தேவன் திரும்பிப் பார்த்தான். குழப்ப உணர்ச்சிகள் அவனை ஆட்கொண்டன. அவளைப் பார்க்க விரும்பாதவன் போல் திரும்பி வேலையில் ஈடுபட்டான்.

கண்ணாத்தாள் கலங்கினாள்.

''தவறு என்மீது இல்லை. பாளையங்கோட்டையில் இருந்தால், ஆபத்து வருமோ என்று பயந்துதான் உங்களைத் தேடிப் புறப்பட்டு வந்தேன். வழியில் கால் வலித்ததால், சென்னகேசவ நாயக்கன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தேன். அவன் நயவஞ்சகமாக அழைத்துச் சென்று, கெடுக்க முயன்றான்; போராடித் தப்பினேன். உண்மை இதுதான்; நம்புங்கள். அண்ணனைச் சந்திப்பேன் என்று, கனவுகூடக் காணவில்லை. இன்னும், அவருக்கு எதுவும் தெரியாது. நீங்களும் என்னை வெறுத்துவிட்டால், யாரிடம் நான் அடைக்கலம் புகமுடியும்?'' என்று விம்மலோடு நிறுத்தினாள், கண்ணாத்தாள்.

அவளுக்குப் பின்னாலேயே, இரண்டு அடி தூரத்தில் வீரத்தேவன் நின்றுகொண்டு இருந்ததை அவளும் அறிய மாட்டாள், சிங்கத்தேவனும் அறியமாட்டான்.

சிங்கத்தேவன் பதில் கூறவில்லை.

கண்ணாத்தாள் சொன்னவற்றை அவன் நம்பத் தயாராகத்தான் இருந்தான். ஆனால், அவள் வீரத்தேவன் கண்களுக்குத் தென்பட்டுவிட்டாளே, இனி, எப்படி அவனோடு சேர்ந்து வாழ முடியும். மீண்டும் கண்ணுக்குத் தெரியாமல் அவள் ஓடவேண்டும்; அவன் கொண்டுபோய் அவளை மறைத்து வைக்க வேண்டும்!

அப்படி நடந்தால் ஒருவேளை அவன் அவளோடு வாழ முடியும்.

ஊமையன் கோட்டைப் போராட்டம் எப்பொழுது முடியுமோ? எப்படி முடியுமோ? அது முடிந்த பிறகு

அல்லவா. மீண்டும் வீரத்தேவன் கண்களுக்கு மறைந்து வாழும் திட்டத்தை, அவன் போட முடியும்?

சிங்கத்தேவன் மனம் குழம்பியவாறு இருந்தது. அது மட்டும் அல்ல; வீரத்தேவனை வஞ்சம் தீர்ப்பதும், அவனது திட்டங்களில் ஒன்று அல்லவா! அதை எப்படிச் செய்வது என்றும் அவன் யோசிக்க ஆரம்பித்தான். இந்தச் சிக்கல் நினைவுகளால்தான், கண்ணாத்தாள் பேச்சுக்கு அவன் பதில் கூறவில்லை

மவுனம், அவனைக் காப்பாற்றியது. அவன் பேசாத தால், தானும் மேலே பேசாமல் இருந்தாள் கண்ணாத் தாள். பின்னால் நின்றுகொண்டு இருந்த வீரத்தேவன், எதையும் புரிந்துகொள்ள முடியாதவனாய் இருந்தான்.

சிங்கத்தேவன், கண்ணாத்தாளை விட்டுவிட்டு வேறு வழியில் நடந்தான்.

கண்ணாத்தாள், பெருமூச்சோடு திரும்பி இரண்டடி நடந்தாள். ஆம்! சிறிது தூரந்தான் நடந்திருப்பாள்! எதிரே நின்ற வீரத்தேவனைக் கண்டாள். திடுக்கிட்டாள். பின்பு, சமாளித்துக் கொண்டாள். பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தபடி, ''அண்ணா'' என்றாள்.

பதில் இல்லை.

அவள் கண்ணீரோடு தலை குனிந்தாள்.

மீண்டும் அவள் நிமிர்ந்து பார்த்தபோது, வீரத்தேவன் அங்கே இல்லை.

ஒரு பெருமூச்சு புறப்பட்டது, கண்ணாத்தாளிடம் இருந்து. கண்ணீர் ஆறெனப் பெருகியது.

தான், கணவரிடம் பேசியதை அண்ணன் கேட்டு இருப்பாரோ என்ற பயமும் தோன்றியது. உலகத்தில் எந்த ஒரு புழுவும், அந்தப் பாடு படாது, அவள் மனம் அவ்வளவு தொல்லைப்பட்டது.



நடந்தாள்.

ஏறக்குறைய பிணத்தின் நிலைதான். நடைப் பிணம் என்ற வார்த்தை, கண்ணாத்தாளுக்கு என்றே பிறந்தது.

ஓர்-அடி, இரண்டடி... கண்ணாத்தாள்... இல்லை அந்தப் பிணம் நடந்தது! தீவட்டிகள், முன்னும் பின்னும் போய்க்கொண்டு இருந்தன. ஒருபுறம், சிலர் மண் பிசைந்து கொண்டு இருந்தார்கள். இவை சுடுகாட்டிலுந் தானே நடக்கின்றன. தெம்போடும் திராணியோடும் ஏராளமான பேர் பாடிக்கொண்டே வேலை செய்து கொண்டு இருந்தனர். ஆனால், கண்ணாத்தாள்...?

இப்போது, ஓரளவு சிந்தித்தபடி அவன் நடக்க ஆரம் பித்தாள். தான் பிறந்ததே தவறு என்று எண்ணினாள். தன்னைத்தானே நொந்து கொண்டாள். அவள் பிறந்த தற்கு அவளா காரணம்?

இத்தனை குணங்கள்தான், இத்தனை வழிகள்தான், இத்தனை சிக்கல்கள்தான், இத்தனை துயரங்கள்தான் என்று கணக்கெழுதி வைத்துக்கொண்டு, யாரும் வாழ்க்கையை நடத்த முடியாது. இப்படி இப்படி நடந் தால், துயரங்களை ஒதுக்கிவிட முடியும் என்று திட்டம் போட்டுத் தொடங்குகிற வாழ்க்கைகூட பல சமயங்களில் தோல்வி அடைந்துவிடுகிறது

தோல்வியும், கவலையும், பயமும் முழுக்க முழுக்க வராமலே தடுக்கப்பட முடியாதவை. துணிவு இருந்தால் இவற்றைப் போக்கிவிட முடியும்.

வாழ்க்கையைக் கடல் என்பார்கள், நாடகம் என் பார்கள். அவர்கள் எல்லாம், தங்களுக்குத் தெரிந்ததை மட்டுமே சொன்னவர்கள். முழுவாழ்க்கையையும், தெளி வாக விமர்சனம் செய்தவர்கள் இல்லை.

உலகைப் படைத்தவன், எவனாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அப்படி ஒருவன் இருந்தால் அவனுக்கே வாழ்க்கை ஒரு பெரிய குழப்பம்.

உடம்பின் நரம்புகள், பல்வேறு உணர்ச்சிகளுக்கும் ஆட்படுகின்றன. நடைபெறும் நிகழ்ச்சியோ, காணப் பெறும் காட்சியோ, அந்த நரம்புகளில் ஏதாவது ஒன்றை அசைத்துக் கொண்டேயிருக்கிறது. பலவித உணர்ச்சிகளுக்கும் ஆட்படாதவன், மனிதன் அல்ல; மரம், பிணம்.

உணர்ச்சிகள் இல்லாதவனை, உலகம் போற்றுவது இல்லை. எழும் உணர்ச்சிகளை அடக்கத் தெரிந்தவனைத் தான் ஞானி என்றோ, அறிஞன் என்றோ உலகம் போற்றுகிறது.

கண்ணாத்தாள் ஞானியும் அல்ல, அறிவுக்கடலும் அல்ல. ஒவ்வோர் உணர்ச்சியும், அவளை ஒவ்வொருமுறை தின்று தீர்த்தது. எங்கே போவது என்ற முடிவு இல்லாமலே நடந்தாள்... நடந்தாள்...

அமைதி இழந்திருந்த வீரத்தேவன், வேலைகளிலே தன் கவனத்தைத் திருப்ப முயன்றான். அவன் சொல்லி நடக்க வேண்டியது, அங்கு ஏதாவது இருந்தால் தானே! ஒவ்வொருவரும், தங்கள் கடமையை உற்சாகத்தோடு செய்துகொண்டு இருந்தார்கள். உணர்ச்சி கொண்டு எழுந்து செய்யும் பணியாதலால் வேலை பார்ப்பவர்கள், அங்கே இல்லை. வீரத்தேவனுக்கு வேலை இல்லை!

கோட்டை, முக்கால் திட்டத்துக்கு மேல் எழுந்து விட்டது.

ஊமைத்துரை, மிகவும் புதிய மனிதராகவே காணப் பட்டார்.

ஒருபுறம், பொம்மையாவும் சுப்பம்மாவும் மண் மிதித்துக்கொண்டு இருந்தார்கள். அங்கு வேலை பார்த்தவர்களிலேயே, காதலும் புரிந்துகொண்டு வேலையும் பார்த்தவர்கள் அவர்கள்தான்.



வீரத்தேவன், ஒரு பனை மரத்தின் அடியில் வந்து அமர்ந்தான். தன் தங்கையைப் பற்றியே சிந்தனை செய்ய ஆரம்பித்தான்.

இரண்டு கரங்கள், அவன் கண்களை மூடின.

அந்தக் கரங்களைப் பிரித்துவிட்டு, விளையாடும் நிலையில் அவன் இல்லை. அமைதியாகவே இருந்தான்.

செல்லக் கோபத்தோடு கைகளை எடுத்துக் கொண்டு, "என்ன ஞாபகம்?" என்றாள், அஞ்சுகம்.

பதில் இல்லை; பக்கத்தில் உட்கார்ந்தாள். 27636

"என்னிடம் சொல்லக்கூடாதா?"

442707

அதற்கும் பதில் இல்லை.

"மனதைப் போட்டு, ஏன் அலட்டிக்கொள்கிறீர்கள்? போரிலே வெற்றி பெறும் வரைக்காவது, அமைதியாக இருங்களேன். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று, தெரியாமலா சொன்னார்கள்? நான் சின்னவள்தான். ஆனாலும், விடுதியிலே வாழ்ந்து இருப்பதால், உலகத்தை நன்றாகப் புரிந்து கொண்டு இருக்கிறேன். எத்தனையோ வழிப்போக்கர் குடும்பங்களைப் பார்த்து இருக்கிறேன். அவர்களில் யாரும் கவலையே வாழ்க்கையாகக் கொண்டவர்களாக இல்லை. இப்படி, என்னைப் பாருங்கள்; பார்க்க மாட்டீர்களா? நான் போகிறேன்" என்று எழுந்தாள் அஞ்சுகம்.

வீரத்தேவன், அவள் கையைப் பிடித்துக்கொண்டான். அவள் போக வேண்டாம் என்பதற்காகத்தான் கையைப் பிடித்தான். ஆனால், அதுவே போதுமானதாக இருந்தது அவளுக்கு. மீண்டும் அவன் அருகில் உட்கார்ந்தாள்; அவன் மார்பிலே சாய்ந்தாள்!

உணர்ச்சி இல்லாமலேயே, அவன் அவளை அணைத்துக் கொண்டான்.

திடீரென்று, கைதட்டும் ஒலி கேட்டது.

அஞ்சுகம், வெட்கத்தோடு எழுந்து நின்றாள்.

பொம்மையாவும் சுப்பம்மாவும் அவர்களைச் சுற்றிக் கொண்டு, பாடி ஆட ஆரம்பித்துவிட்டார்கள்.

அந்தப் பாட்டும் ஆட்டமுந்தான், வீரத்தேவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தன. சிரித்தான், பொம் மையாவின் கையைப் பிடித்துத் தலையில் ஓங்கிக் குட்டினான்.

அஞ்சுகமும் சுப்பம்மாவும், ஒருவரை யொருவர் துரத்திக்கொண்டு கோட்டைக்குள் ஓடி மறைந்தார்கள்.

பொழுது புலர்ந்தது.

கோட்டை முழுக்கக் கட்டி முடிந்திருந்தது.

கோட்டைக்குள்ளேயே, ஏராளமான குடிசைகளையும் போட்டு இருந்தார்கள். வீரர்கள் எல்லோரும் கோட்டைக்குள் குடியேறினார்கள்.

வீடுகளில் தங்கியிருந்த பெண்களையும், கோட் டைக்குள் வந்துவிடுமாறு அழைத்தார் ஊமைத்துரை...

எல்லோரும் வந்துவிட்டார்கள்.

பெண்கள் அனைவரையும் உற்று நோக்கி வந்தார் ஊமைத்துரை.

அவர்கள் இடையே, கண்ணாத்தாள் இல்லை.

அருகில் நின்ற வீரத்தேவனைப் பார்த்தார்.

வீரத்தேவன், சிங்கத்தேவனைப் பார்த்தான்.

சிங்கத்தேவனோ பெருமூச்சு விட்டுவிட்டு, அங்கு போடப்பட்டு இருந்த ஒரு கல்மீது அமர்ந்து கொண்டான்.



அதற்கு மேலும் மவுனம் சாதிக்க ஊமைத்துரை விரும்பவில்லை. ''கண்ணாத்தாள் எங்கே?'' என்று வீரத்தேவனைக் கேட்டார்.

''தெரியவில்லை!'' என்று, சாதாரணமாகப் பதில் சொன்னான், அவன்.

அஞ்சுகத்தையும் சுப்பம்மாவையும் கேட்டார். அவர் கள் ராத்திரி பார்த்ததாகச்சொன்னார்கள் ஊமைத்துரை, தாமும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, வேறு பகுதிக்குச் சென்றார். கோட்டை முழுவதிலும், சிந்தனையும் அமைதியும் நிலவின.

## 13. கோட்டையிலே கூட்டம்!
## கொள்கையிலே நாட்டம்!

அனைவரையும் பிரிந்து கண்ணாத்தாள், காட்டு வழியே நடந்தாள்.

எங்கு போகிறோம் என்று, அவளுக்கே தெரியாது.

யாரிடம் அடைக்கலம் தேடிப் போகிறாள் என்பது அவளுக்குப் புரியவில்லை.

நிற்பதற்கு மனம் இல்லாமல் நடந்தாள்.

எங்கேயாவது நின்றால், துன்பமெல்லாம் அருகில் ஓடிவருவது போலிருந்தது.

நடையில் அமைதி கிடைத்தது; அதனால்தான் அவள் நடந்து கொண்டே இருந்தாள்.

அது, சிவகெங்கைக்குச் செல்லும் பாதை. கதிரவன் உதித்து இரண்டு நாழிகைகள் ஆகி இருக்கும். சுமார் இருபது குதிரை வீரர்கள் எதிரே வருவதைக் கண்டாள் கண்ணாத்தாள்.

கால்கள் தள்ளாடி விழுகின்ற நிலைமையில் அவள் இருந்தாள். கையெடுத்துக் கும்பிட்டு, குதிரை வீரர்களை நிற்கச் சொன்னாள்.

குதிரைகள் நின்றன.

ஏதோ கேட்க வாயெடுத்தாள், நாக்கு உள்ளே இழுத்துக்கொண்டது; மயங்கி விழுந்தாள்.

குதிரை வீரர்கள் கீழே இறங்கினார்கள். அவர்களுள் கம்பீரமாக இருந்த ஒருவர், கண்ணாத்தாளைத் தூக்கித் தம் மடியிலே சாய்த்துக்கொண்டார்.

மற்றொருவர், குடுக்கையில் இருந்த தண்ணீரை அவள் முகத்தில் தெளித்தார். கண்ணாத்தாள் மூர்ச்சை தெளிந்தாள்.

"யாரம்மா நீ?" என்று கேட்டார் அந்தக் கம்பீரமான மனிதர்.

"நீங்கள் யார்?" என்று நடுக்கத்தோடு திருப்பிக் கேட்டாள் கண்ணாத்தாள்.

"நாங்கள் சிறுவயலில் இருந்து வருகிறோம். பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றுகொண்டு இருக்கிறோம். நீ எங்கேயம்மா போக வேண்டும்?" – என்று கேட்டார் அவர்.

"எங்கே போவது என்று தெரியாமல்தான் போய்க்கொண்டு இருக்கிறேன்; அநாதை!" என்றாள் கண்ணாத்தாள்.

கம்பீரமான மனிதருக்குப் பக்கத்திலே இருந்த ஒருவர், "அண்ணே! இந்த அம்மா அநாதைங்கிறாங்க. இவங்களையும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கூட்டிக்கிட்டு போவோம், நம்ம வீரத்தேவர் கிட்ட ஒப்படைச்சுடுவோம்" என்றார்.

"வேண்டாம் ஐயா வேண்டாம்!" என்று கத்தினாள் கண்ணாத்தாள்.



"ஏனம்மா, எதற்காக வேண்டாம் என்கிறாய்? வீரத்தேவர் என்றதும், ஏன் இந்தப் பதற்றம்?" என்று கேட்டார் அந்த மனிதர்.

"ஒன்றும் இல்லை. நான் பாஞ்சாலங்குறிச்சியில் இருந்துதான் வருகிறேன்" என்றாள், கண்ணாத்தாள்.

"பாஞ்சாலங்குறிச்சியில் இருந்தா?" அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

"இப்போது நீங்கள் எங்கே போக வேண்டும்?" இந்தக் கேள்வி கண்ணாத்தாளுக்குச் சிக்கலாக இருந்தது.

அவள் எங்கே போக வேண்டும்? அது தெரிந்தால்தான், அவள் முறையாகவே பயணத்தைத் தொடங்கியிருப்பாளே! அவள் பதில் சொல்லாமல் விழித்தாள்.

அவர்களும் தாங்கள் யார் என்பதை அவளிடம் அப்போது சொல்லிக்கொள்ளவில்லை. சின்ன மருதுவும் அவருடைய சிறுவயல் நண்பர்களுந்தான் அவர்கள் என்பது அவளுக்குத் தெரியாது.

சின்ன மருது, அவளைக் கைத்தாங்கலாக அணைத்தபடி, அருகில் இருந்த மண்டபத்தில் கொண்டுவந்து உட்கார வைத்தார்.

அவளைப் பற்றிய விவரங்களை விசாரிப்பதற்கு முன்னால், பாஞ்சாலங்குறிச்சி நிலைமைகளைப் பற்றிக் கேட்டார்.

பாஞ்சையில், கோட்டை கட்டப்படுகிற விவரங்களை உற்சாகத்தோடு கூறினாள் கண்ணாத்தாள். வீரத்தேவனையும், சிங்கத்தேவனையும் பற்றி மிகவும் பெருமையாகப் பேசினாள்: "அவர்கள் இல்லாவிட்டால் ஊமைத்துரையால் எதுவும் செய்ய முடியாது" என்றும் கூறினாள். சின்ன மருதுவும், வீரத்தேவன் சிவகெங்கைக்கு வந்த கதையை அவளுக்குத் தெரிவித்தார்.

அதிகம் பேசிக்கொண்டே இருந்தால், ரகசியங்களை உளறிவிடுவது மனிதர்களின் வழக்கம். கண்ணாத்தாள்

தன் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக உளறத் தொடங்கினாள்.

சின்ன மருதுவும் இனி மறைக்க முடியாது என்கிற கட்டத்துக்கு அவனைக் கொண்டுவந்து நிறுத்தினார். தான் சின்ன மருது என்பதையும் அவளுக்குத்தெரிவித்தார்.

கண்ணாத்தாளுக்கு நம்பிக்கை பிறந்தது. தன் குடும்ப சிக்கலுக்குச் சின்ன மருது பரிகாரம் தேடித் தருவார் என்ற நம்பிக்கையில் முழு நிலைமைகளையும் அவரிடம் தெரிவித்தாள்.

வீரத்தேவனின் கோபத்தைத் தணித்து, சிங்கத்தேலனோடு அவளைச் சேர்த்து வைக்கும் பொறுப்பைத் தாம் மேற்கொண்டார், சின்ன மருது.

''பாஞ்சாலங்குறிச்சிக்கே நீங்கள் வாருங்கள். பத்திரமான ஓர் இடத்தில் உங்களை இருக்க வைக்கிறேன்; நீங்கள் பாஞ்சாலங்குறிச்சியில் இருப்பதையே நான் தெரியாமல் பார்த்துக்கொள்கிறேன். வீரத்தேவனையும் சிங்கத்தேவனையும் தனித்தனியாகச் சந்தித்து, நிலைமையைத் தெளிவுபடுத்தி விடுகிறேன். பிறகு உங்களுக்குள் பிளவு இருக்காது'' என்றார் சின்ன மருது.

அவர் கொடுத்த நம்பிக்கையின் பேரில் அவரோடு புறப்பட்டாள், கண்ணாத்தாள்.

எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சி வந்து சேர்ந்தார்கள்.

பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டையைக் கண்டபோது அவருக்குக் கனவு காண்பது போன்ற மயக்கம் தட்டிற்று. 'இவ்வளவு பெரிய கோட்டையை இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி கட்டி முடித்தார்கள்?' என்று ஆச்சரியப்பட்டார்.

முழு உணர்ச்சியும், உற்சாகமும் கொண்டு ஈடுபடுகிற எந்த மனிதனும், எந்தப்பணியிலும் அற்புதமான பலனைக் காண முடியும்.



'இது நம்மால் ஆகுமா?' என்று சிலர் யோசித்துக் கொண்டு இருக்கிற நேரத்துக்குள், அதைவிடப் பெரிய காரியங்களைச் செயல் வீரர்கள் முடித்து விடுகிறார்கள்.

பரபரப்பான உணர்ச்சி பல நேரங்களில் மனிதனைப் பழுதுபடுத்தி விடுவது உண்மை. ஆனால் சில நேரங்களில் அதில் கிடைக்கும் வெற்றி அற்புதமாக அமைந்து விடுகிறது.

சிறையை உடைத்து, ஊமைத்துரையை வெளியேற்றிய புரட்சித் தொண்டர்கள், திட்டம் போடுகிற வேலையில் ஈடுபடாமல், செயலிலேயே நேரடியாக இறங்கிவிட்டதால் நாழிகைக் கணக்கில் கோட்டையைக் கட்டி முடித்துவிட அவர்களால் முடிந்தது.

சின்ன மருதுவுக்குத் தன் அண்ணன் ஞாபகம் வந்தது. 'நிதானமான அரசியலில்தான், அண்ணன் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்!' என்று எண்ணியபோது, அவருக்கு சிரிப்பு வந்தது. பரபரப்பான அரசியலில் அடிபட்டாலும் சூடுபட்டாலும், உற்சாகம் இருக்கத்தான் இருக்கிறது

கண்ணுக்குத் தெரிந்த அதிசயக்கோட்டை சின்ன மருதுவின் துடிப்பான உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. ஆனால், பாஞ்சாலங்குறிச்சியின் நிலைமை இப்போது வேறு விதமாக இருந்தது. கோட்டை கட்டப்பட்ட செய்தி கம்பெனிக்குப் போய்விட்டது. கம்பெனிப் படைகள் புறப்பட்டு வந்துகொண்டிருக்கும் செய்தி, பாஞ்சைக்கும் வந்துவிட்டது.

அசாதாரணமான ஒரு பரபரப்பு உணர்ச்சி கோட்டைக்குள்ளேயும் வெளியேயும் காணப்பட்டது.

நகருக்குள் நுழைகிற ஒவ்வொருவரையும், பாஞ்சை வீரர்கள் சந்தேகத்தோடு சோதித்துக் கொண்டு இருந்தார்கள்.

திட்டத்தோடு பழக்கப்பட்ட படைகளைவிட, உணர்ச்சியில் ஒன்று சேர்ந்த புரட்சி வீரர்கள், முறையாகச் செயல்பட்டுக்கொண்டு இருந்தார்கள். அவர்களில் சிலர், மாறுவேடத்தில் இருந்த சின்ன மருதுவைச் சோதிக்கவும் தவறவில்லை. அருகில் இருந்த கண்ணாத்தாள், அடையாளம் தெரியாதபடி முக்காடிட்டுக்கொண்டாள்.

சின்னமருதுவை சோதித்தவர்கள் கேள்விமேல் கேள்வி கேட்டார்கள். தான் சின்ன மருது என்பதை வெளிப்படுத்திக்கொள்ள, அவர் விரும்பவில்லை அதனால், 'பொய்மையும் வாய்மையிடத்து' என்ற குறளைத் துணையாகக் கொண்டு, பொய்களை அடுக்கடுக்காகச் சொல்லலானார்.

பொய் எவ்வளவு சாமர்த்தியமாகச் சொல்லப்பட்ட போதிலும், உண்மை போன்றே உறுதி பெறுவது இல்லை. திடீரென்று வீரர்கள் கேள்வி கேட்டதால், தம்மை மறந்த நிலையில், முதலில் வழிப்போக்கன் என்று கூறிய சின்ன மருது மறு கேள்விக்கும் அதையே மாற்றிக்கொள்ள வேண்டியவர் ஆனார். அவரது குழப்பம் மிகுந்த பதிலுரைகள், வீரர்களின் சந்தேகத்தையே மேலும் மேலும் வளர்த்தன. அதனால், அவரைக் கைது செய்ய வேண்டியவர்கள் ஆனார்கள் !

கைது செய்து, ஊமைத்துரையிடந்தானே கொண்டு போவார்கள். அவரிடம் உண்மையைச் சொல்லிவிடலாம் என்றாலும், ஊமைத்துரை, வீரத்தேவன், சிங்கத்தேவன் ஆகியோரின் கண்களுக்குத் தெரியாமல், கண்ணாத்தாளைப் பத்திரப்படுத்த வேண்டுமே! இப்போது, வீரர்கள் கண்ணாத்தாளையும் சேர்த்து அல்லவா கைது செய்கிறார்கள் ? சின்ன மருதுவுக்கு இதுதான் கவலையாக இருந்தது.

இனி தான் யார் என்பதை அவர்களுக்குச் சொன்னாலும் பயன்படாது. இக்கட்டான சூழ்நிலையில், சின்ன மருதுவும், தோழர்களும், கண்ணாத்தாளும்,



பாஞ்சை வீரர்களோடு ஊமைத்துரை இருக்குமிடம் நோக்கிச் சென்றார்கள்.

## 14. கண்ணாத்தாள் நீ பொன்னாத்தாள் !

யாருக்கு முன்னால் யார் மாறுவேடத்தில் நிற்பது ? சலவைக்கல்லில் உட்கார்ந்திருக்கிறார் ஊமைத்துரை. எதிரே கொண்டுபோய் நிறுத்தப்படுகிறார், சின்னமருது சேர்வை.

எடுத்த எடுப்பில் சின்னமருதுவைக் காணவில்லை ஊமைத்துரை. கண்ணாத்தாளையே கண்டார்.

''எங்கே போயிருந்தாய், கண்ணாத்தா ?'' என்றார், திகைப்போடு.

''இங்கேதான்... வெளியே...'' என்று உளறினாள் கண்ணாத்தாள்.

''கொஞ்ச நாளைக்கு நீங்கள் பாஞ்சையை விட்டு வெளியேறக்கூடாது. உன் கதை எதுவானாலும் அதை தீர்த்து வைக்கிறேன். சேர்ந்திருப்பவர்கள்தான் வெற்றி பெறுவார்கள். தனித்தனியே இருப்பவர்கள் பிடிபடத்தான் நேரும்'' என்று சொன்ன ஊமைத்துரை நிமிர்ந்து பார்த்தார். ''யார் நீ ?'' என்றார்.

சின்னப் பாண்டியர் மெதுவாகச் சிரித்தார்.

சிலரது முகத்தையே மூடிவிட்டாலும் கண்களில் இருந்தும் சிரிப்பில் இருந்தும் அடையாளம் தெரிந்து விடும்.

''சின்னப் பாண்டியரா ? என்ன அதிசயம் !'' எழுந்தோடி வந்து கட்டிக்கொண்டார், ஊமைத்துரை.

இருவரும் கல்லில் அமர்ந்தார்கள். கண்ணாத்தாள் அருகிலே நின்றாள். சின்னப் பாண்டியரோடு வந்தவர்கள் கோட்டையின் மறு பகுதிக்குச் சென்றுவிட்டார்கள்.

''நான் எதிர்பார்க்கவில்லை. இன்னும் நீங்கள் கம்பெனிக்கு நண்பர்களாக இருக்கிறீர்கள். எப்படி இப்படி...?'' என்று கேட்டார், ஊமைத்துரை.

''மனது கேட்கிறதா...? வருவது வரட்டுமே. வந்தேன்; வழியில் கண்ணாத்தாளைக் கண்டேன்'' என்றார், சின்னப் பாண்டியர்.

''கண்ணாத்தாள் இன்னும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்'' என்றார், ஊமைத்துரை, எழுந்து நடந்தபடி.

''அதை நீங்கள்தான் செய்ய வேண்டும்'' என்றார் சின்னப் பாண்டியர்.

'எங்கே தன் கதையைச் சொல்லிவிடுவாரோ' என்று கண்ணாத்தாள் பயந்த சமயம், சிங்கத்தேவன் ஒரு பக்கமும், வீரத்தேவன் ஒரு பக்கமுமாக வந்து சேர்ந்தார்கள்.

அவர்களும் கண்ணாத்தாளும் நின்ற நிலை, மூன்று அந்நியர்கள் நிற்பது போலவே இருந்தது.

''நீ என்ன செய்ய விரும்புகிறாய்?'' என்று வீரத்தேவனைக் கேட்டார் ஊமைத்துரை.

''என் தங்கையைத் தூக்கிச் சென்றவனைப் பிடித்து, அவன் ரத்தத்தால் என் பாதங்களைக் கழுவிக் கொள்ள விரும்புகிறேன்'' என்றான், வீரத்தேவன்.

இப்போது சின்னப் பாண்டியர் சிரித்தபடி, ''நீ என்ன விரும்புகிறாய்?'' என்று கேட்டார், சிங்கத்தேவனைப் பார்த்து.

''என் எதிரிகளின் ரத்தத்தில் இரண்டு நாள்கள் குளிக்க விரும்புகிறேன்'' என்றான், சிங்கத்தேவன்.

''நல்லது. இவையெல்லாம் வீரர்கள் செய்யக் கூடிய காரியங்கள்தான். இப்போது நடக்கக்கூடிய காரியங்



களைக் கொஞ்சம் பேசுவோம். நீ என்ன விரும்புகிறாய்?'' என்று கேட்டார், சின்னப் பாண்டியர் கண்ணாத்தாளைப் பார்த்து.

''என் கணவர் உயிரைக் காப்பாற்றித் தருவதாக என் அண்ணன் எனக்குச் சத்தியம் செய்து தர வேண்டும்'' என்றாள், கண்ணாத்தாள்.

''ஒரு உத்தமப் பெண்ணின் லட்சியம் இதுதான்'' என்றார், ஊமைத்துரை கம்பீரமாக.

''என் தங்கையைத் தூக்கிச் சென்றவன், என்னைத் துயரத்தில் ஆழ்த்தியவன்— அவனைக் கொல்லத்தான் பிறந்திருக்கிறேனே தவிர, காப்பாற்ற அல்ல. என்னுடைய ரத்தம் சுத்தமான மறவனின் ரத்தம்'' என்று முஷ்டியை ஓங்கிக் காட்டினான், வீரத்தேவன்.

''சபாஷ்! அதுதான் ஒரு நல்ல மறவனுக்கு அழகு!'' என்று பாராட்டினான் சிங்கத்தேவன்.

''இருவரும் வீரர்கள்! ஒருவரை ஒருவர் பாராட்டத் தானே செய்வார்கள்'' என்று சிரித்தார், சின்னப் பாண்டியர்.

பிறகு சிறிது நேர மவுனத்தைச் சின்னப் பாண்டியரே கலைத்தார். மெதுவாக எழுந்து, வீரத்தேவன் அருகில் வந்து, ''வீரத்தேவா, ஆயிரந்தான் இருந்தாலும் மறவர் குல வழக்கப்படி, உன் தங்கையைத் தொட்டவன் அவள் கணவனாகிவிட்டான். அவனது ரத்தத்தை நீ விரும்பினால் உன் தங்கையின் மாங்கல்யத்தை இழக்கவேண்டி வரும். நடந்துபோன காரியங்களில் சில மன்னிக்கக் கூடியவையே. ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகும் அவள், தன் கணவனிடம் எவ்வளவு பக்தி செலுத்துகிறாள் என்பதனை, அவள் வார்த்தைகளே காட்டுகின்றன. அவள் கேட்கும் உத்திரவாதத்தை நீ கொடுத்துவிடு'' என்றார், சின்னப் பாண்டியர்.

"அதைவிட நான் மரணம் அடைந்துவிடுவது நல்லது" என்றான், வீரத்தேவன்.

"மரணம் வீரனின் மடியிலேயே இருக்கிறது. எப்போது அவன் விரும்புகிறானோ, அப்போதே அவன் பெற்றுவிடுகிறான். இனி அது வரும்போது வரட்டும். உன் தங்கையின் மாங்கல்யத்தைக் காப்பாற்று" என்றார் ஊமைத்துரை.

ஒரு பக்கம் சின்னப் பாண்டியரும், ஒரு பக்கம் ஊமைத்துரையும் நெருக்க, நெருக்க, வீரத்தேவனின் தலை சுழன்றது.

அவன் ரகசியங்களை அறிந்தவனா, அறியாதவனா? எதையும் அவன் காட்டிக்கொள்ளவில்லை. கண்ணாத்தாளின் அருகில் வந்தான்.

அவன் கண்களுக்குக் கண்ணாத்தாள் தெரியவில்லை. அவள் கழுத்தில் ஒரு மஞ்சள் நூலில் இரண்டு அரக்கு மஞ்சளுக்கு நடுவிலே மின்னிக் கொண்டிருந்த தாலிப் பொட்டு தெரிந்தது. சற்றே பருத்திருந்த அவளது வயிற்றுக்குள் இருந்து ஒரு குழந்தை, 'அம்மான்' என்று அழைப்பது போல் தோன்றிற்று.

"இன்னும் என்ன சலனம்?" என்றார் ஊமைத்துரை.

"நான் யார் கண்களிலும் படாமல் கண்ணாத்தாளை காப்பாற்ற¦நினைத்தேன். அதன் மூலம் நிலைமையைச் சீர் செய்துவிடலாம் என்று நம்பினேன். ஆனால், காளையார் கோவில் ஐயனின் அருளால் நீங்கள் சந்தித்துவிட்டீர்கள். அவள் கேட்ட வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு ஒற்றுமையாகப் போய்விடு வீரத்தேவா. கோட்டை எந்த நேரமும் தாக்கப்படலாம்; தாமதம் செய்யாதே!" என்றார் சின்ன பாண்டியர்.

தன்னைத் தேற்றிக்கொண்ட வீரத்தேவன், கண்ணாத்தாளிடம், "சரி, நல்லது. உன் கணவனை நான் காப்பாற்றுகிறேன். அவன் யார் என்று பெரியவர்கள்



முன்னிலையில் சொல்லிவிடு" என்று அவனை இக்கட்டான நிலையில் கொண்டுவந்து நிறுத்தினான், வீரத்தேவன்.

அவன் ஏதோ ரகசியம் அறிந்தவன் போலும், அது வெடிக்கட்டுமே என்பது போலும் காணப்பட்டான்.

"காலம் வரும்போது சொல்லத்தானே போகிறேன்" என்றாள் கண்ணாத்தாள்.

"காலம் வந்துவிட்டது. இனி அடுத்து வரும் காலம், மரணகாலமாகவும் இருக்கலாம். இப்போதே சொல்லிவிடு" என்றான், வீரத்தேவன்.

"இனி என்ன ஆத்தா. அவன்தான் சத்தியம் செய்துவிட்டானே. தைரியமாகச் சொல்!" என்று உற்சாகப்படுத்தினார், சின்னப் பாண்டியர்.

"என் கணவர் எனக்கு இப்போது குங்குமம் அணிவிப்பார்" என்றபடி மடியில் வெற்றிலையில் கட்டி வைத்திருந்த காளிகோவில் குங்குமத்தை எடுத்துக்கொண்டு சிங்கத்தேவனிடம் நெருங்கினாள், கண்ணாத்தாள்.

அதை அவன் முன்னால் நீட்டினாள்.

ஆத்திரம் தாங்காத வீரத்தேவன், "எனக்கு முன்பே தெரியுமடா" என்றபடி, சிங்கத்தேவன்மீது பாய்ந்து, அவன் கழுத்தைப் பிடித்தான்.

இருவரும் கொஞ்ச நேரம் துவந்த யுத்தம் செய்தார்கள்.

அதைத் தடுப்பதற்கு எவ்வளவோ சத்தமிட்டார்கள் ஊமைத்துரையும், சின்னப் பாண்டியரும்.

அந்த மல் யுத்தத்தின்போது ஓர் ஓலை நறுக்கு சிங்கத்தேவன் மடியில் இருந்து கீழே விழுந்தது.

பளிச்சென்று அதைத் தாவி எடுத்தார், சின்னப் பாண்டியர்.

அதைக் கையோடு வாங்கிப் பிரித்துப் பார்த்தார். ஊமைத்துரை.

அது எட்டயபுரத்து அரசர் சிங்கத்தேவனுக்கு எழுதியது. அந்த ஓலை நறுக்கில். அதுவரை அவன் கம்பெனிக்குச் செய்த உதவிகளைப் பாராட்டிவிட்டு. 'எதிர்காலத்தில் பாஞ்சைப் பகுதிக்கு அவனே அரசன்'' என்றும் குறிப்பிட்டு இருந்தார், எட்டயபுர அரசர்.

படைகள் புறப்பட்டுவிட்ட செய்தியும் அதில் இருந்தது.

துடிதுடித்தார், ஊமைத்துரை; தவிதவித்தார், சின்னப் பாண்டியர்.

கண்ணாத்தாளுக்கு வீரத்தேவன் கொடுத்த வாக்கில் தாங்களும் சம்பந்தப்பட்டுவிட்டது போல், ஆத்திரமுற்று, ''அட பாவி! உன்னைக் காப்பாற்ற நாங்கள் இவ்வளவு பாடுபட்டோம். எங்களைக் காட்டிக்கொடுக்க நீ எவ்வளவு பாடுபட்டு இருக்கிறாய்? வந்தவன் போனவனுக்கு எல்லாம் நீங்கள்தானா வாரிசு? உன்னைக் கட்டிப் போட அல்ல, வெட்டிப்போடத் துடிக்கிறோம். கண்ணெதிரே நிற்கும் கண்ணாத்தாளுக்காகக் கலங்குகிறோம்'' என்றபடி அவன் அருகில் வந்து அவன் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்தார், சின்னப் பாண்டியர்.

செய்வது அறியாது நின்றிருந்தார், ஊமைத்துரை.

கையை மடித்து மடித்து, ஒரு கையைக் குத்திக் கொண்டு, ''ஒரு நாழிகைக்கு முன்பு இது தெரியாமல் போய்விட்டதே!'' என்று அழுதான் வீரத்தேவன்.

''கண்ணாத்தா, நல்ல கணவனைத்தான் நீ அடைந்தாய். அவன் என் மானத்தை வாங்கினான்; நம் குடும்ப மானத்தையும் வாங்கினான்; இன்று நாட்டின் மானத்தையும் வாங்கிவிட்டான். இப்போது உனக்குத் திருப்திதானே? கை தொட்டவனே கணவன் என்ற குலமகள் குணத்தை நீ நிரூபிக்க முயன்றாய். அதன் விளைவு, உன் கணவனைத் தவிர எல்லோரையும் அழிக்கப்போகிறது. நாங்கள் சாகிறோம், ஆத்தா, சாகிறோம். கும்பினியின் பீரங்கிக்கு மார்பைக் காட்டுவது எங்களுக்கு ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. ஆனால், இந்த நாடு எதிரிகளாலே தோற்றது இல்லை; துரோகிகளால்தான் தோற்றது என்ற வாலாறு தொடர்ந்து வருகிறதே. அதற்கு முடிவே கிடையாதா? இனி எந்தவொரு பத்தினிப் பெண்ணுக்கும் இப்படிப்பட்ட துரோகி வாய்க்க வேண்டாம் என்று ஜக்கம்மாவைப் பிரார்த்திக்கிறேன். உன் கணவனை நாங்கள் விட்டுவிடுகிறோம். அவனை அழைத்துக்கொண்டு நீயும் எதிரிகளோடு போய்ச் சேர்ந்து கொள். புறப்படு தாயே, புறப்படு'' என்று குமுறிக் குமுறி அழுதான், வீரத்தேவன்.

''வீரத்தேவா, இந்த ஒரு துரோகியினால் இந்தக் கோட்டை ஒன்றும் ஆகிவிடாது. அவனை அனுப்பி விடு!'' என்றார், ஊமைத்துரை.

''நாளைக்குச் சிவகெங்கையும் அழியப் போகிறதே,'' என்று கதறினார், சின்னப் பாண்டியர்.

''அம்மா!'' என்று அலறினாள், கண்ணாத்தாள்.

பளிச்சென்று ஓடிப்போய் தன் கணவனின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு கோட்டைக்குள்ளாகவே ஓடினாள்.

ஓரிடத்திற்கு வந்ததும் அவனைப் படார் என்று கீழே தள்ளினாள்.

அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த பீரங்கி வண்டியைத் திருப்பினாள்.

ஒரு வீரனின் கையில் இருந்த நெருப்பைப் பறித்து அதில் வைத்தாள்.

பீரங்கி வெடித்தது.

கண் இமைக்கும் நேரத்தில் சிங்கத்தேவனின் உடல் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்டது.

சின்னப் பாண்டியர், ஊமைத்துரை, வீரத்தேவன் மூவரும் திகைத்து நிற்கும்போது, அந்த மறவர் குலமங்கை தன் இரண்டு கைகளாலும் கணவன் உடலைத் தூக்கிக் கொண்டு, வெளியேறினாள்.

ஒரு புரவியின்மீது அதைப் போட்டபடி ஏறி உட்கார்ந்தாள்.

நெற்றியில் இருந்த குங்குமத்தை அழித்தாள்.

புரவியை ஜக்கம்மா கோவிலுக்கு ஓட்டினாள்.

தன் மாங்கல்யத்தைக் கழற்றி அங்கிருந்த உண்டியலில் போட்டாள்.

புரவி, சிவகெங்கையை நோக்கி நடந்தது.

பின்னால் பீரங்கிகள் வெடிக்கும் சத்தம் கேட்டது.

ஆம், வெள்ளைப்படை பாஞ்சைக் கோட்டையைத் தாக்கத் தொடங்கிவிட்டது.

அவளுக்குப் பின்னால் ஒரு புரவியின் காலடி ஓசை கேட்டது.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

சின்னப் பாண்டிர் அதில் வந்துகொண்டு இருந்தார்.

புரவிகளின் குளம்படி ஓசையைத் தவிர வேறு ஒலி இல்லாமல் அவர்கள் சிவகெங்கையை வந்து அடைந் தார்கள்.

சிவகெங்கை எல்லை அரண்மனைக்கு எதிரே சிதை அடுக்கப்பட்டது.

தன் கணவனோடு கண்ணாத்தாள் உடன்கட்டை ஏறுவதைக் கண்ணீரோடு கவனித்துக்கொண்டு இருந் தார்கள், மருது பாண்டியர்கள்.



அந்தத் தீ ஒரு நாள் முழுக்க எரிந்து அடங்கிய போது பாஞ்சாலங்குறிச்சியை வெள்ளைக்காரர்கள் கைப்பற்றி விட்ட செய்தி வந்தது.

வீரத்தேவன் மடிந்துபோன செய்தியும் சேர்ந்தே வந்தது.

''ஊமையன் கோட்டை விழுந்தாலும், உண்மையின் கோட்டை விழாது'' என்று முணுமுணுத்தபடி, தன் குத்துவாளை ஒரு வேலமரத்தின் மீது பாய்ச்சினார், சின்ன மருது.

அவரை அணைத்தபடி அரண்மனைக்குள் நடந்தார் பெரிய மருது.

அப்போது அங்கே நின்ற கறுத்தான், ''கதை முடிய வில்லை, தொடரும்'' என்றான்.

முடிந்தது

27630
4422707